பதிவு எண் 2041

KUDI ARASU.

தனிப் பிரதி விலை { உள் நாடு 1 அணா / வெளிநாடு 1½ அணா

# குடி அரசு

வருட சந்தா தபால் உள்பட ... ரூ 3—0
6 மாத சந்தா ,, ... ரூ 1-12
வெளிநாட்டிற்கு ,, ... ரூ 4—0

வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வே. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 4 | ஈரோடு, விபவ ஞு ஆவணி மீ 25 உ. (9—9—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 30

இப்பொழுதுதான் வந்தது!! புதிய சரக்குகள்!!

—

உறுதியான ஸ்விண்டு கறுப்பு நூல்

பெல்ட்டிங்குகள்.

கீழ்கண்ட சரசமான விலைக்கு விற்கப்படும்.

3/16 இன்சு கனம் உள்ளது :—

| | | | |
|---|---|---|---|
| 2 இன்சு அகலம் | ரூ. | 0—7—0 | ஓர் அடி. |
| 3 ,, | ,, | 0—10—6 | ,, |
| 4 ,, | ,, | 0—14—0 | ,, |

1/4 இன்சு கனம் உள்ளது :—

| | | | |
|---|---|---|---|
| 4 இன்சு அகலம் | ரூ. | 1—2—6 | ஓர் அடி. |
| 5 ,, | ,, | 1—7—6 | ,, |
| 6 ,, | ,, | 1—12—0 | ,, |

26 கேஜ் கலாய் இரும்புத்தகடுகள்
அடியிற்கண்ட விலைக்கு விற்கப்படும் :—

| | | | | |
|---|---|---|---|---|
| 6 அடி நீளம் | 33 இன்சு அகலம் | ரூ. | 2—4—0 | ஒரு தகடு. |
| 7 ,, | ,, | ,, | 2—8—0 | ,, |
| 8 ,, | ,, | ,, | 3—0—0 | ,, |
| 9 ,, | ,, | ,, | 3—6—0 | ,, |
| 10 ,, | ,, | ,, | 3—12—0 | ,, |

MASSEY & Co. LTD.
ENGINEERS

மாஸி அண்டு கம்பேனி (லிமிடெட்)
திருச்சிரோடு, ரெட்பீல்ட்ஸ் போஸ்ட், கோயமுத்தூர்.

## போட்டோ ஆல்பம்.




நேயர்களே! இந்த ஆல்பத்தில் பன்னிரண்டு விதமான ப்ரெஞ்சு லேடிகளின் படுக்கையறைப் போட்டோக்கள் பார்க்க வெகு சுந்தரமாக வைக்கப்பெற்றிருக்கின்றன. பாரிஸ் மாதரின் லீலா விநோதமும் ஒப்புயர் வற்ற ரூபலாவண்யமும் பலதினுசு சாயல்களில் கண்டு ஆனந்திக்கலாம். ஒரு ஆல்பம் தருவித்தவர் உடனே திரும்ப ஆறு ஆல்பங்கள் அனுப்புங்கள் எனக் கடிதம் எழுதுகிறார்கள். நீங்கள் உடனே முந்துங்கள். விலை ரூ. 2-12-0

தி. கிருஷ்ணா ஏஜன்சி, தபால் பெட்டி 119 மதராஸ்.

## "CATARACT SOL"

The best and safest Medicine,
*For CATARACT in the eye.*

Scientifically prepared under medical supervision. Arrests the growth of the disease immediately & disolves the growth by long and continuous application.

Price one oz. bottle Rs 2—8—0,
*(for one month's use)*

The above medicine can be had at,
Dr. V. G. PANIKER'S Dispensary,
ERODE. P. O. (*S. India.*)

முன் விலை ரூ. 14. இப்பொழுது ரூ 7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்
கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்தஷேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல்இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.

## மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஞு ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுக்கப்படும். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார்
இஞ்சினியரிங்ஒர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

சுயமரியாதை பெற்றால்
சுயராஜ்யம் பெறலாம்.

## "குடி அரசு"

அரசியலின் பேராலும், மதத்தின் பேரா லும், பார்ப்பனர்களும், வயிற்றுப் பிழைப் புக்காரர்களும் பாமரமக்களை ஏமாற்றி வஞ் சிப்பதைக் குறித்தும், "இந்து" மத ஆபாச ங்களாகிய வேதம், சாஸ்திரம், புராணம் மு தலியவைகளின் பேரால் பார்ப்பனர்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காக எழுதி வைத்துக்கொண்டிருக்கும் பித்தலாட்டங்க ளைக் குறித்தும் அஞ்சாது தைரியமாய் உண் மையை வெளியிட்டு பாமர மக்களைத் தட்டி எழுப்பி எல்லோரும் சுயமரியாதையையும், சமத்துவத்தையும், சுதந்திரத்தையும் அடை யச் செய்யும் தமிழ் வாரப் பத்திரிகை 'குடி அரசு' ஒன்றே.

16 முதல் 24 பக்கங்கள்வரை கொண்டது.
7000 சந்தாதாரர்களையுடையது.
50000-க்கு மேற்பட்ட
வாசகர்களை உடையது.

**வருட சந்தா ரூ. 3 தான்.**

'ரிவோல்ட்' 'ரிவோல்ட்'

## 'REVOLT'

—)o(—

"குடி அரசின் கொள்கையைக் கொண்டு கூடிய சீக்கிரம் வாரம் ஒருமுறை வெளியா கும் ஓர் ஆங்கிலப் பத்திரிகை.

வருட சந்தா ரூ. 3 தான்.

ஈ. வெ. ராமசாமி நாயக்கர்.
ஆசிரியர்.- "குடி அரசு" & "ரிவோல்ட்,"
ஈரோடு.

## 'திராவிடன்'

தினப்பதிப்பு சந்தா விபரம்.

| | |
|---|---|
| மாதமொன்றுக்கு | ரூ. 1—6—0 |
| சென்னையிலும் ஏஜண்டு உள்ள இடங்களிலும் மாதமொன்றுக்கு | ,, 1—0—0 |
| தனிப்பிரதி | 0—0—6 |
| மலாய் நாட்டுக்கு வருஷம் ஒன்றுக்கு | ,,18—0—0 |

மானேஜர்,
"திராவிடன்" மவுண்ட்ரோட்,
மதராஸ்.



அநேக காக்ஷிகளில் பொன், வெள்ளி மெடல் பெற்ற

### விதைகள் செடிகள்.

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 2 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள், கொய்பா, மாதுளை, எலுமிச்சை, ஆர ஞ்சி. கேட்லாக் இனாம். இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதைகள்- 20 சாம்பிள் பாக்கெட் ரூ 2 10 சாம்பிள் பாக்கெட் ரூ 1-4-0. நாட்டு காய்கறி ரூ 2-8-0. ச. கோ. இ. சாதர்மீரா சாயபு, ஹெட்ர்சரி தோட்டம், சேலம்.



தமிழ் நாடெங்கும் புகழ்வாய்ந்த எங்கள் நிகரிலாத

'ஆனந்தகுணபோதினி"

ஆடிமாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளையொப்ப நவீன நாகரீக உருவுடன்

## அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக

3-வது ஆண்டு) வெளிவருகின்றது (3-வது ஆண்டு

பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S G இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனியில் இதுபோன்ற புதன்மையான மாத சஞ்சிகை வேறி ல்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில்தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜநவிநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விக டப் பொக்கிஷம், இதுவே அநுபவஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோத கம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே அநங்க தீபம் என்று எண்ணலாம். பதி னாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகாமாயிருப்பது எது? எங் கள் "அமிர்த குணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவா கக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகைதமிழ் நாட்டில் இது ஒன்றேதான்: இதற்கு சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தா ரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ, 1-4-0. மாதிரி காப்பி இனாம்.

தி, இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, சென்னை.



நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
இதை—சாதனை செய்.

### சுவாசகாச ரோகத்திற்கு அபூர்வ சிகிச்சை

## ஆஸ்த்மா பௌடர்

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீத ளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, காரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும் சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், விஷஜுரம், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் இந்த ஆஸ்த மா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகா ரம் உட்கொள்ளும்படியாயும், இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும் படியாயும் செய்கிறது. ஒரு முறைபரீக்ஷித்து பார்ப்பதவசியம்.

48 நாள் ஒருமண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1-க்கு விலை ரூ. 1—4—0, தபால் செலவு வேறு. வியாபாரிகளுக்கு ஸ்பெஷல் ரேட். ஒவ்வொரு ஜில்லாவிலும் தாலூ காவிலும் சோல் ஏஜண்டுகள் தேவை.

புரோப்ரைட்டர், பூ மா. சொக்கலிங்க முதலியார், திருநாவுக்கரசு வைத்தியசாலை அக்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். (S. I.)



## ஞான திருஷ்டி.

இப்புத்தகத்தில் இறந்தவர்களுடன் பேசுதல், காணாமல் போனதைக் கண்டெடுத்தல், இருந் தவிடமிருந்தே தூர தேசங்களைப் பார்த்தல், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறிதல் முத லியன எழுதப்பட்டுள்ளன. "ஞான திருஷ்டிக் கண்ணாடி" என்னும் உபயோகிக்கும் கருவியுடன் விலை ரூ. 1—8—0. தபால் கூலி பிரத்தியேகம். பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும். ஆரியன் லைபிக் இன்ஸ்டிட்யூட், சௌகார்பேட்டை, மதராஸ்.


## கடவுளை வணங்க
## பார்ப்பனத் தரகர் வேண்டுமோ?

# நான் சொன்னது குற்றமல்ல.

[கைவல்ய சாமியார் எழுதுவது]

நான் மாணிக்கவாசகரையும் சுந்தரமூர்த்திகளையும் பழித்துப் பேசி அவர்களுக்கு அருள்செய்த சிவபெருமானையும் இகழ்ந்து "குடி அரசில்" எழுதியிருப்பதாக சைவ சங்கசார்பாக சில பண்டிதர்களின் ஆலோசனைப்படி சென்னையினின்று எழுதப்பட்ட ஒரு பிரசுரத்தில் காணப்படுகிறது. மாணிக்கவாசகரையும் சுந்தரமூர்த்திகளையும் சிவபக்தர்களல்லவென்றாவது, சைவத்தின் ஆச்சாரிகளல்லவென்றாவது, சிவபதத்தை அடைந்தவர்களல்லவென்றாவது நான் சொல்ல வந்தவனல்ல. அவர்கள் கதைகள் எழுதப்பட்டிருக்கிற மாதிரியை நம் மாணாக்கர்களுக்கு உபதேசம் செய்தால் ஒழுக்கமும் கடமையும் அவர்களுக்கு உபயோகப்படாதென்றே "குடி அரசில்" எழுதினேன். அறிவால் உயர்ந்த பண்டிதர்கள் "எல்லாம் கடவுள் மயம், எதுவும் சிவன் செயல்" என்று நினைப்பதற்கும், நினைத்து எல்லாம் கடவுளுக்கே ஒப்புவிப்பதற்கும் உபயோகப்படலாம். அல்லது அழகாக அலங்கரித்து பிரசங்கம் செய்ய உபயோகப்படலாம், அல்லது அமுதமுது பொங்கல் சோற்றுக்கு எங்காவது ஒரு இடம் கிடைப்பதற்கும் உபயோகப்படலாம். மாணவர்கட்கு அவை எதற்கு உபயோகப்படும்? மாணவர்களின் மண்டையில் அக்கதைகள் பதிந்து அப் பெரியவர்களின் சரித்திரம் போல அவர்கள் வாழ்க்கையை உபயோகப்படுத்தினால் அவர்கள் என்ன பெருமையை அடைவார்கள்? கோயமுத்தூர் சைவப் பண்டிதர் பிரம ஞான மண்டபத்தில் சொன்னதுபோல "உயிரைப் பொருத்தது உடலைப் பொருத்தது என இரண்டுண்டு. அதில் உயிரைப் பொருத்ததே சிலாக்கியமெனப் பெரியவர்களும் மதங்களும் சொல்லுகிறது" என்று வாதித்தாலும் பண்டிதர்களின் மருமகன் வேறு பெண்ணை மோகித்து மறு கலியாணம் செய்துகொண்டால் மகளின் கவலையும் மருமகனின் பேரிலுள்ள கோபமும் பெரியவர்களின் கதையால் உயிருக்கு ஒப்படைத்தாலும் மனக்கவலை நீங்காது. முருங்கைக்காய் வாங்கிவரப்போன சமயல்காரன் கடவுளுக்கு கற்பூரம் வாங்கிக் கொழுத்திவிட்டு வாழைக்காய் கூட வாங்காமல் வந்தால் மாணிக்கவாசகரின் சரித்திரம் படித்த பண்டிதர்கள்கூட உடலின் போஷணையே உயிர்க்குதவி என்னும் எட்டைத் திருப்பாமலிருக்கமாட்டார்கள். உடலை வெறுத்து உயிரையே பெரிதென வளர்க்க யாரும் பார்க்காமல் ஆகாரமுண்ணும் பண்டிதர்களின் மனம் சைவத்தில் எவ்வளவு தூரம் சார்ந்திருக்கிறதென்பதை பின்னால் கவனிப்போம்.

முன் நான் எழுதின விஷயத்திலுள்ளதையே இந்த வியாசத்திலும் சிலதைக் குறிப்பிடுகிறேன். புத்தி விசாரித்தறியும் என்னுந் தன்மையால் புத்திக்கு விசேடம் சொல்லப்படுகிறது. அப்புத்தியால் ஆலோசித்துப் பாருங்கள். மாணவர்களுக்கு ஒழுக்கம் கற்பிக்கவேண்டுமென்பதில் யாருக்கும் ஆட்சேபனையில்லை. கற்பித்துக் கொடுக்கப்பட்ட அவ்வொழுக்கங்கள் நிஷ்பிரயோஜனமாகப் போவதின் முக்கிய காரணமென்ன? நாம் நம் கதைகளால் சம்பாதிக்கும் அறிவினால் நமது ஒழுக்கம் செழிப்படையவில்லை. எப்போதும் உயர்ந்த மதிக்குப் புறத்தே அக் கதைகளிருப்பதால் நமது ஒழுக்கம் நம் அறிவு முதிர்ச்சியுடன் தொடர்ந்து வளர இடமில்லாமல் போகிறது. இந்த ஸ்திதியில் விளைந்த பயன் யாதென்றாலோ, நாம் உயர்ந்த இலக்கிய இலக்கணம் கற்றோமேயல்லாமல் உயர்ந்த யோசனைகள் பண்ணவில்லை. பழைய கதைகளே வந்து புக ஏதுவாக்கி அதில் சிலவற்றைத் தள்ளியும் சிலவற்றை மொழி பெயர்த்தும் பரிதாபத்துக்கிடமாகப் பல புஸ்தகங்களில் சோழைக் குப்பைகளை நிறைத்தும் எழுதிவைக்கிறோம். இப்படி இருந்தும் நம்முடைய பாஷை கொஞ்சம் அபிவிருத்தி யடைந்திருக்கிறதென்றாலும் இன்னும் அநேக குறைகள் இருந்துகொண்டேயிருக்கின்றன. அளவில்லாமல் தின்னும் மெலிந்த அஜீரண நோயாளிபோல் நம் பண்டிதத் திறமையெல்லாம் நேரே ஜீரணமாக்கிக் கொள்ளப்படவில்லை. நாம் விழுங்குவது நமது பிராணனைப் பலப்படுத்தவில்லை. அவற்றை நாம் நாவினால் ருசிபார்ப்பதில்லை. தொண்டைக்குழி வழியே சரிக்கிறோம். வயிற்றிலே பெரிய சுமையே யொழிய உடம்புக்கு போஷணையில்லை.

இந்தவிதமான பண்டிதத் திறமையோடிருக்கும் பல பண்டிதர்களில் சில பண்டிதர்கள் இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் தமிழ்ப் பண்டிதர்களாகவிருக்கிறார்கள். தங்களுக்கு ஏற்பட்ட வகுப்புப் பையன்களுக்கு பாடம் கற்பிக்கப் போனால் பையன்கள் பரிகாசம் செய்கிறார்கள்; பலர் பல கேள்வி கேட்கிறார்கள், பண்டிதர் மேலும் கீழும் விழிப்பதாக அவமதிக்கிறார்கள்; சத்தம் போடுகிறார்கள். சில சமயம் சண்டையும் போட்டு ஓட்டியும் விடுகிறார்கள், எதனால்? மாணாக்கர்களின் ஒழுக்கக் குறைவால் என்று சொல்லலாமென்றால் அவை எல்லா உபாத்தியாயர்களிடமும் காணவேண்டுமே. அனுபோகம் அப்படி யில்லையே! இப்பண்டிதர்களின் மனக் குறுகலால் இவர்கள் சொல்லும் கதையை காரண காரியத்தோடு சொல்ல முடியவில்லை. இவர்கள் படித்த படிப்பும் புத்தியும் மாணவர்களின் விருத்தி யறிவிற்கு போதவில்லை என்று சொன்னாலும் பொருந்தும்.

அன்னிய நாட்டிலிருந்து வரும் அறிவாளிகளும், மேனாடுசுற்றிவரும் சமபுத்தியுடைய நம்நாட்டு அறிவாளிகளும், சீமைக்குப்போய்ச் சமீபமாகவந்த ஸ்ரீ சண்முகம் செட்டியார் அவர்களும் மாணவர்கட்குச் செய்யும் உபதேசமும், மாணவர்கள் படிக்கும் படிப்பும், புத்தியில் ஆலோசனை சக்தியை அதிகமுண்டு பண்ணிக் கொண்டு வருகிறது. அவர்களுடைய பிரசங்கங்களைக் கேட்க விரைந்தோடிப் போகிறார்கள்; பக்திசிரத்தையோடுகேட்கிறார்கள். கேட்டதைப்பற்றி தங்களுக்குள்ளாகவே தர்க்கம் பண்ணிப் பார்க்கிறார்கள். மாணாக்கர்களைப் பார்த்து அவர்களும் "இளைஞர்களே! உங்களாலேயே நம் தேசம் முன்னுக்கு வரவேண்டும். எல்லா தேசங்களும் இளைஞர்களாலேயே முன்னுக்குக் கொண்டுவரப் பட்டிருக்கின்றன. நமக்குள்ளே மதச்சண்டை, அற்பப் பகை, அற்பப் பொறாமைக்கெல்லாம் இதுவன்று காலம். இருட்டு மூலைக்குள் உட்கார்ந்துகொண்டு எங்கள் சாமி பெரிது உங்கள் ஜாதி உயர்ந்தது என்று பேசி நம்மை நாமே மகான்களெனப் பாவனை செய்வதில் பயனில்லை. உலகத்தார்களின் சபைகளில் நம்முடைய கர்வம் சிறுமைப்படுகிறது. பல நூற்றாண்டுகளாக நாம் செய்த ஜாதிக்கொடுமையும் மூட நம்பிக்கையின் கொடுங்கோல் அரசும் நமக்குப் பாவப் பெருஞ்சுமையாய் நமது ஆண்மையை நசுக்கி நம் அறிவை மயக்கிவிட்டது. அவற்றின் பெருஞ்சுமையைத் தள்ளியெறிய ஒரு பெரும் முயற்சி செய்யக் காலம் இதுவேயாம். நாம் முன்னே போக வொட்டாமல் இந்தச்சுமை பின்னே இழுக்கிறது. நம்முடைய புதிய இளமைத் தொழிலை அவை மூடுபனிபோல மறைக்கின்றன. நிஷ்பிரயோஜனமென்ற அவமானத்திலிருந்து தப்ப விரும்பினால் இந்தச் சுமையைக் கூசாமல் வீசி எறிந்து விடவேண்டும். மனுஷிய ஜாதி எப்பொழுதும் முன்னே நோக்கிச் செல்லுகின்றது. இந்த மனுஷிய ஜாதியுடன் நாம் சம நடையாகச் செல்ல விரும்பினால் இந்த முதுகுச் சுமையைக் கூச்சப்படாமல் வீசி எறிந்துவிடவேண்டும்" என்று பிரசங்கிக்க அப்பிரசங்கத்தைக் கேட்டு நல்லுயிர் உடைய மாணாக்கர் மனமெல்லாம் சத்தியமான ஞாயத்தின் வழிக்குச் செல்ல ஆசை கொள்ளுகையில் மாணிக்கவாசகர் கதையும் சுந்தரமூர்த்தி கதையும் அவர்களுக்கு என்ன திருப்தியைக் கொடுக்கும்? அதனால் அவர்கள் என்ன ஒழுக்கமும் கடமையும் கற்றுக் கொள்ளுவார்கள்?

மாணிக்கவாசகர் பாண்டிய ராஜாவின் மந்திரி. ராஜ்யத்தின் பொறுப்பு மந்திரியைச் சேர்ந்தது. ராஜ்யத்தைக் காப்பது சேனை. அந்தக் காலத்தில் சேனைக்கு முக்கியம் குதிரை. குதிரை வாங்கும் பணத்திற்கு கோவில் கட்டிவிட்டால் அவர் எப்படி மந்திரியின் கடமையைச் செய்தவர் ஆவார்? தன் கடமையைச் சரியாகச் செய்யாத மந்திரிகளினால் தான் தமிழ் நாடு வீழ்ச்சியும் அடைந்து வீரமும் கெட்டு, அனேக காலமாக அன்னியருடைய ஆதிக்கத்திற்குள்ளிருக்கிறது என்று சொல்லுவதில் தப்பென்ன? மாணிக்கவாசகரைக் காப்பாற்றவந்த சிவபெருமான் நரியைப் பரியாக்கிப் பரியை நரியாக்கி, வைகையைப் பெருகவைத்து, அதையடைக்க பிட்டுண்டு பாண்டியனால் பிரம்படியும் பட்டார் என்னும் கதை பையன்களுக்கு புத்தியோ பக்தியோ கொடுத்து விடுமா? அந்தச் சிவபெருமான் பாண்டிய வம்சத்தைக் காப்பாற்றி தமிழ் நாட்டை நிலை நிறுத்தியிருக்கிறாரா? மாணிக்கவாசகர் சிவபெருமானின் அருள் பெற்றவர் பெரியவர் மோக்ஷமடைந்தவர் என்பதோடு நிறுத்திவிடாமல் ஒழுக்கமும் நியாயமுமில்லாத கதைகளை தேரும் திருநாளும் செய்வதற்காக அவர் பேரில் எழுதிவைத்துக்கொண்டு மாணவர்கட்கு அதை உபதேசம் செய்தால் மாணவர்கட்கு ஒழுக்கமும் அவரவர்கள் கடமையும் வந்துவிடாதென்றே சொல்லுகிறேன். ஆராய்ச்சியுடைய பண்டிதர்கள் எல்லோர் திருவிளையாடல் புராணம் சான்றல்லவென்பார்கள். ஆனால் ஆவணி மூலம் மதுரைப் புட்டுத் திருநாளை அவர்கள் தடுத்ததில்லை.

சர்க்கார் உத்தியோகத்தில் பல சைவர்களிருக்கிறார்கள். சர்க்கார் பணத்தைக்கொண்டு கோவில் கட்டமாட்டார்கள். பல வியாபாரிகளிருக்கிறார்கள். அவர்கள், தொலைக்குப் போன தங்கள் காரியஸ்தன் சரக்கு வாங்கும் பணத்தைக்கொண்டு கும்பாபிஷேகம் செய்துவிட்டால் மன்னிக்கமாட்டார்கள். பண்டிதர்கள் தேடும் பணத்தை கோவில் உண்டி கையில் போட்டுவிட்டால் வீட்டில் சோறுபோடமாட்டார்கள். பண்டிதர்கள் மக்கள் பள்ளிக்கு வாங்கின சம்பளத்தால் பகவானுக்குப் பாலபிஷேகம் செய்துவிட்டால், கடமைகளைச் செய்யும் எடுகளையே தேடி பண்டிதர்கள் மக்களுக்குப் பாடம் கற்பிப்பார்கள். சுந்தரமூர்த்தி நாயனார் கதையைப் பற்றி நானொன்றும் சொல்ல வேண்டியதில்லை. அக் கதையும் மாணாக்கர்களை சத்தியத்தில் கொண்டுபோய்ச்சேர்க்காது. சுந்தரமூர்த்தி நாயனாரையும் அவருக்குடந்தையாகவிருந்த திருவாரூர்க் கடவுளையும் அக்காலத்திலேயே அவர்கள் செய்கைக்கு வெறுத்து அவர்களின் ஊர் பேர் சொன்னவர்களை எல்லாம் வெட்டிக்கொண்டிருந்த விறல்மிண்ட நாயனார் அறுபத்து மூவரில் ஒருவர். சிவபக்தர்களையெல்லாம் வெட்டிக் கொண்டிருந்த அவருக்கே சிவபெருமான் மோட்சம் கொடுத்திருக்கிறார் என்றால் சைவ சமய ஆச்சாரிகள் பேரால் எழுதப்பட்டிருக்கும் கதைகள் ஞாயமில்லாதவைகள். அதைச் சிவபெருமான் ஏற்றுக்கொண்டார் என்பது சிவத்தின் தன்மைக்குப் பொருந்தாது என்று நாங்கள் சொல்லுவதில் பண்டிதர்களிடமும் பரமசிவத்தினிடமும் எங்களுக்கு என்ன பயம். பெரிய புராணத்தைச் சான்றல்லவென்று சொன்ன பண்டிதரும் சேக்கிழார் பெரிய புராணத்தில் பொய்யைப் புகு

இதன் தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க

# புராணங்கள்.

## பெரிய புராணம்

## தில்லைவாழ்ந்தணர் புராணம்

## கட்டுரை 3

(மெய்கண்டான் எழுதுவது)

பெரியபுராணம் பார்ப்பனீயத்திற்கு அடிகோலுவதென்பதை தில்லைவாழ்ந்தணர் புராணத்தாலறியலாம். மற்றையநாயன்மார்கள் கதையிலாயினும் கேட்பதற்குச் சுவையுள்ளதாகவோ, சுவையில்லாததாகவோ காணப்படுகின்ற சில செய்திகள் கதைப்போக்கில் கூறப்படுகின்றன. ஆனால் தில்லைவாழந்தணர் புராணத்தில் ஒருசிறிதும் கதைப்பகுதியென்பதில்லை. சிதம்பரத்திலுள்ள கோயிலிற் பூசைசெய்கின்ற பார்ப்பனர்கள்தான் தில்லைவாழ்ந்தணர் என்று சொல்லப்படுகின்றவர்கள். கோயிற்பூசை செய்வதால் அவர்களையும் தெய்வமாகக்கொண்டு வணக்கஞ்செய்யப்படுகின்றது. திருத்தொண்டத்தொகையில் முதலில்வருவது "தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்பதுதான். இது ஒருபாட்டில் பாதி அடியாகும். இந்தஅடி பரமசிவனால் சுந்தரமூர்த்தி நாயனார்க்குச்சொல்லப்பட்டதாம். எல்லா நாயன்மார்களையும் விட்டுவிட்டு முதல் முதலில் சுந்தரர் தில்லைப்பார்ப்பனரை வணங்குவதற்குக்காரணம் என்னவென்று நமக்கு விளங்கவில்லை அப்பார்ப்பனர்கள் செய்த அரும்பெருங் காரியங்களென்ன? வியப்படையத்தக்க எந்தச்செயல்களைச்செய்து முடித்தார்கள், கோயிலுக்குப் பூசை செய்வது அரும் பெரும் செயலாகுமா? அச்செயலாவது, அன்புமேலிட்டு, ஒருபயனும் கருதாமல் அவர்களால் செய்யப்பட்டதாவென்றால் அதுவும் இல்லையென்றுதான் கூறவேண்டும். இதற்குஆதரவு பெரியபுராணத்திலிருந்தே காட்டுகின்றோம். கோயிற்பூசையை வயிற்றுப்பிழைப்புக்கு ஆதாரமாக வைத்துக்கொண்டு கோயிலுக்கு வருவோர் போவோர்களிடம் பொருள்பறித்தார்களேயல்லாமல் வேறென்னசெய்தார்கள்; கோயிற் பூசைசெய்யும் அப்பார்ப்பனர்கள் தங்களை பரமசிவனுடன் கூடவேவந்தவர்களென்று கூறிக்கொள்வார்கள். அவர்கள் அதாவது அத்தில்லைவாழந்தணர்கள் மூவாயிரவராம். அம்மூவாயிரவரும், கோயிற்பூசை செய்கின்றவர்கள்தான். ஒருசமயம், "பரமசிவன் என்றோ அல்லது நடராஜனென்றோ ஒரு கடவுளிருந்து அவர் கைலாசத்திலிருந்து வந்திருப்பாரானால் அப்பொழுது மூவாயிரம் பார்ப்பனர்கள் அவருடன்கூடவந்திருப்பாராயின், அந்த மூவாயிரவர்களும், சுந்தரமூர்த்திநாயனார் காலம்வரையிலும் இறக்காமலிருந்திருக்க முடியுமா?

இனிச்சேக்கிழார் தில்லைவாழந்தணர்களைப் பற்றிக்கூறும்போது அவர்களின் உண்மை நிலையைக்கூறிவிட்டார். உள்ளது யார்வாயிலாகவேனும் வெளிவந்துதானே தீரவேண்டும்? எத்தனை நாளைக்குத்தான் உண்மையை மறைத்துவைக்க முடியும்?

"வருமுறையெரிமூன்றோம்பி மன்னுயிர் அருளால் மல்கத்
தருமமே பொருளாக்கொண்டு தத்துவநெறியிற்செல்லும்
அருமறை நான்கினோடு ஆறங்கமும் பயின்று வல்லார்".

என்று சேக்கிழார் கூறுகின்றார். இதனால், இத்தில்லைப்பார்ப்பனர்கள் ஆரியர்கள் என்று துணியக்கிடக்கின்றது. எவ்வாறெனில் தீயின் சம்மந்தமாகச் செய்யப்படுகின்ற சடங்குகள் யாவும் ஆரியர்க்குரியதேயன்றி தமிழர்க்குரியதன்றென்று சரித்திரக்காரர்கள் கூறுகின்றனர். ஆகவே "தில்லைவாழந்தணரை" "எரிமூன்றோம்பி" என்றதனால், அவர்கள் "ஆகவனீயம், காருகபத்தியம், தக்கணாக்கினி" என்ற மூன்றுவித எக்ஞயங்களை வளர்த்து அதற்குரிய சடங்குகளைச்செய்கின்றவர்கள் என்பது பெறப்படுகின்றது. மற்றும் "அருமறை நான்கினோடு ஆறங்கமும் பயின்று" என்றதனால், இருக்கு, எசுர், சாமம், அதர்வணம், என்ற நான்குவேதங்களையும், சிட்சை, வியாகரணம், சந்தோவிசிதி, நிருத்தம், சோதிடம், கற்பம், என்ற ஆறு அங்கங்களையும் பயின்றவர்கள் என்பது பெறப்படுகின்றது. இதனால் தில்லைப்பார்ப்பனர்கள் ஆரியப்பார்ப்பனர்கள் செய்கைகளை மேற்கொண்டிருந்தார்களென்று கூறுவதில் என்னதவறிருக்கின்றது?

மற்றும் "அறுதொழிலாட்சியிலே அருங்கலி நீங்கினின்றார்" என்று சேக்கிழார் குறித்துள்ளார். இதனால், பார்ப்பனர்க்குரிய அறுவகைத்தொழில்களையும் செய்தவர்கள்தான் தில்லைப்பார்ப்பனர்கள் என்பது பெறப்படுகின்றதன்றோ? அவ்வறுவகைத்தொழில்களாவன:— ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பனவாகும். ஆகவே, தில்லைவாழந்தணர்கள், படித்தல், பிறருக்குப் படிப்புச் சொல்லிக்கொடுத்தல் ஆகியதொழில்களை மேற்கொண்டிருந்ததனால் பொருள்சம்பாதித்தார்கள்; வேட்டல், வேட்பித்தல் என்பதனால், உயிர்களைக்கொலைசெய்வதாகிய யாகங்களைச்செய்வதும், பிறரையும் யாகங்களைச் செய்யும்படி வைத்து அவர்களிடம் பொருள் பறிப்பதுமாகிய தொழிலையும் மேற்கொண்டிருந்தார்கள்; ஈதல், ஏற்றல் என்றதனால் பிறருக்குக் கொடுத்தலையும், பிறரிடம் தாம் பிச்சைவாங்குதலையும் மேற்கொண்டிருந்தார்கள் என்று தெரிகின்றது.

மேற்கூறிய செய்கைகளை மேற்கொண்டிருந்தவர்கள் தன்னலங்கருதாதவர்களாக அன்புமேலிட்டவர்களாக எப்படிப்பரமசிவனுக்குத் தொண்டு செய்திருக்க முடியும்? இத்தகைய பார்ப்பனர்களையும் தெய்வமாகப்பாவித்து வணக்கஞ்செலுத்துவதில் என்னபொருளிருக்கின்றது? சுந்தரமூர்த்தி நாயனார் அரைவரியினாற்சொல்லிய இவர்களைப்பற்றி நம்பியாண்டார் நம்பியோர் ஒரு பாட்டினாற்குறிப்பிடுகின்றார். இதனைச்சேக்கிழார் பத்துப்பாட்டுகளால் விளக்குகின்றார். பத்துப் பாட்டுகளால் சொல்லுவதற்குரிய செய்திகள் ஒன்றுமில்லையெனினும் இவர்கள் மிகவும் சிறப்பாகக் கொண்டாடத்தக்கார் அல்லவெனினும் சுந்தரமூர்த்தி நாயனாரால் பாராட்டப்பட்டவர் என்றதைக்கொண்டே சேக்கிழாரும் பாராட்டிக் கூறுகின்றார். இதனை:—

"இன்றிவர் பெருமையெம்மால் இயம்பலாம் எல்லைத்தாமோ
தென்தமிழ்ப் பயனாயுள்ளதிருத்தொண்டத் தொகைமுன்பாட
அன்றுவன்றொண்டர்தம்மை அருளிய ஆரூர் அண்ணல்
முன்திரு வாக்காற்கோத்த முதற்பொருள் ஆனாரென்றால்"

என்று கூறப்படும் சேக்கிழார் வாக்கினால் ஒரு உண்மை உணரக்கிடக்கின்றது. சுந்தரர் கூறியதனால் இவர்கள் பெருமைபெற்றவர்களென்றும், அவர்கள் பெருமையை அளவிட்டுக்கூற முடியாதென்றுங்கூறி முடிக்கின்றார். இங்கு மற்றொன்றுங் கவனிக்கத்தக்கதாகும், சுந்தரர், தில்லைவாழந்தணரை முதலிற்கூறியிருக்க, சேக்கிழாரோ? திருவாரூர்ச்சிறப்பு என்றதலைப்பின் கீழ் மநுமுறைகண்ட சோழன் வரலாற்றையும், பிறகு திருக்கூட்டச் சிறப்பையும், தடுத்தாட்கொண்ட புராணத்தையுங் கூறியபிறகே தில்லைவாழந்தணர் புராணத்தைக் கூறுகின்றார். இதிலிருந்து, பார்ப்பனர் செய்தியை முதலிற்கூறாமல், சோழமன்னன் வரலாற்றை முதலிற்கூறியதாலும், தடுத்தாட்கொண்ட புராணத்தை முதலிற்கூறியதாலும், அவருடைய உள்ளக்கிடக்கையை ஒருவாறு அறியலாம். மனுச்சோழன் வரலாற்றை முதலிற் கூறியது, தன்னை ஆதரித்த அபயகுல சோழனை மகிழ்விக்கவேண்டியென்று நினைக்கலாமல்லவா? ஆகவே இவ்வகையில் சேக்கிழாரும் சுபலத்தை கருதினாரென்று கொள்ளலாம். இவ்வாறு ஒவ்வோரிடங்களில் அவர் செய்திருக்கும் தவறுகள்பல. அவற்றைப்பின்வரும் வியாசங்களில் எடுத்துக்காட்டுகின்றோம்.

# சுயமரியாதையும் சமயவெறியும்.

[திரு. இராவணதாசன்.]

நமது நாட்டிலுள்ள கோடிக்கணக்கான மக்களில் இரண்டொரு ஆசாமிகள் தங்களைச் சைவர்களென்றும் வைணவர்களென்றும் கூறிக்கொண்டு மோட்சத்திற்கு கைகாட்டி மரங்கள் தாங்கள்தானென்ன இறுமாப்புக்கொண்டு சமயவெறியர்களாய் ஜனசமூகத்தைப் பாழ்படுத்தி வருகின்றார்கள். இவர்கள் தங்களைப்போல் சமயவெறிபிடியாத மற்றமக்களை எல்லாம் மிகவும் கேவலமாக மதிக்கின்றார்கள். இவர்கள் சமய வேடங்களால் தங்களை அலங்கரித்துக் கொண்டவுடன் பார்ப்பனர்களைவிட ஒரு படிமேலேறி விடுகின்றார்கள். தங்களது உடன்பிறந்த சகோதரனாக இருப்பினும் அவனையும் மிருகத்தினும் கீழாக நடத்துகின்றார்கள். இந்த ஆஷாடபூதிகள் சாப்பிடுவதை யாராவது பார்த்துவிட்டால் மானமே இடிந்து விழுந்துவிடுமென அஞ்சி ஏழு திரை போட்டுக்கொண்டு கைதிகளைப்போல் தனியாகச்சாப்பிடுவார்கள். தமிழ்நாட்டு பெருங்குடி மக்களாகிய தமிழ் மக்களின் பெருமையை புகழ்ந்து பேசும் இவர்கள் ஆரியர்களாகிய பார்ப்பனர்கள் கையில்தான் அன்னம் வாங்கி உண்பார்கள் இவர்கள் "நாமனுஷ்டிக்கும் சமயமே உலகத்திற்கெல்லாம் மேலானது; இதைவிட வேறு சமயமும் சாமியும் இல்லை; அப்படி இருந்தாலும் நமது சாமிக்குப் பிறகுதான் மற்ற சாமிகளெல்லாம்" என்பவைபோன்ற அகங்காரமும் துவேஷமும் பொறாமையும் ஆத்திரமும் ஆணவமுமே இவர்கள் பெற்ற சமய ஞானோபதேசமாக இருக்கிறது. இதற்கு உதாரணமாக வைணவ சமய ஆச்சாரிகளில் ஒருவர் மற்றுமோர் தெய்வமுண்டோ மதியிலா மானிடங்காள், என்றும் இன்னொருவர் "பொன்னரங்கம் போற்றாதார் புலையர் தாமே" என்றும் பாடிவைத்துள்ளார்கள். சமரச சன்மார்க்க நோக்கமுள்ள மெய்யன்பர்களை யெல்லாம் சமயவெறியர்களாக்கிப் பிரித்துவைப்பது இந்தப்பாடல்கள்தான். இதேபோல சைவ சமய ஆச்சாரிகளில் ஒருவர், தேடிக் கண்டுகொண்டேன் திருமாலொடு நான்முகனும் தேடியும் தேடொணாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன், என்று பாடியுள்ளார். "பிரமதேவ"னும் "மகாவிஷ்ணு"வும் வெகுகாலமாகத் தேடியும் கண்டுபிடிக்க முடியாத "சிவனை" இவர்கண்டுகொண்டாராம். பலா! பலா!! வைணவர்கள் சொல்லுவதையும் இவர்கள் சொல்லுவதையும் நேயர்களே சிந்தியுங்கள். இப்பொழுது எந்தச் சாமி யாருக்குப் பிறந்தார் என்ற சண்டையும் வடகலை, தென்கலைச் சண்டையும் திருநீறு திருமண் சண்டையும் ஓய்ந்தபாடில்லை. இச்சமயவெறியன்றோ நம் மக்களை சுயமரியாதை யிழந்து அந்நிய நாட்டாரிடம் கையேந்தி நிற்கச் செய்கிறது.

அந்தோ! அந்தோ!!

# கோவில் சொத்துக்களையும் மடத்து சொத்துக்களையும் என்ன செய்வது?

## மேல்நாட்டில் என்ன செய்தார்கள்?

திரு ஞானாநந்தசுவாமிகள் மொழிபெயர்த்தது.

இங்கிலாந்தில் எவ்வண்ணம் சீர்திருத்தம் பரவியது என்னும் செய்தி, 'டெனட் ஹிஸ்டரி' மூன்றும்பாகம் என்னும் நூலிலிருந்து இங்கு மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் ஜனங்கள் 400 ஆண்டுகட்குமுன்னம் தம்முன்னேற்றத்திற்கு அஸ்திவாரம் கோலும் முறையில் கோவில்களுக்கு விடப்பட்டிருந்த சொத்துக்களைப்பறிமுதல் செய்து, பொதுஜனநன்மைக்கு வைத்துக்கொண்டனர் என்பது அதிலிருந்து புலப்படும். அத்தகைய சீர்திருத்த நிலைமைக்கு நம்மாகாணம் இப்பொழுது வந்திருக்கிறது. சமூகசீர்திருத்த விஷயத்தில் நாம் பிறமாகாணத்திய ஜனங்களது நடவடிக்கைகளையும் காங்கிரசின் யோசனையையும் பின்பற்ற முடியாது. ஆகவே, ஷை சீர்திருத்தத்திற்கு நாம் அடிகோலுகையில், நம் சீர்மையிலுள்ளார் செய்து கொண்ட இன்னொரு சீர்திருத்தத்திற்கும் அடிகோலி விடவேண்டும். அதாவது, நம்நாட்டில் உள்ள பார்ப்பனர்கள் போலவே அங்கு இருந்து வந்த குருமார்களுக்கு இனாமாய் விடப்பட்டிருந்த சொத்துக்களையாவும் பறிமுதல் செய்யப்பட்டவிஷயத்தை மறவாது நாமும், நம் சென்னை மகாணத்திற்குரிய சட்டசபையை வசப்படுத்துதல்செய்து, ஆங்கிலேய அரசாங்கத்துக்கு எடுத்துக்காட்டி அதன்மூலம் அத்தகைய ஒழுங்கான சீர்திருத்தங்களைச்செய்து நம் பார்ப்பனரல்லா ஏழைகளும் தாழ்த்தப்பட்டவர்களும் செம்மைநிலை பெறவைக்க நாம் எழவேண்டும்.

இதற்கு ஆதாரமாய் என் கட்டுரையைப் பின்னர் எழுதவேணுமிலும், இங்குசில நியாயங்களை மட்டும் பொருந்தக்கூறுவேன்.

1. சீர்மையிலிருந்த குருமார்களினும் நம் பார்ப்பனகுருமார் அதிகப்படியான பொய்மூட்டைகளும் மூடநம்பிக்கைகளும் கொடிய சட்டதிட்டங்களும் நம்மிடம் கற்பித்துள்ளனர்.

2. நம்பார்ப்பனர் இதுவரையில் தாம் கடவுளின் முகத்திலிருந்து வந்ததாகவே யுரைத்துப் பயமுறுத்தி வந்திருக்கின்றனர்.

3. வேதம், ஸ்மிருதிமுதலிய ஆபாசநூல்களைக்கூட தாமேபடிக்க ஞாயம் பெற்றதாகக் கூறிவந்திருக்கின்றனர்.

4. உலகத்தினர் பூராவையும் நீசர்என்று ஒதுக்கிவைத்துள்ளனர்.

5. இத்தகைய பார்ப்பனர் நம் சென்னைமாகாணத்தில் 100 க்கு 3 வீதம் நின்று ஒருசாதியாராகவே தம்மை ஆக்கிக்கொண்டதால் அதிகப்படியாகவே நம பொருள்களையெல்லாம் தந்திடப்பட்டவர்களாக ஆகி பண்டைய மன்னர்களையும், பார்ப்பனரல்லாதாரில் உள்ள சிற்சிலமிராசுதாரகளையும்கூடமயங்கவைத்துப்பெரும்பாலானபார்ப்பனரல்லாதார் அனுபவிக்கவேண்டிய நிலங்களையும் வீடுகளையும், செல்வத்தையும், தாம்கைக்கொண்டு விட்டதால், ஒவ்வொருவழியிலும், சீர்மைக்குருமார்களைவிட இவர்கள் அதிகப்படியான கொள்ளைக்காரர்களாகவே இருக்கின்றனர்.

6. இவர்கள்எண்ணமுடியாத ஓராயிரம் பாவங்களும் கொடுமைகளும்நம்நாட்டில் வளர்த்துள்ளதையெல்லாம்நோக்கினுல்சீர்மையிலிருந்த எல்லா குருமார்களையும்விட,இவர்கள் தண்டனைமுறையில்,சொத்துப்பறிமுதல் செய்யப்படுவதற்கு அதிககாரணமுடையவர்கள்.

7. போதாக்குறைக்கு இவர்கள் நம்அரசர் முதலியோர்விட்ட பொருள்களைக்கொண்டே ஆங்கிலம்கற்று இப்போது நமக்கு எதிரிகளாகவும் வேலைசெய்பவர்.

8. இதுசம்பந்தமானசீர்திருத்தத்தைநாம்செய்ய இன்னும் முற்படாவிட்டால்ஐரோப்பியதேச சரித்திரநிபுணர்கள் நம் ஆராய்ச்சியின் மையை எண்ணித் தம் உள்ளாந்தரத்தில் பரிகாசம் செய்வார்கள் என்பேன்.

9. இச்சீர்திருத்தங்களன்றே நம் ஒழுங்கான சுயமரியாதைக்கும் ஞாயம்பொருந்திய 'ரிவோல்ட்'டுக்கும் பொருத்தமானவை.

கைவிட்டுப்போன பொருளை மீட்பதுவும் சுயமரியாதையே.நண்பர்களே, எட்டாவது ஹென்றி எலிசெபெத் முதலியவர்களால் கைதிகளாக நடத்தப்பட்டிருக்கக்கூடிய நிலைமைக்காரர்களெல்லாம், இன்று நம்மேல் 'நியாயம்' தீர்க்க நியமிக்கப்பட்டிருப்பது விபரீதமாகத் தோன்றவில்லையா? நாம் இவ்விரண்டு சீர்திருத்தங்களைச்செய்ய தற்போது அலக்ஷியமாயிருப்பின், அது, நம் நியாயபுத்தியையும், ரோஷத்தையும், பார்ப்பனரல்லாரிடம் நமக்கு இரக்கமுள்ளதென்பதையும் காட்டாது. அன்றியும், நம்பினவர்கள், நம்மை இகழ்ந்து, அவர்கள் இச்சீர்திருத்தங்களைத்தாமே செய்துகொள்ளுவர்என்பதை நம்மனதில் பதிக்கவேண்டும். இதைச்செய்யாத நாமா பார்ப்பனரை உத்தியோகத்தினின்று நீக்குவித்தும் சுயராஜ்யம் பெற்றும் முந்தப்போகிறோம்? இதையெல்லாம் யோசியுங்கள். இனி என்மொழிபெயர்ப்பைத் தொடங்கிச் சுருக்கமாகவே முடிக்கிறேன்.

### 1509—1525

புதியகொள்கைகள் பரவவேண்டிய காலம் வந்துவிட்டது. தற்காலநிலைமை அமைதியாயிருப்பதாகத் தோன்றியதாயினும் பெரிய மாறுதல்களை உண்டாக்கக்கூடிய கிளர்ச்சிகளுக்கு விதை போட்டாய்விட்டது.

அதன் பலனாக "பண்டையநாளில் சொன்னதையும் கேட்டதையும் கண்மூடித்தனமாய் அப்படியே நம்பிக்கொண்டிருந்த ஜனங்கள் இப்பொது எல்லாவிஷயங்களையும் ஆராயத் தலைப்பட்டனர். அவையோக்கியமுடையவைதானு வென்றுஎண்ணவும்தங்களுக்குள்ளாகவேகேள்விபோடவும்ஆரம்பித்துவிட்டார்கள். ஜனங்களது மனதில்எவை எல்லாம் நன்றென்றும், காரணம்பொருந்தியவையென்றும் தோன்றவில்லையோ அவற்றை யெல்லாம் அணுவத்தனையும் செவிசாய்த்துக்கேட்க மறுத்துவிட்டார்கள்.

இட்டலிதேசத்தில் போதிக்கப்பட்ட புதிய கல்வி முறையும் போதனையும் இங்கிலாந்துபோன்ற எல்லா நாடுகளுக்கும் பரவத் தலைப்பட்டது. புத்தகங்கள் அச்சிடப்படலாயின. ஆதலால் அவை இலகுவாயும் விலை நயமாயும் ஆயின.

ஆனல், இத்தகைய மத்தியகாலப் படிப்பில், மக்களுக்கு நம்பிக்கை போய்விட்டது.

ஆலயங்களின் நிலைமை நீண்டகாலமாக கெட்டுப்போய்இருந்தது. குருமாரது பீடங்கள் என்பன கிறிஸ்துமதத்திற்குச்சரியான ஊக்கமுடன் பாடுபடுவதாக இல்லை. மதகுருமார் (அல்லது மத ஆச்சாரிமார்)பெரும் செல்வவந்தர்களாகவும், வல்லமை பொருந்தியவர்களாகவும், எவ்விஷயத்தும் தலையிட்டு முந்துபவர்களாகவும் இருந்தனர். அக்காலத்திய ஆச்சாரிமாரது செயல் முறைகள் இழுக்குடையனவாய் இருந்தன. மதத்தின் பேரால் வாழ்க்கை கொண்டஏனையோரது நிலைமைகேவலமும் இழுக்குடையதாகவும் இருந்தது. ஆலயங்கள்சம்பந்தமான எல்லாக்காரியங்களும் தீயநெறியில் நடைபெற்றன.

ஆனல் ஜனங்களோ பொதுவாக, கோவில்களில்நடப்பவைகளைப்பற்றியசெய்திகளைக்கொஞ்சமும்கவனிப்பதில்லை. அவர்கள்தம்தம்வயிற்றுப்பிழைப்புக்காரியத்தில் மட்டும்கருத்துச்செலுத்தியிருந்ததால்தேசத்திற்குப்பெரும்தீங்குஏற்பட்டது. ஏனையமடங்களின்பெரியதலைவர்கள் என்னப்பட்டசாமியார் வகையருவும் 'மதம்' என்பதன் உண்மையான அர்த்தம் கொஞ்சமும் உணராதவர். மக்கள் மூடநம்பிக்கையில் ஆழ்ந்திட்டவர்களாயிருந்தனர். உண்மையான கடவுள் தன்மை விளங்காமல் போயிற்று. ஆபாசக் கொள்கைகள் குடிகொண்டிருந்தன. திருத்துவதற்கும் எவரும் சிரத்தைகொண்டில்லை. ஆலயக்காரக்குருக்கள்மார் சீர்திருத்தச்செயல்களையும் அவை சம்பந்தமான வார்த்தைகளையும் புறக்கணித்தாவது, அல்லது, அவற்றுக்கு எதிரிடையாகவாவதுநடந்தனர். அவர்கள் தமது பழைய உரிமைகளையும் சொந்த செல்வத்தையும் விட்டுவிடாமல், எவ்வளவுதூரம் கவலைசெலுத்திக் காப்பாற்றிக் கொள்ளலாமோ அவ்வளவுதூரம் அப்படியேசெய்து காலம் கழித்தனர். அவர்கள் ஏற்கெனவே, பொதுஜனங்களுடன் வைத்துக்கொண்டிருந்த சம்பந்தமெல்லாம் அறவேஒழிந்துபோயிற்று. ஆலய இலாகா, தன் வழக்கம்போலவே, சகலஐஸ்வர்யத்தோடும் சகல வல்லமையோடும் குறையாதகர்வத்தோடும் நடந்துவந்தது. சீர்திருத்தக் கவலைகொண்டுள்ள மனிதர்கள் ஆலய ஊழல்களையெல்லாம் எடுத்தெழுதி வெளியிட்டபோதிலும்கூட ஆலயசம்பந்தமுறைகளில், ஜனங்கள் சாதாரணமாக நம்பிக்கை குறைந்திட்டவர்களாகவாவது அதைமாற்றக்கருதியவர்களாகவாவது தோன்றவில்லை.எல்லாதேசங்களிலுமுள்ள உத்தமர்கள் நூதன கல்விமுறையை இயன்றவரையில் பரப்பவும், அறியாமை குருட்டு நம்பிக்கை தீயநடவடிக்கை இவற்றை ஒழிக்கவும் முயற்சிசெய்துகொண்டுஇருந்தார்கள். புதியகொள்கைகளை உணர்த்துவதற்கென எட்டாவது ஹென்றி காலத்தில் ஸெயிண்ட்பால்ஸ் பாடசாலைஸ்தாபிக்கப்பட்டது.........ஸர்தாமஸ் மூர் என்பவர் யூடோபியாவென்னும் கீர்த்திபான நூலொன்று எழுதி, 1515 ல் வெளியிட்டார். அவர் அக்காலத்திய தீயநடைமுறைகளை கண்டித்து, மக்கள்தம் எண்ணம்போல் எண்ணவோ, தொழவோ உரிமைவேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார்.

எட்டாவது ஹென்றியான மன்னவரது அமைச்சர்களில் ஒருவரான உல்ஸியென்பவர் 1518-ல் இங்கிலாந்தில் மத ஆச்சாரியான போப் என்பவரது பிரதிநிதியாக(பிரதிநிதிச்சாமியாராக)இருக்கவேண்டுமாய் உத்தரவு பெற்றுக்கொண்டார். அதனுல் அவர், இங்கிலாந்தில் உள்ள ஆலயங்களின் மேல் தம் அதிகாரத்தைச்செலுத்த வாய்க்கப்பெற்றவராகித் தன்சொந்தபலத்தினுல் சில சிறிய ஆபாசஒழுக்கம் கைக்கொண்ட குருமார் வசித்த விடுதிகளையெல்லாம் கலைத்துவிட்டார். இப்படிக்கலைத்துவிட்டதால், வந்த வருமானத்தைக்கொண்டு அவர் ஆக்ஸ்போர்டில் ஒரு கல்லூரியையும் தன் சொந்தகிராமத்தில் ஒருகல்லூரியையும்ஸ்தாபித்தார். அக்காலத்தில்உள்ள ஆச்சாரிமார்களும், தனவந்தர்களும், பொருள் வளமுள்ள பாடசாலைகளையும் கல்லூரிகளையும் ஸ்தாபித்து நடத்துவது சாதாரணமான போக்கு. ஆனல், உல்ஸி தம் கல்லூரியை வெகு சிறப்புடன் நிலைநிறுத்தினர். அவரும் அவரைப்போன்ற கோலட் என்றவரும் மூர் என்பவரும், மதக் குருக்களது ஸ்தானங்களுக்கு வருபவரை மட்டும் திருத்தினல் போதுமென்று எண்ணிக் கொண்டிருந்தனர். ஆனல், உல்ஸி தமது நிலைமையையே ஒழுங்குற வைத்துக் கொண்டில்லை. அவர் தம் ஆச்சாரியத்துவத்தைச்செலுத்தக் கூடிய விடங்களையும்

இதன் தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க

# சென்னை சட்டசபையும் ஒத்துழைப்புக் கமிட்டியும்.

(திருப்பதி எழுதுவது)

அடுத்த மாரிகாலத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்யும் ராயல் கமிஷனுடன் ஒத்துழைத்து நாட்டின் நிலையை விசாரிக்கும் கமிட்டி ஒன்றை கவர்ன்மெண்டார் ஆங்காங்கு சட்டசபைகளின் மூலம் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றி அந்த கமிட்டிக்கு அருகதையுடைய மெம்பர்களையும் தெரிந்தெடுத்துவருகின்றார்கள்.

அதன்படியே இதற்குமுன் சைமன் கமிஷனே திரும்பிப்போ என்று சொல்லிய வீரம் பொருந்திய மாகாணங்களும் தேசியம் என்ற விதையை இந்நாட்டுக்கு முதலாவதாகக்கொடுத்த வங்காளமும் சேர்ந்து 4 மாகாணங்கள் சட்டசபை மூலம் கமிட்டி நியமிக்க சம்மதம் கொடுத்துவிட்டது. இனியும் சில மாகாணம் சம்மதிக்கத் தயாராக இருக்கின்றன.

## நமது சென்னையோ?

அடுத்துவரும் செப்டம்பர்மாதம் கூடும் சட்டசபையில் வழி காட்டவேண்டியதாயிருக்கிறது. மழை விட்டும் தூவானம் விடவில்லை யென்பதைப்போல சில மாதங்களுக்கு முன் பகிஷ்காரம் பகிஷ்காரம் என்று சொல்லி பாமர ஜனங்களை கிளப்பிவிட்டு கலகமும் அடிதடியும் கொலையும் நடந்ததும் போதாமல் இப்போதும் அதே பேச்சாகத்தானிருக்கிறது.

## காரியத்தில் நடைபெறுமா?

இவர்கள் போடுகிற கூச்சலால் ஒரு செல்லாக் காசுக்கும் கூட பயன் கிடைக்கப்போவதில்லை. "உன்னதும் போச்சு நொள்ளைக்கண்ணு" என்றதுபோல் காரியங்கள் நடைபெற வழிகாட்டுகிறார்கள். காங்கிரசுக்காரர்கள் என்போர்களுக்குள்ளேயே சிலருக்கு ஒத்துழைக்க வேண்டுமென்றே ஆவலுண்டு. ஆனால் அதை முன்னாடி சொல்லிவிட்டால் தேசத்துரோகி என்று சொல்லுவார்களே என்று பயந்துகொண்டு கூட்டத்தில் கோவிந்தா போடுகிறார்கள். உதாரணமாக முன்னே கமிஷன்வந்து இறங்கியபோதுஎவ்வளவோ ஆர்பாட்டம் எவ்வளவோஎதிர்ப்புகள்.இப்போதுஅவையெல்லாம் எங்கே? இதற்குள்ள காரணங்கள் இரண்டுண்டு. அதாவது பகிஷ்காரம் வீண் பேச்சு என்று உணர்ந்தது ஒன்று. மற்றொன்று சைமன் கமிஷனில் ஏற்பட்டமாறுதல். ஆகவே உண்மையில் இந்தத் தேசத்திற்கு சிறிதாவது நன்மை ஏற்பட வேண்டுமானால் ஒத்துழைப்பும் இங்கிலாந்து முதலிய தேசங்களில் சுயநலமற்றவர்களை அனுப்பி நமது கோரிக்கைகளை அடிக்கடி பிரசார மூலியமாய் கிளர்ச்சி செய்தலும்வேண்டும்.

## அதைவிட்டு

சர்வகட்சி மகாநாடு கூடி பேச்சு சாமார்த்தியங்களை காட்டிக்கொள்வதிலாவது காங்கிரசில்பூரணவிடுதலை தீர்மானம்செய்து கொள்வதிலாவது தலைவர்களும், தலைவிகளும்சுயராஜ்ய திட்டம் தயார் செய்வதிலாவது நேரு கமிட்டி திட்டத்தைப்பற்றி அ. பி, பி. பி. நிருபர்கள் மூலம் அபிப்பிராயங்கள் தெரிவித்து பத்திரிகைகளை நிரப்புவதிலாவது சுயராஜ்யம்வரப்போவதில்லை.

## ஏமாற்றுதல் வேண்டாம்.

ஒன்றுமறியாத மக்களை ஏமாற்றுவதே தேசபக்தி யென்று இப்போது வந்துவிட்டது. அதற்கு உதாரணம் தூரம் போகவேண்டுவதில்லை. சமீபத்தில் தொழிலாளர் விஷயமாய் தேசபக்தர்களும்தேசியபத்திரிகைகளும் முதலாளிகளும் தொழிலாளர், தலைவர்கள்என்று சொல்லிக்கொண்டாங்கிரஸ் வீரர்களும் நடந்துகொண்டதே போதும்.

போதாக்குறைக்கு மேனாட்டு பிரயாணத்தை முடித்துவிட்டு சமீபத்தில் இங்கு விஜயம் செய்திருக்கும் மாஜி காங்கிரஸ் தலைவர், ஸ்ரீ சீனிவாசய்யங்கார் அவர்கள் சமீபத்தில் பேசியபோது தமக்கு "வேண்டியது பூர்ண சுயராஜ்யமேதவிர குடியேற்ற நாட்டு அந்தஸ்தல்ல, ஆகையால் நேரு கமிட்டி யாதாஸ்தை நான் ஒப்புக்கொள்ள முடியாது" என்கிறார். இது எப்படி இருக்கிறதென்றால் பத்தாயிர ரூபாய்கையில்இல்லாமல் வருஷம் ஆயிரம்ரூபாய்வட்டி வரத்து அநியாயமாகப்போகுதென்று சொன்னவன் கதையாயிருக்கிறது. முதலாவது நேரு கமிட்டி யாதாஸ்தை இந்தியாவிலுள்ள எல்லோரும் ஒப்புக்கொண்டார்களா? சர்வகட்சி மகாநாட்டில் எல்லா அபிப்பிராய முடையவர்களும் கலந்து ஒன்றுபட்டு விட்டார்களா? அப்படி இவர்கள் கலந்து ஒன்றுபட்டு விட்டபோதிலும் இவர்கள் சமர்ப்பிக்கின்றஇடமாகிய பார்லிமெண்டார் அப்படியே அங்கீகரித்து குடியேற்ற நாட்டோடு இந்தியாவையும் சேர்த்துவிட்டார்களா? ஒன்றுமே யில்லாமலிருக்க நமது அய்யங்கார் அவர்கள் ஏன் அதையும் உதறித்தள்ளுகிறார்? இது அம்பக்கா அல்லவா? போகட்டும், அவர்தான் அப்படிச் சொல்லியபோதிலும், "தமிழ் நாடு" பத்திரிகை அய்யங்கார் அவர்களின் தேசபக்தியை மெச்சி மெச்சி எச்சிலை விழுங்கிக்கொண்டு "பொறுங்கள் பொறுங்கள் நேரு கமிட்டியைக் குலைத்துவிடாதீர்கள். தற்காலம் இதுவே போதும்; பின்னால்பாக்கியையும் பிடுங்கிக்கொள்ளலாம்" என்று ஏன் மன்றாடி போசனை சொல்கிறது? இது எப்படி இருக்கிறதென்றால் பாக்கு வெற்றிலை வியாபாரி மூக்கின் பேரில் கையை வைத்துக்கொண்டு ஆழ்ந்த யோசனையிலிருந்து கொண்டு யாருடனும் பேசாதிருந்தாராம். "ஏன் இப்படி இருக்கிறீர் என்ன யோசனை முடிந்ததா?" என்றுகேட்க "ஒன்றுமில்லை. நம்ம குமாரனுக்கு இவ்வூர் அரசன் மகளை கல்யாணம் செய்ய முடிவு செய்துவிட்டேன்" என்னலும் 'நிச்சயதார்த்தம் ஆய்விட்டதா?' என்று கேட்க 'பாதிமுடிந்தது. அதாவது எனக்குச்சம்மதம்' என்று சொல்லிய கதைபோலிருக்கிறது. அம்பக்! அம்பக்!! முற்றிலும் அம்பக்!!!

## சட்டசபைத் தலைவர் அங்கத்தினர்கள்.

பாமர மக்களை மேல் கண்டமாதிரி ஏமாற்றுவதோடு நில்லாது சட்ட சபையையும் ஏமாற்றப் பார்க்கிறார்கள். இந்தத் தீர்மானம் சமீபத்தில் வந்ததாம். பகிஷ்காரம் நிறைவேறிவிட்டதாம்; இன்னும் ஒரு வருஷம் ஆகவில்லையாம். வருஷம் முடிவதற்குள் அதே விஷயமாய் தீர்மானம் கொண்டுவர சட்டத்தில் இடமில்லையாம். ஆகையால் சபைத் தலைவர் அதை நிராகரித்து விடவேண்டுமாம். அதுபோலவே அங்கத்தினர்களும் பகிஷ்காரத் தீர்மானத்திற்கு வாக்களித்த 61 பேர்களில் 4 பேர்கள் துரோகம் செய்து விட்டார்களாம். ஆகவே பாக்கி 57 பேரும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டுமாம் என்னே ஆச்சரியம்?

## இவர்கள் யார்?

தேசமக்கள் தங்கள் நலத்தை காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப சமயோசிதமாய் நடத்திக்கொள்ளக்கூடிய கனவான்களையே முற்றிலும் நம்பி தேர்ந்தெடுத்திருக்கின்றார்கள். அவர்கள் சமயம், நோக்கம் இதுகளை யனுசரித்து ஒத்துழைக்கவோ எதிர்க்கவோ உரிமைபெற்றிருக்கின்றார்கள். ஒரு சமயம் எதிர்த்தவர்கள் மற்றொரு சமயம் நிலைமையை ஆராய்ந்து ஒத்துழைப்பது கிரமமேயாகும். உதாரணமாக இப்போது ஒத்துழைப்புக் கமிட்டிக்குஆதரவுகொடுத்த மாகாணங்கள் முன்னே பகிஷ்காரங்கள்செய்திருக்கின்றன என்பதை யறியவேண்டும். அதுவுமல்லாமல் ஒத்துழைப்பு தீர்மானம் செய்த சட்ட சபை அங்கத்தினர்களை ராஜிநாமா செய்துவிடும்படி எந்தத் தொகுதி வாக்காளர் சொல்லுகிறார்கள்? இதிலிருந்தே தேசமக்கள் கமிட்டியை ஆதரிப்பதாகத் தெரியவில்லையா? முக்கால் வாசிப்பேர் ஆதரிக்கும்போது ஒரு சிறு கூட்டம் தலைவர் பதவிக்கும் பத்திரிகைப் பிழைப்புக்கும் ஏன் வீண்புரளி செய்ய வேண்டும்.

## ஏன் தீர்மானம் வர முடியாது

நமது சட்டசபைதலைவரவர்கள் நீடித்த அனுபவமுடையவர் சமர்த்தர். இந்தபயமுறுத்தலுக்காக பின் வாங்குபவரல்ல. அவருக்கு யாரும் சட்டத்தை காட்டவேண்டியதில்லை. சாதாரணமாகயோசித்தால் கூட ஒரு சட்டத்தைச் செய்வதற்காக மட்டும் கொண்டுவரும் மசோதாவின் தீர்மானத்திற்குப்பின் ஒரு வருடகாலம் குறிக்கலாம். பிரஸ்தாப தீர்மானமோ சட்டமாக்கப் படுவதில்லை. இது அப்போதைக்கப்போது நிலைமைக்கேற்ப அவசரமாய்க் கொண்டுவரக் கூடியவைகள். இதற்கும் காலவரைக்கும் என்ன சம்மந்தம்? அய்யர் வரும் வரை அமாவாசை நிற்குமா? என்ன வேடிக்கை! அதுமட்டுமல்ல முதலில் ஜனப்பிரதிநிதிகளால் பகிஷ்கார ரூபமாய் வந்தது. இப்போது எதிர்கட்சியாராகிய சர்க்கார்கமிட்டியை நியமிப்பதாக வருகிறது. முன்னது அழித்தல் வேலை; பின்னது ஆக்கல் வேலை. முன்கட்சி வேறு பின்கட்சி வேறு. இதை எப்படி ஒன்றென்றுசொல்லலாம். ஆகவேசட்டசபைத் தலைவர்களுக்குள்ள உரிமையை யாருடைய அபிப்பிராயமும் ஒன்றும் செய்யமுடியாது.

## இழிதன்மை வேண்டாம்.

தலைவர்களென்று சொல்லிக் கொள்பவர்கள் என்ன சொன்னாலும், ஜனங்கள் நம்பிவிடுவார்கள் என்றகாலம் மலையேறிவிட்டது. ஐரோப்பா போவதும் இந்தியா வருவதும் வரவேற்பு பத்திரங்களுக்கும் பூமாலைகளுக்கும் விருந்துக்கும்தான் என்பது வெட்டவெளிச்சமாய் திருமிகு ஷண்முகம் செட்டியாரவர்கள் சொல்லிவிட்டனர். அதைவிட்டு அதைச் செய்கிறேன் இதைச் செய்கிறேன் என்பதும், அப்படியல்ல என்பவர்களை சர்க்கார் தாசர்கள் என்பதும், பூமிதானம் சர்க்கார் கொடுக்கின்றார்களென்று புறட்டுச் சொல்வதும் இழிதன்மையாகும் உதாரணமாக பனகால் ராஜா அவர்களுக்கு நீலகிரியில் 600 ஏகரா சர்க்கார் கொடுப்பதாகச் சொன்னதும் அதற்கு பதில் சவுக்கடி கிடைத்தபின் ஒன்றுமில்லாமல் போனதும் ஞாபகமிருக்கும். இப்போதும், ஒன்றை கட்டிவிட்டிருக்கின்றார்கள். அது சட்டசபையில் தீர்மானம் வந்தபிறகு சமயம்போல் பீடிகை போட்டு அவல் வாய் மெல்லுவதற்குப் போலும்.

## முடிவான வேண்டுகோள்

அடுத்த சட்டசபைக் கூட்டத்தில் வரவிருக்கும் ஒத்துழைப்புக் கமிட்டி தீர்மானத்திற்கு ஆதரவளித்து இந்த நாட்டுக்கு தற்காலமுள்ள நிலையில் எவ்வளவுதூரம் சீர்திருத்தம் வேண்டுமோ அதைப் பெற்றுக்கொண்டு நமக்கு முற்றிலும் சுதந்திரம் கிடைக்கும் வரை நல்ல எண்ணத்துடன் உரிமைப்போரிட்டுவிடுதலை யடைய வேண்டும். அதைவிட்டு முடவன் கொம்புத்தேனுக்குஆசைப்பட்டமாதிரி பூர்ண விடுதலைவேண்டும் ஒரு அங்குலமும் குறையக்கூடாதென்று சொல்கிறவர்களின் பேச்சைக்கேட்டு மோசம் போகக் கூடாதென்று பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

"திராவிடன்".

# மனித வாழ்க்கையும் மதமும்.

பட்டுக்கோட்டை,
திரு. ரா. சௌரிராஜன் எழுதியது.

உலகில் மனிதன் பிறக்கிறான். சிலகாலம் வாழ்ந்தபின் இறக்கிறான். மனிதவாழ்க்கையைப்பற்றி நாம் தெரிந்துக்கொண்டது இவ்வளவுதான். மனிதன் ஏன் பிறக்கிறான்? பிறந்ததும் அவன் ஏன் இறந்து போகிறான்? இறந்தபின் அவனுடைய கதியென்ன? இந்தக்கேள்விகளுக்கு நாம் தக்க பதில் கூறமுடியாது. நிச்சயமாக தெரியாததொன்றைப்பற்றி நம்மைக்கேட்டால் நாம் அதைப்பற்றி ஊகிக்கலாமேயன்றி நிச்சயமாக இதுதான் என்று சொல்லமுடியாது. உலகத்தில் ஒரு காரியமும் அநாவசியமாக நடைபெறுவதில்லை. முக்கியமான தவிர்க்கமுடியாத சில காரணங்களாலேயே ஒவ்வொருகாரியமும் நடைபெறுகிறது. இக்கொள்கையைக் கொண்டு பார்க்கும்பொழுது நாம் நமது வாழ்க்கையில் அவசியமாக செய்து முடிக்கவேண்டிய காரியம் சிலது இருக்கிறது. இதை அறிவுள்ள எவரும் மறுக்கமுடியாது. பிறக்கும்பொழுதே நாம் சில காரியங்களைச் செய்து முடிக்க வேண்டும் என்றேபிறக்கிறோம். அக்காரியங்களைச் செய்து முடித்துவிட்டதாகக் கருதி நமது உயிர் எப்பொழுதாவது ஒரு காலத்தில் நமது உடலைவிட்டு அகன்று விடுகிறது. மதத்தின் முக்கிய கடமை நாம் செய்துமுடிக்கவேண்டிய காரியங்களை நமக்கு விளக்குவதேயாகும். இத்தகையதொருமதமே மனிதவர்க்கத்துக்குப் பயன்படுவதாகும். ஆதியிலே எல்லா மதங்களும் இத்தகைய கொள்கையினாலேயே காணப்பட்டன. அவைகளின் தற்கால நிலைமையோ கொள்கைக்கு முற்றிலும் மாறாயிருக்கிறது. இதற்காக நாம் மக்களையோ அல்லது அம்மதத் தலைவர்களையோ குறை கூறமுடியாது. ஒருவன் வலிமை பொருந்தியதொரு கட்டடத்தை கட்டுகிறான். கட்டடம் கட்டும்பொழுது அவைகள் நீடித்து நிற்கவேண்டுமென்று கட்டப்படுகிறதே ஒழிய கூடியசீக்கிரத்தில் ஒழிந்து போகவேண்டுமென்ற எண்ணத்துடன் அவைகள் உண்டாக்கப் படுவதில்லை. ஆனால் உறுதியான கட்டடங்கள் கவலையுடன் பாதுகாக்கப் பட்டாலும் காலப்போக்கில் அவைகள் சிதைவுறுகின்றன. இதற்காக நாம் கட்டடம் கட்டியவர்களை குற்றம் சொல்லமுடியுமா? அதேபோல காலப்போக்கில் இந்துமதமும் சீர்கேடடைந்துவிட்டது.

மதம் மனிதனுடைய பூர்வ ஜென்மத்தையும், அவன் உலகத்தில் எதற்காகப் பிறந்தானென்ற காரணத்தையும், அவனுடைய ஆன்மா அவன் இறந்தபிறகு எந்நிலையடைகிறதென்பதைப்பற்றியும் ஆராய்வதாகச் சொல்லப்படுகிறது. இது அநேக நாட்களாக நம்பப்பட்டு வருகிறது. உலகத்தில் பிறந்து இயற்கையாக தனக்கு அமைந்திருக்கும் அறிவை உபயோகப் படுத்தாமல், எதிர்காலத்தைப்பற்றி கொஞ்சமும் கவலைகொள்ளாது பகலில் உண்பதுவும் இரவில் உறங்குவதும் ஆகியவைகளையே தனது வாழ்க்கையின் முக்கியமான தொழிலாகக்கொண்டு வாழும் அநாகரீகமான காட்டுமிராண்டியும் இறந்து போகிறான். மதத்தைப்பற்றி அதிக கவலையெடுத்துக்கொண்டு அம்மதத்திற்காக எழுதப்பட்ட புராண இதிகாசங்களைப் படித்து, அவைகள் சொல்லும் விதம் இவ்வுலக வாழ்க்கையை அநித்யமென்று துறந்து எதிர்காலத்தில்-அடுத்த பிறவியில்-உளதென்று புராண இதிகாசங்களால் சொல்லப்படும் நித்தியானந்த வாழ்வை அடையவேண்டி அதற்காகப் பாடுபடும் பக்தனும் இறந்துபோகிறான். இருவரும் முடிவில் இறந்துபோகிறார்கள். அநாகரீகமான அந்தக் காட்டுமிராண்டியோ கவலையில்லாமல் பாராமுகமாய் உணவு அகப்பட்டால் உண்பதும் இல்லாவிட்டால் பட்டினி கிடப்பதுமாக தனது வாழ்நாளை சுகமாகக் கழித்தான். மதத்தை நம்பிய பக்தனோ எந்நாளும் சஞ்சலமுடையவனாகவும், செய்யுங்காரியமெல்லாம் பாபமென்றும், எண்ணும் எண்ணமெல்லாம் இவ்வுலகத்தைப் பற்றி என்றும் அதற்காக கடவுள் தன்னை தண்டிப்பாரென்றும் நினைந்து மனக்கலக்கமுற்றான். அவனது வாழ்நாளில் அமைதி என்பதே கிடையாது. இறக்கும்பொழுது நாகரீகமில்லாதவன், மதமென்பதே இன்னதென்று தெரியாதவன், இறப்பு என்பதையே இன்னதென்றுதெரியாதவன், மறுபிறப்பைப்பற்றி கொஞ்சமும் கவலைகொள்ளாதுசாந்தத்துடனும் சமாதானத்துடனும் இறந்துபோகிறான். ஆனால் மற்றவனுடைய இதயம் இறக்கும்பொழுது துடிதுடித்தது. நரகமோட்சத்தை நினைந்தபொழுது அவன் மனம் கலக்கமுற்றது. முடிவில் அவன் பயந்துபயந்து கலக்கத்துடன் இறந்தான். நரக மோட்சத்தைப்பற்றி அவன் அதிகம் தெரிந்துக்கொள்ளாவிட்டால் அவனுக்கு இவ்வளவு பயம் இறக்கும் பொழுது உண்டாயிராது. இது அவன் நம்பிய மதத்தின் தவறேயாகும். ஏனெனில் அவனுடைய மதம் அவனை இயற்கையின் வழியே செல்லும்படி போதிக்கவில்லை. அவனுடையவாழ்க்கையைப்பற்றி அம்மதம் அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை. இயற்கைக்கு மேம்பட்டதொரு வழியிலேயே அம்மதம் சென்றுவிட்டது. அவனுடைய மதம் அவனை நரகமோட்சம் உண்டென்று நம்பும்படி கட்டாயப்படுத்தியது. அவன் நம்பினான். உனக்கு நரகம் கிடைத்தாலும் கிடைக்கும் மோட்சம் கிடைத்தாலும் கிடைக்குமென்று மதம் சொல்லியது. அவன் கலக்கம் கொண்டுவிட்டான். இத்தகையதொரு நிலைமையே தற்காலத்தில் இந்துமதம் அடைந்துவிட்டது.

ஆனால் ஆதியில் மதம் மனித வாழ்க்கையின் ஒரு அம்சமாகவே இருந்து வந்தது. இக்காலத்தில் பல மதங்களிருக்கக் காரணமில்லை. கடவுள் ஒருவர் உண்டென்றும், அவருக்கு உருவம் கிடையாதென்றும், அவர் எங்கும் இருக்கிறார் என்றும், மனிதர்கள் அனைவரும் அவருடைய புத்திரர்கள் என்றும், ஆதியில் மதம் சொல்லியது. கடவுளின் புத்திரரான மனிதர்களை நீங்கள் துன்புறுத்தினால், அவர்களுடைய் பொருள்களை நீங்கள் களவு செய்தால், நீங்கள் அவர்களை பொய் சொல்லி ஏமாற்றினால், அவர்கள்மேல் கோபங்கொண்டு அவர்களை நீங்கள் கொலை செய்தால் கடவுள் உங்களை தண்டிப்பார் என்று முதல் முதல் மதம் சொல்லிவந்தது. இதைவிட இயற்கையான தொன்றுமில்லை. இதைவிட மனிதவாழ்க்கையைச் சீர்திருத்தக்கூடியதொன்றுமில்லை. இதைவிட ஜனசமூகத்தை ஒன்று சேர்க்கக் கூடியதொன்றுமில்லை. பஞ்சமா பாதகம் என்று சொல்லப்படுகிறவைகளை ஒரு மனிதன் ஒழித்துவிட்டானால் அவன் எல்லாருக்கும் நல்லவனாகிவிட்டான். அவனுக்கு பகைவர்கள் இவ்வுலகத்தில் ஒருவருமில்லை. அவன் அபாயமில்லாமல் ஒவ்வொருவருடனும் நெருங்கிப் பழகலாம். இவ்விதத்தில் எல்லா மதமும் கொள்கையில் ஒன்றுபடுகிறது. தற்காலத்திலும் ஒவ்வொரு மதமும் கொள்கையில் அவ்விதமே. எம்மதம் தன்னுடைய சுயநல காரியத்தின் பொருட்டு, பிறரை ஏமாற்றப் பொய் சொல்லலாம் என்று சொல்லியிருக்கிறது? எம்மதம் பிறருடைய சொத்தைக் கொள்ளை கொள்ளுவதற்குக் கொலை செய்யலாம் என்று சொல்லியிருக்கிறது? காமம் நல்ல குணமென்று எம்மதம் செப்புகின்றது? மக்கள் கள் குடிப்பதினால் பலனுண்டு என்று சொல்ல எம்மதம் முன்வருகின்றது? எல்லா மதமும் ஒரே பாடத்தையே ஓதுகின்றன. மதத்தில் முக்கிய ஜீவகாடிபோன்ற கொள்கையில் வித்தியாசம் கிடையாது. கொள்கைகளில் எல்லாம் ஒன்றாக ஒத்திருக்க உலகத்தில் பல்வேறு சமயங்கள் காணப்படுவதின் காரணம் என்ன? கிருஸ்து புத்தரின் கொள்கைக்கு மாறுபட்டவரா? முகம்மது விவேகானந்தரின் கொள்கைக்கு மாறுபட்டவரா? ஒரு மதம் தனது நெறி தவறிச் செல்லும்பொழுது மனிதர்களை நன்னெறியில் செலுத்தும் பொருட்டு அதே கொள்கையுடன் புதிதாய் ஒரு மதம் தோன்றுகிறது. எந்த மதத் தலைவர்களுக்கும் தாங்கள் ஒரு தனி மதத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்ற எண்ணம் இருந்ததே இல்லை. அவர்கள் புதிதாக ஒன்றையும் கண்டுபிடித்து விடவில்லை. கவனியாமல் புறக்கணிக்கப்பட்ட உண்மைகளை அவர்கள் எடுத்துச் சொல்லி அதன் அவசியத்தை நன்றாக விளக்கி அவற்றைப் பின்பற்றும்படி மக்களை வற்புறுத்துகின்றார்கள். அலட்சியமாகக் கருதப்பட்டதை அவர்கள் அவசியமென்று எடுத்துக் காட்டுகிறார்கள். முதலில் சீர்திருத்தம் ஒன்றையே முக்கிய கொள்கையாகக் கொண்டு அவர்கள் மதத்தை அதற்குத் தோன்றியுள்ள சீர்கேட்டினின்று காப்பாற்றப் பாடு படுகின்றார்கள். முதலில் சீர்திருத்தக் காரர்களாக விளங்கியவர்கள் காலக்கிரமத்தில் மதத்தலைவர்களாகவும், அவதார புருஷர்களாகவும் மாறிவிடுகின்றார்கள். பாமர மக்கள் இவர்கள் சொல்வது நவீனம் என்று கருதிவிடுகிறார்கள். மதத் தலைவர்கள் சொல்வது ஒவ்வொரு மதத்திலுள்ள உண்மையென்று அவர்கள் ஒப்புக்கொள்வதில்லை. இதனாலேயே உலகத்தில் எண்ணில்லாத மதங்கள் காணப்படுகின்றன.

மதத்தின் பெயராலும், கடவுள் பெயராலும் தற்காலத்தில் தமிழ் மக்களிடத்தில்

இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

# ஜைனர்களின் மீது வீண் அவதூறு.

சுவாமி சுத்தானந்தபாரதி அவர்கள் "ஜஸ்டிஸ்" பத்திரிகையில் எழுதியதின் சுருக்கம்.

திரு. துரைசாமிமுதலியார் மொழிபெயர்த்தது.

ஜைனமதம் பகுத்தறிவுக்குப் பொருந்தியதும், புனிதமும் அன்பு மயமானதுமான ஒரு மதம்.

அது, மனிதனை தெய்வீகத்தன்மை பொருந்தியவனுக்கத்தக்க எல்லா லட்சியங்களும் கொண்டது. அது ஒவ்வொருவனையும் பரிபூர்ண பரிசுத்த மாக்கத்தக்கது. அதில் குறுகிய நோக்கமுடைய வைதீக கொடுமைகள் கிடையாது. அதன் உயர்ந்த லட்சியங்களும் தெளிவான ஒழுக்க முறைக்கான விதிகளும் அம்மதத்தினரை படிப்படியாக பரிபூர்ணத்வத்திற்கு இட்டுச் செல்கிறது. துன்ப விடுதலைக்கான மார்க்கத்தை காட்டுவதில் ஜைனமதம் வேறு எம்மதத்திலும் தாழ்ந்ததல்ல.

இத்தகைய பரந்தநோக்கமும் விரிந்த அன்பும் நிறைந்த மதத்தைச் சில மதவெறியர்கள் தூஷிக்கிறார்கள். அவர்கள் சொல்லுவதென்னவெனில் "ஜைனமதம் கடவுளில்லை என்கிறது" என்பதே. நான் சொல்லுவதென்னவெனில் "அது தெய்வீகத்தன்மை நிறைந்தது" என்பதே. கடவுள் என்றால் என்னவென்றுதான் கேட்கிறேன். மனிதன் அடைய வேண்டுமென்று நினைக்கக்கூடிய உயர்ந்த லட்சியம் எதுவோ அதுதான் கடவுள். வேதாந்திகளின் கொள்கையும் அதுதான். ஆசைபந்தம் நீங்கின் ஆத்ம ஞானம், சக்தி, பூர்ணத்வம், ஆனந்தம் அடைகிறது. ஒவ்வொரு ஆத்மாவும் (நிர்ஜாராவை) கர்மபலனை ஜயித்து விட்டால் கடவுட்டன்மை அடைகிறது. பூர்ண பரிசுத்தமும் சுதந்திரமும் சமத்துவமும் அடைவதற்கு ஜைனமதம் தெளிவாக வழிகாட்டுகிறது. இத்தகைய பூர்ணமான தெய்வீகத்தன்மையடைவதற்கு இல்லறத்தானுக்கும் துறவறத்தானுக்கும் திட்டமான விதிகள் அதிலிருக்கின்றன. தத்வார்த்த சூத்திரத்தையும் த்ரவ்ய சங்கிரகத்தையும் ஆராய்ந்தால் ஜைனமதத்தின் மீதுள்ள கெட்ட அபிப்பிராயம் நீங்கும்: அப்பொழுது ஜைனமதம் தெய்வீகமான மதமென்பது தெரியும்.

"ஜைனமதம் நாஸ்திகமதமாதலினாலே அம்மதம் அருகி வருகிற"தென்கிறார்கள். ஆனால் ஜைனமதம், உலகத்தில் அன்பு என்பது இருக்கும்வரை இருக்கும் என்று நான் உறுதியாய்ச் சொல்லுகிறேன்.

ஒவ்வொரு மதத்திலும் உயிர்போன்று அதன் லட்சியங்கள் கலந்திருக்கின்றன. ஜைனர்கள் எண்ணிக்கையில் சிறுதொகையினராயிருந்தபோதிலும் அஹிம்சையுடனும் அன்புடனும் வாழ்கிறார்கள். இந்நாளிலும், எந்த ஜைனனும் மாமிசமாவது இரவில் ஆகாரமாவது சாப்பிடுவதில்லை. ஜைனர்கள் அநேகமாய் சுகதேகிகளாகவும் தைரியமுள்ளவர்களாகவும் யூகமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். பெரிய நூல்களிலெல்லாம் ஜைனமதம் நிரந்தரமான இடம்பெற்றிருக்கிறது. ஜைன குண்டகுண்டிய முனிவர் செய்த குறளில்லாவிட்டால் தமிழ் எது? ஜீவகசிந்தாமணி, நாலடியார், நன்னூல், முதலிய தமிழ் மாணிக்கங்கள் ஜைன முனிவர்களால் இயற்றப்பட்டவையல்லவா? சமஸ்கிருதமும் கூட ஜைன கலாவிற்பன்னர்களுக்கு கடமைப் பட்டிருக்கிறது. ஜைனமதம் இன்றும் உலகத்திற்கு வழிகாட்டியாக வாழ்ந்துவருகிறது. ஜைனமதம் குன்றி வருகிறதென்று யாரும் நினைக்கவேண்டாம். அது மனிதனின் எதிர்கால மதமாக விரிவடைந்து பெரிதாகி வருகிறது. அத்தகைய மதத்தை அவமதிப்பது உண்மையை அவமதிப்பதாகும்.

பாண்டிய மன்னன் ஜைன ஞானிகளை மிருகத்தனமாக வதைத்துக் கொலை செய்ததை எந்த ஜைனனும் மறக்கமுடியாது. இக்கொலை பாதகத்திற்குக் காரணம் சம்பந்தர் என்ற சமயாச்சாரியார் என்கிறார்கள். எந்த சமயாச்சாரியையும் கேவலப்படுத்த நான் எண்ணவில்லை. சுவாமி வேதாசலம் அவர்கள் சமீபத்தில் ராயபேட்டையில் செய்த சொற்பொழிவில் ௸ சம்பவமே நடக்கவில்லையென்று சொல்கிறார். ஜைனர்களைக் கொலை செய்ததாக இருப்பதை நம்பமுடியாதென்று புராணங்களிலிருந்தும் சரித்திரங்களிலிருந்தும் ஆதாரம் காட்டும் அவர், பெரிய புராணத்திலுள்ள அப்படலத்தை ஏன் பொசுக்கக்கூடாது. சைவர்கள் ஏன் கழுவேற்று உற்சவங்களை இன்னும் அனுமதிக்கிறார்கள். பிறமதத்தினரை தூஷிக்கக்கூடாது என்றும் பிறமதத்தினரை மரியாதையாக நடத்தவேண்டுமென்றும் சைவர்களுக்குப் பரந்த நோக்கம் இருக்குமாயின் அவர்கள் பிறர் சகிக்கமுடியாதபடி புண்படுத்தத்தக்க கழுவேற்று உற்சவத்தை உடனே நிறுத்த வேண்டுமென்று கதறவேண்டாமா? இவ்வுற்சவத்தைவிட வேறு என்ன அவமரியாதை ஜைனர்களுக்கு அவர்கள் இழைக்க முடியும். சைவ சகோதரர்கள் இனியாவது இவ்வவமரியாதையை—கொடுமையை--செய்யாது நிறுத்துவார்களா?

இன்னொரு அவமரியாதையென்னவெனில், கலாசாலைக்குத் தொகுக்கும் தமிழ் செய்யுட்களாகும். அவை ஜைனர்களை தூஷித்து பிறமத வெறியர்களால் பாடப்பெற்றவை. மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்கும் இன்டர்மீடியட் பரீக்ஷைக்கும் தொகுக்கப்பட்டிருக்கும் பாடபுத்தகங்களில் அவை ஏராளமாகக் காணப்படுகின்றன. எல்லா மதத்தினரும் அடங்கிய மாணவர்களுக்கு ஒரு மதத்தை தூஷிக்கக்கூடிய இத்தகைய பாடல்களை பாடபுத்தகங்களில் நுழைக்காமல் இருக்கத்தக்க ஏற்பாடுகளை கல்வி இலாகா அதிகாரிகள் செய்வார்களா? அன்பாகவும் சமாதானமாகவும் வாழும் ஒரு சமூகத்தாருக்கு-ஜைன சகோதரர்களுக்குச்-செய்த செய்து வருகின்ற கொடுமைகளை நீக்குவார்களென்று பொதுமக்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சைவ சகோதரர்களும் மானிட சமூகத்தின் நன்மையை உத்தேசித்தாவது ஜைனர்களை துன்புறுத்தாமலிருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சென்னை

# விதவா விவாஹ சகாய சபை.

இது வடநாட்டின்கண்ணுள்ள லாகூர் விதவா விவாஹ சபையின் ஓர்கிளைச் சபையாகும். காலஞ்சென்ற சர். லாலா கங்காராம் அவர்கள் நம இந்து சமூகத்தில் விதவைகளான இள மங்கையர்களின் துயரங்களைப் போக்குவான் விரும்பி அதற்கு வேண்டிய மூலதனத்தை உதவி ௸ லாகூர் விதவா விவாக சகாய சபையை நிருமாணித்தார். அச்சபையின் கொள்கைகளையும் அதன் பொதுநல ஊழியங்களையும் பெரும்பாலோர் அறிந்திருப்பரென நினைக்கின்றோம்.

௸ சபையின் கிளையொன்று நிர். 161, பிராட்வே, ஜி. டி, மதராஸில் அமைக்கப்பட்டிருக்கின்றது.

இதுவரையில் இச்சபையில் சுமார் 100 அங்கத்தினர்கள் சேர்ந்திருக்கின்றனர். இதுவரை சுமார் 220 புருஷர்களும் 55 ஸ்த்ரீகளும் இச்சபையின் மூலமாய் மறு மணம் செய்து கொள்ள விரும்பிச் சேர்ந்திருக்கின்றனர். மணமானவர்கள் நீங்கலாக இன்னும் 155 புருஷர்களும் 18 ஸ்திரீகளுமிருக்கின்றனர். இவர்களின் மணங்களுக்கு வேண்டிய பிரயத்தனங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

தற்சமயம் இக்காரியாலயத்தின் செலவுகளுக்கு தலைமை ஆபீஸ் லாகூரிலிருந்து சிறிது பணமே உதவப்படுகின்றது. அதனால் இதன் ஊழியத்தை இன்னும் விசாலப்படுத்த முடியாமல் இருக்கின்றது. மேலும் இச்சபையில் அங்கத்தினர்களுக்கு மாதச் சந்தா ஏற்படுத்தவில்லை. வருஷசந்தாவாகவும் அதுவும் அவரவர்கள் பிரியம்போல் ரூ. 1-க்கு குறையாமல் எவ்வளவேனும் செலுத்தலாம் என்று நிருமாணித்திருப்பதாலும் தக்க வருமானம் இல்லாமலிருக்கிறோம்.

இச்சபையின் அபிவிருத்தியை முன்னிட்டும், நம் இந்து பால்ய விதவைகளின் துயரத்தைக் குறைப்பதை முன்னிட்டும் யாம் இச்சென்னையின்கண் ஓர் விதந்து ஆசிரமம் (Widow Home) நிருமாணிக்க அவாவுறுகின்றோம். இந்த ஆசிரமத்தில், மணம் செய்துகொள்ள விரும்பும் விதவைகள் வந்து தங்கவும், அவர்கள் மணம்செய்து கொள்ளும் வரையில் அவர்களுக்கு வேண்டிய ஊண், உடை முதலிய சௌகரியங்களைச் செய்யவும் விரும்புகின்றோம். இவ்வாச்சிரமம் ஏற்படுவதினாலுண்டான நலம் சிறிது ஆழ்ந்து யோசிப்போர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனியென விளங்குமென நம்புகிறோம். ஆகையால் இவ்வுத்தம கைங்கரியத்திற்கு நாம் பொதுஜனங்களின் ஆதரவும், அன்பும், ஒற்றுமையும் வேண்டுகின்றோம். மகாஜனங்கள் எமது சபையில் அங்கத்தினர்களாய்ச் சேரவும் ௸ விதந்து ஆசிரமத்திற்குத் தங்களால் கூடிய பொருளுதவியைச் செய்யவும் வேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

நா. சின்னையன்.

## பந்தல்குடியில்
# பார்ப்பனக் கொடுமை.

சில ஆண்டுகளாக இவ்வூர் போர்டு ஸ்கூல் கிணற்றில் இக்கிராமத்தின் ஓர் பகுதியினர் தண்ணீர் எடுத்து வந்தார்கள், தற்சமயம் ஹெட் மாஸ்டராய் இருக்கும் ஒரு......... அய்யங்காருக்கு பார்ப்பனால்லாதார் அக்கிணற்றில் தண்ணீர் எடுப்பது பொறுக்கவில்லை. ஆகவே ஸ்கூலைச்சுற்றி சுவர் வைத்து கேட்டுக் கதவு போட்டு பூட்டி விட்டார். சென்ற இரண்டு வாரங்களாக மேற்குறித்த பகுதியினர்கள் தண்ணீர் எடுக்க முடியாமல் மிகவும் வருந்துகிறார்கள். பார்ப்பனரல்லாதாராகிய நம்மை ஏமாற்றித் தின்று யாதொரு தொழிலுமில்லாமல் சோம்பேறிகளாயிருக்கும் பிராமணர்களே நம் பாமர மக்களிடம் "தர்மம் செய்ய வேண்டும், சத்திரம் கட்ட வேண்டும், இவைகளில் பார்ப்பனர்களுக்குத்தான் முதலில் தர்மம் கொடுக்கவேண்டும்" என்று அநேக சாஸ்திரக்குப்பைகளை எழுதிவைத்திருக்க அப்படி எழுதிய வகுப்பினரைச் சேர்ந்த நமது ஹெட்மாஸ்டர் அய்யங்காரவர்கள் சாஸ்திரப்படி எல்லோருக்கும் பொதுவான ஏழூக் போர்டு கிணற்றில் நாம் தண்ணீர் எடுத்துச் சாப்பிடுவதை தடுப்பது பாவமென்று அறியாமலிருப்பதைப் பற்றி ஆச்சரியப்பட வேண்டியதில்லை. இந்த ஸ்கூலில் பார்ப்பனரல்லாதாராகிய நம் சகோதர உபாத்தியாயர்கள் பார்ப்பன ஆதிக்கத்திலுள்ளகப்பட்டுக்கொண்டு தம் குலத்தவராகிய பார்ப்பனரல்லாதார்களுக்கு தண்ணீர் எடுத்து சாப்பிட உதவிசெய்யாமல் வாளாவிருப்பது சரியல்ல. இனிமேலாகிலும் மேற்குறித்த பகுதியினர்கள் போர்டுஸ்கூல் கிணற்றில் தண்ணீர் எடுத்து சாப்பிடுவதற்கு பிராமணரல்லாத உபாத்திமார்களும் தாலூக்போர்டாரவர்களும் கவனிப்பார்களாக.

இந்த கிராமத்திலுள்ளவர்கள் விவசாயிகளாய் இருப்பதால் காலை 7 மணிக்குள் தண்ணீர் எடுத்துவைத்துவிட்டு காடுகளுக்குப் போய் மாலை 5 மணிக்கு வருவது வழக்கம். உபாத்திமார்கள் காலை 8 மணிக்கு ஸ்கூல் திறந்து மாலை 4-30 மணிக்கு பூட்டிவிடுகிறார்கள். கிணற்றில் தண்ணீர் எடுத்து சாப்பிடுவதால் ஹெட் மாஸ்டர்.........அய்யங்காரவர்களுக்கு எவ்வித நஷ்டம் மேற்படுகிறதென்று விளங்கவில்லை. நம் நாட்டில் சுயமரியாதை முழக்கம் மென்மேலும் அதிகரித்துக்கொண்டு வந்தும் இவ்வூரில் இதைப்பற்றிக் கவனிப்பார் ஒருவருமில்லை. சுயமரியாதையைப்பற்றி பார்ப்பனரல்லாதார்களுக்கு கற்பிக்க ஒருவரும் முன்வராததால் பார்ப்பனீயம் என்ற முட்புதரானது பாசி வளர்ந்துகொண்டே போகிறது. பல இடங்களில் சுயமரியாதை வீரர்கள் அநேகரிருந்தும் இவ்வூரில் இதுவரை ஒருவராவது வந்து பார்ப்பனீயமென்ற முட்புதரை வேரற வெட்டி சுயமரியாதை என்னும் முழக்கத்தை பரவச் செய்பவரில்லை. இனிமேலாவது 'குடிஅரசு' 'திராவிடன்' பத்திராதிபர்களாவது மேற்கண்ட விஷயத்தில் தலையிட்டு சுயமரியாதையைக் காக்கவேண்டுமென்று விரும்புகிறேன்.

ஜி ரங்கராஜு

## வருஷாப்திகத்தில்
## மானமிழந்த புரோகிதப் பார்ப்பான்

ஈரோடு 'நாவிதத்தெரு'வில் வசித்துவந்த பொங்காளி பண்டிதர் தம் ஜீவியகாலத்தில் தம் தொழில் விர்த்தியால் ரூ. 500 சம்பாதித்து அர்பன் பாங்கியில் டிபாஸ்டு செய்துவிட்டு சென்ற வருடத்தில் காலமாகிவிட்டார். அவரது வருஷ கிரிகை நடத்த அவரது மனைவி ஷை பாங்கியில் ரூ. 10 வாங்கி அரிசி பருப்பு உப்பு புளி முதலிய சாமான்களை சேகரித்துக்கொண்டு ஒரு புரோகித பார்ப்பானைக் கூப்பிட்டதில் அன்னவன் "மற்றவகுப்பினரின்வருஷாப்திகத்துக்கு ரூ. 20 வாங்கிவிடுவேன்" என்றும் "நாவிதஜாதிக்கு வருவதாயிருந்தால் அதற்கு மேல் கொடுத்தால்தான் வருவேன்" என்றும் சொன்னதின்பேரில் அம்மாது பன்முறை வணங்கி கேட்கவே, அப்புரோகிதன் 10ரூபாயாவது தரவேணுமென்றும் கடைசியாக ரூ. 5க்குக் குறைந்தால் வரமுடியாதென்றும் சொன்ன நிமித்தம் மருதாயம்மாள் சம்மதித்தவுடன் புரோகிதன் அவரது இல்லம்புக்கு புரோகிதம் செய்து அளிக்கப்பட்ட சாமான்களைப் பெற்று வந்து தம்பதி சகிதம் விலாபுடைக்க தின்று சுகித்தனன்.

"நாவிதனை" தொட்டு விட்டாலும் சாணகத்தைக் கரைத்து தலையில் ஊற்றிக் கொள்வதும் துணிமணிகளை அப்புறப்படுத்தி பூணூலைக் கழற்றிவிட்டு வேறு பூணூலும் துணிகளும் அணிவதும், ஆதிதிராவிடர்களின் நிழல் தம் தேகத்தில் பட்ட மாத்திரத்தில் தம் தேகத்தைக் கழுவுவதுமான பார்ப்பன வர்க்கத்தில் சேர்ந்த இந்த புரோகித பார்ப்பான் 'நாவிதன்' ஜலத்தால் புரோச்சனை செய்து அளிக்கப்பட்ட உப்பு புளி புருக்க வயிற்றுக்கு என்ன சிகிச்சை செய்துகொண்டானோ அறிவதற்கில்லை.

நிற்க, மக்களை ஏமாற்றி பிணம் பிடுங்கும் கழுகுபோல் பொருள் பறிக்கும் பார்ப்பனப் புரோகிதரை இன்னமும் நமதுபிதுர்களுக்கு "மோக்ஷம்" தேடவும் நம்மக்களுக்கு விவாகசடங்குகள் நடத்தவும் அழைக்கலாமா என்பதை பண்டிதர்களாகிய நாம் இனியாவது உணர்ந்து கண் விழிக்கலாகாதா.

குலாபிமானி.

## சுயமரியாதைப் பிரசாரம்

2—9—28 ஞாயிற்றுக்கிழமை காலை ஸ்ரீ சச்சிதானந்தர் அவர்கள் கடவுளைப்பற்றியும் கடவுள் நெறியைப் பற்றியும் அரிய உபந்நியாசம் செய்தார்கள். அதற்கு ஆதாரமாக 26—8—28உ "குடி அரசு" பத்திரிகையில் வெளிவந்த "பெரிய புராணம் என்னும் கட்டுரையை திரு. சுந்தரம் என்பவரால் சபையில் வாசிக்கப்பட்டது. பின் ஷை சமாஜம் உதவி சிக்ரட்டரி திரு. பிச்சையபிள்ளையவர்கள் நமது இயக்கத்துக்கும் மக்கள் அறியாமையை நீக்குவதற்கும் ஆதாரமாக "குடி அரசு" ஆசிரியர் பெரியார் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் செய்துவரும் நன் முயற்சியைப் பாராட்டி கடவுள் வணக்கத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

திருநெல்வேலி. சுந்தரம்.

## பார்ப்பனீயமொழிந்த திருமணமும் நன்கொடையும்

திருநெறித் தொண்டராய திருவளர் சா சிவசுப்பிரமணிய பிள்ளை அவர்களின் மைத்துனர் திருவளர்செல்வன் க ஆ நாராயண பிள்ளைக்கும், திரு சிதம்பரநாத பிள்ளையவர்களின் புதல்வி திருவளர் செல்வி கலியாணி அம்மாளுக்கும் 18—1—104-ல் பார்ப்பனீயமின்றி திருமணம்முடித்து வைக்கப்பட்டது.

பின் பெரியோர்களால் மண மக்களுக்கு வாழ்த்துக் கூறப்பட்டதும், சுயமரியாதைத் தொண்டராய மாப்பிள்ளை நமது "திராவிடன்" "குடி அரசு" இதழ்களுக்கு முறையே 2-வெண்பொற்காசுகளும் 3-வெண்பொற்காசுகளும் நன்கொடையாக வழங்கினர்.

இங்கே நிகழ்ந்த திருமண நிகழ்ச்சியை நேரில் பார்த்த அன்பர்கள் அனைவரும் இனி தம் வீடுகளில் நடத்தப் போகும் விசேடங்களை பார்ப்பனீயமின்றியே நடத்தவேண்டுமென தீர்மானித்துக் கொண்டார்கள்.

இவ்வூர், பார்ப்பனீயத்திற்குப் பேர் போன திருவாங்கூரைச் சேர்ந்தது என்பதையும் நம் வாசகர்களுக்கு நினைப்பூட்டுகிறேன்.

"மகிழ்ச்சியுறுவோன்"

## மாடுதின்னும் பார்ப்பனர்.


ஸ்ரீமான். ம பாலசுப்ரமண்ய முதலியார் B A B L அவர்கள் தமது வட இந்திய சுற்றுப்பிரயாணத்தில் பார்த்தவைகளைப்பற்றி எழுதினதில் "காளிகட்டம்" என்றதலைப்பில் எழுதுவதாவது:—

ஹூக்ளி நதிக்கரையில் காளி காட் என்ற ஒருகாளிகோயில் இருக்கிறது. இதில் நாடோறும் நடக்கும் உயிர்ப்பலிக்கு அளவேயில்லை. பலியிட்ட ஆடுமாடுகளைப் பக்குவப்படுத்திக் காளியின்சந்நிதியிலேயே வங்காளப்பிராமணர்கள் உண்ணுகிறார்கள். தவிர, பொதுவாக வங்காளத்திலுள்ள நான்கு வருணத்தாரும் காளியின் பெயரைச் சொல்லி மாமிச உணவை உட்கொள்கிறார்கள். காசி முதலிய கங்கைக் கரையிலுள்ள நகரங்களில் வதியும் பெரிய வைதிக பிராமணர்களும் கங்காபுஷ்பம் என்று மீன் வர்க்கத்தை கூசாமல் அருந்துகிறார்கள் "நவசக்தி"

## திரு. காந்திமதிநாத பிள்ளை திருவுருவப்படத் திறப்புவிழா

காலஞ் சென்ற திருவாளர் ராவ் சாகிப் வி பி காந்திமதிநாத பிள்ளை பி ஏ அவர்களுடைய திருவுருவப் படத்தை, திருநெல்வேலி ஜில்லா போர்டு தலைவரான திவான் பகதூர் எல் குமாரசுவாமி ரெட்டியார், பி ஏ, பி எல், எம் எல் சி அவர்கள், செப்டம்பர் மீ 10-உ திங்கள் கிழமை காலை 9 மணிக்கு அம்பா சமுத்திரம் தாலூக்கா போர்டு ஆபீசில் திறந்துவைப்பார்கள்.

ஒரு நிருபர்



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு

ஈரோடு விபவ-ஷூ ஆவணி மீ 25-௳

## நாம் செய்த "துரோகம்."

சுயமரியாதை இயக்கத்தின் பலனாய், அரசியலின் பேரால் வாழ்ந்து வந்தவர்களுக்கெல்லாம் இந்தச் சமயம் நமது நாட்டில் சகல சவுரவங்களும் செல்வாக்குகளும் அடியோடு போய்விட்டதுடன் இது சமயம் அரசியல் என்பதில் சம்மந்தப் பட்டிருக்கின்றவர்கள் என்பவர்களெல்லோரும் சுயநலக்காரரும் வயிற்றுப் பிழைப்புக்காரரும் சிறிதும் நாணயமும் யோக்கியதையும் அற்றவர்கள் என்ற சங்கதியும் பாமர மக்கள் யாவருக்கும் தெரிந்துவிடவே அரசியல் பிழைப்புக்காரர்களின் ஆர்ப்பாட்டங்கள் கொஞ்ச நாளாகவே நமது நாட்டில் தலை காட்ட யோக்கியதை இல்லாமல் போய்விட்டது என்பது யாவரும் அறிந்ததே யாகும். உதாரணமாக இது சமயம் தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் யார் என்பதையும் அரசியல் பிரதிநிதிகள் யார் என்பதையும் அவர்களுக்கு நாட்டில் உள்ள யோக்கியதை என்ன என்பதையும் கவனித்தால் இவ்விஷயம் யாருக்கும் சுலபத்தில் விளங்காமல போகாது.

தவிர, இப்பொழுது எங்கு அரசியல் மீட்டிங்கு போட்டாலும் எங்கு அரசியல் மகாநாடு கூட்டினாலும் அங்கு தலைவர்களும் பேசுபவர்களும் அபிப்பிராயம் கொடுப்பவர்களும் யார் என்று பார்ப்போமேயானால் திருவாளர்கள் குழந்தை, அமீத்கான், பஷீர் அஹம்மது, குப்புசாமி முதலியார், அண்ணாமலை பிள்ளை முதலியோர்கள் ஆகிய இவர்களோடேயே சகல அபிப்பிராயங்களும் சகல பிரதிநிதித்துவங்களும் நின்றுவிடுகின்றன. சில சமயங்களில் வழக்கம்போல் மற்றும் இரண்டொரு ஆசாமிகளின பெயர்களும் அடிபடுகின்றன. அந்த இரண்டொரு ஆசாமிகளும், பொது ஜனங்கள் தங்கள் பெயரை மறந்துவிடாமல் இருப்பதற்காக ஏதாவது ஒரு வகையில் விளம்பரம் ஆகவேணுமே என்கின்ற கவலையின் பேரில் எங்கு கூட்டம் நடந்தாலும் அங்கெல்லாம் தாங்களும் இருப்பதாக தங்கள் பெயர்களை உபயோகித்துக் கொள்ள மாத்திரம் உத்திரவு கொடுத்துவிட்டு எந்தக் கூட்டத்திலும் தலை காட்ட வெட்கப்பட்டுக் கொண்டு தலை மறைவாகவே திரியவேண்டியவர்களாகி விட்டார்கள்.

ஆகவே நமது நாட்டு அரசியல் வாழ்வின் யோக்கியதைக்கு இதைவிட வேறு உதாரணம் வேண்டியிருக்காது என்றே நினைக்கின்றோம்.

அரசியலில் சம்பந்தப்பட்ட ஆசாமிகளின் யோக்கியதைதான் இப்படி யென்றால், அரசியலில் அடிபடும் சங்கதிகளைப்பற்றியோ வென்றால், அது இதைவிட மோசமானதும் வெட்கக் கேடானதுமென்றே சொல்லித் தீர வேண்டும். ஏனெனில் எந்த சங்கதியை அரசியல் விஷயமாக எடுத்துக் கொண்டால் பாமர மக்களை ஏமாற்றலாமோ-எந்தச் சங்கதியை எடுத்துக் கொண்டால் யோக்கியர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்களோ-எந்தச்சங்கதியை எடுத்துக் கொண்டால் பார்ப்பனரல்லாதார்கள் கலந்துகொள்ள முடியாதோ-அந்த நாணய மற்றதும் யோக்கியதையற்றதும் உபயோக மற்றதுமான சங்கதிகளை எடுத்துக்கொண்டு, அதை ஒரு பிரமாதமான சங்கதிபோல் செய்து, அதன் மூலமாய் பாமர மக்களை ஏமாற்றி எலக்ஷன்களில் தாங்கள் வெற்றி பெற்று பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்தலாம் என்பதாகவும், அப்பார்ப்பன ஆதிக்கப்பிரசாரகர்களாகவும் கூலிகளாகவும் இருந்து வயிறு வளர்க்க மார்க்கம் கிடைக்கும் என்பதாகவும் கருதி அதற்கேற்ற வண்ணமான சூழ்ச்சிகள் தயாரிப்பதாக இருக்கின்றதே யல்லாமல் வேறு யோக்கியமானதும் பொது மக்களுக்கு உபயோகமானதுமாக ஒன்றுமே கிடையாது என்பதை நாம் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை.

உதாரணமாக இன்றையத் தினம் அரசியல் துறையில் முக்கியமானதும் செல்வாக்கு பெற்றதுமான பிரசினை என்பது சைமன் கமிஷன் பகிஷ்காரம் என்கின்றதான பொருளற்றதும் நாணயமற்றதுமான ஒரு விஷயம். அதைப்பற்றி சுமார் 5, 6 மாத காலமாக நடந்துவரும் கலவரங்களை அறியாதாரில்லை. தேசியத் தலைவர்கள் என்பவர்களும் தேசிய பத்திரிகைகள் என்பவைகளும் எல்லாம் ஒரே அடியாய் கூடி பேசிக்கொண்டு "சைமன் கமிஷன் பகிஷ்காரத்திற்கு நாடு முழுவதுமே அனுகூலமாயிருக்கின்றது. ஏதோ இரண்டொரு சர்க்கார் பிரசாரகர்கள் மாத்திரந்தான் சைமன் கமிஷனுக்கு அனுகூலமாயிருக்கின்றார்கள்" என்று எழுதியும் பேசியும் வந்தார்கள்.

கடைசியாக இப்போது அந்த ஆசாமிகளும் பத்திரிகைகளும் தாங்களாகவே தங்களின் புரட்டுப் பலிக்கவில்லை என்று தெரிந்து கொண்டு "சீ இந்தப் பழம் புளிக்கும்" என்பதுபோல் "சைமன் கமிஷனை பகிஷ்கரிப்பதால் லாபம் ஒன்றும் இல்லை. பகிஷ்கரிக்காவிட்டால் நஷ்டம் ஒன்றும் இல்லை" என்று சொல்ல வந்துவிட்டதுடன் "சைமன் கமிஷன் பகிஷ்காரம் என்பது பெரிய தொல்லையாகிவிட்டது" என்று ஒப்புக்கொண்டு விட்டார்கள்.

ஆகவே இதை திடீரென்று விட்டு விட்டாலும் அக்கூட்டத்தார்களின் வாழ்க்கைக்கும் வேறு வழி இல்லை. ஆகையால் செத்த பாம்பை ஆட்டுவதுபோல் மேலும் மேலும் சைமன் பகிஷ்காரம் என்பதைப்பற்றி பேசிக்கொண்டாவது இருக்கவேண்டி யிருக்கின்றது. இப்பேர்ப்பட்ட சைமன் பகிஷ்காரம் இந்தியாவிலுள்ள ஏறக்குறைய எல்லா மாகாண சட்ட சபைகளிலும், அதாவது பொதுஜன பிரதிநிதித்துவ சபை என்று இதுசமயம் எல்லா அரசியல் வாதிகள் என்பவர்களும சொல்லிக்கொள்வதான சட்ட சபைகளிலும், சைமன் கமிஷனுடன் ஒத்துழைப்பதென்றும், அதற்கு கூடவே இருந்து உதவிசெய்ய பொது ஜனப்பிரதிநிதி என்பவர்களுக்குள்ளாக இருந்தே ஒவ்வொரு மாகாணத்திற்கு ஒவ்வொரு கமிட்டி இருக்கவேண்டும் என்றும் ஏற்பாடாகி அந்தப்படிக்கே கமிட்டிகளும் தெரிந்தெடுக்கப்பட்டாய்விட்டது. இனி கமிஷனை பகிஷ்கரிப்பவர்களோ ஆட்சேபிப்பவர்களோ யார் என்பதுதான் கண்டுபிடிக்கப்படவேண்டிய காரியமாகிவிட்டது. ஒரு சமயம் காங்கிரஸ்காரர்கள்தான் ஆட்சேபிக்கின்றார்கள் என்று சொல்லப்படுமானால், அக் காங்கிரஸ்காரர்களுக்கு நாட்டில் செல்வாக்கில்லை என்பதற்கும் அக்காங்கிரஸ் அபிப்பிராயத்தை நாட்டுமக்கள் லட்சியம் செய்யவில்லை என்பதற்கும் இதைவிட வேறு சாட்சி தேவை இல்லையென்றே சொல்லுவோம்.

இவ்வாரம் சென்னையில் நடந்த சட்டசபைக் கூட்டத்தில், அதாவது காங்கிரஸ்காரர்கள் தேசியவாதிகள் என்பவர்கள் அதிகமாக இருக்கின்றார்கள் என்று காங்கிரஸ்காரர்களாலும் தேசீயக்காரர்களாலும் அவர்களது பத்திரிகைகளாலும் காங்கிரசுக்கு வெற்றி தேசியத்திற்கு வெற்றி என்று சொல்லிக்கொண்ட சட்ட சபையில் சைமன் கமிஷனுடன் ஒத்துழைக்கவும் உதவி செய்யவும் ஒப்புக்கொண்டு கமிட்டியும் (அதிலும் போட்டியுடன்) நியமிக்கப்பட்டாய்விட்டது.

இதற்கு அரசியல் பிழைப்புக் காரர்கள் ஒரு சமாதானம் தான் சொல்லக்கூடும். அதாவது "ஜஸ்டிஸ் கட்சியின் துரோகம்" என்பதுதான். அப்படிச் சொல்வதானால் அவர்களை நாம் ஒரு கேள்வி கேட்கின்றோம். அதாவது இந்தியாவிலுள்ள மாகாணங்கள் எல்லாம் கமிஷனுடன் ஒத்துழைக்க சம்மதித்து கமிட்டி நியமித்துக் கொண்டதற்கு யாருடைய துரோகம் காரணம் என்று கேட்கின்றோம்.

தவிர இந்தியாவிலுள்ள 'சர்வகட்சி'யாரும் பார்லிமெண்டுக்கு அனுப்ப என்று ஒரு திட்டம் தயாரித்துவிட்டார்களே, இதற்கு யாருடைய துரோகம் காரணம் என்று கேட்கின்றோம்.

இந்து சபையார்கள், மகமதிய சபையார்கள், கிருஸ்துவ சபையார்கள், தாழ்த்தப்பட்டவகுப்பு சபையார்கள், வருணாசிரம வகுப்பு சபையார்கள், பார்ப்பன சபையார்கள் ஆகிய எல்லோரும சைமன் கமிஷனிடம் ஒத்துழைக்க சம்மதித்து ஏறக்குறைய எல்லோரும் ஒவ்வொரு திட்டம் தயாரிக்

கின்றார்கள். இதற்கு யாருடைய துரோகம் காரணம் என்று கேட்கின்றோம்.

"காங்கிரஸ்" தலைவர்கள் என்பவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு திட்டம் தயாரித்து வைத்துக்கொண்டு அவற்றை சைமன் கமிஷனுக்கு அனுப்பவில்லை என்று சொல்வதானாலும் சைமன் கமிஷனுடைய அப்பனான பார்லிமெண்டுக்கு போய்ச் சேரும்படி செய்து வருகின்றார்களே, இதற்கு யாருடைய துரோகம் காரணம் என்று கேட்கின்றோம்.

எனவே, சைமன் கமிஷனையோ அதன் தகப்பனான பார்லிமெண்டையோ பஹிஷ்கரிக்கின்றவர்கள் யாராவது இந்த நாட்டில் இருக்கின்றார்களா என்று எந்த யோக்கியனாவது சொல்லமுடியுமா என்று கேட்கின்றோம்.

ஒரு சமயம் யாராவது ஒன்று இரண்டு 'துறவி' இருக்கலாம். அதைப்பற்றி நமக்கு கவலை இல்லை. ஏனெனில், 'துறவிக்கு வேந்தன் துரும்பு', எதுபோல் என்றால், ஒருகாலத்தில் நாணயவிகித மாறுபாடுகள் ஏற்பட்டபோது மக்கள் எல்லோரும் ஒவ்வொரு பாங்கியின் நிலைமையைக் குறித்தும் கவனித்து வந்தார்களாம். ஏனெனில் அவர்கள் ஜீவநாடியான செல்வங்களை எல்லாம் பாங்கியில் போட்டு வைத்திருக்கின்றவர்களானதால் எந்த பாங்கி முறிந்து விடுமோ என்று ஒவ்வொருவரும் கவலைப்பட்டுக்கொண்டு பாங்கி வர்த்தமானத்தை கவனித்த வண்ணமாகவே இருந்தார்களாம். அந்தச்சமயத்தில் ஒருமனிதன் "எந்தபாங்கி முறிந்துபோனாலும் நான் மாத்திரம் சிறிது கூட கவலைப் படமாட்டேன்" என்று பெருமை பேசிக்கொண்டானாம். இதைப்பார்த்த பலர் "இவன் ஒருபெரிய பிரபுவாக இருக்கலாமோ அல்லது எவ்வளவு நஷ்டம் வந்தாலும் கலங்காத வீரனாக இருக்கலாமோ" என்று கருதிக்கொண்டு அவனுடைய யோக்கியதைகளை அறிய ஆசைப்பட்டு விசாரித்ததில், அவன் பரம பாப்பர் என்றும், எந்த பாங்கியிலும் அவனுக்கு ஒரு காசுகூட இருப்பு இல்லை என்றும், அதனால் தான் அவன அவ்வளவு "தைரியமாயும்" "வீரமாயும்" "எந்த பாங்கு முறிந்தாலும் நான் ஒரு சிறிதும் கவலைப்படமாட்டேன்" என்றும் சொன்னான் என்பதாகத் தெரிந்து கொண்டார்களாம்.

எனவே, இப்போது சைமன் கமிஷனை பஹிஷ்கரிப்பதாக ஏதாவது ஒன்று இரண்டு ஆசாமிகளாவது இருக்கிறதாகச்சொல்ல ஏற்படுமானால் அவர்கள் மேற்கண்ட தைரியவானைப்போன்ற 'துறவி'யாகத்தான் இருக்கவேண்டும்.

சைமன் கமிஷனை பஹிஷ்காரம் செய்யாத எவரும் இப்பேர்ப்பட்ட 'துறவி'களின் அபிப்பிராயத்தை லட்சியம் செய்து தாங்கள் ஏதாவது துரோகிகளாகிவிட்டோமா என்பதாக சந்தேகப் படவேண்டியதில்லை என்பதே அறிவுடைமை என்பதை எடுத்துக் காட்டுகின்றோம். மற்றபடி இதில ஏதாவது துரோகம் உண்டா என்பதாக கேட்பார்களானால், ஆம் ஒரு வழியில் துரோகம் என்றே சொல்லுவோம், அதென்னவெனில், பார்ப்பன ஆதிகத்திற்கும், பார்ப்பன ஆதிக்கக்

## காங்கிரஸ்காரர்களின்
# துரோகம்.

தென்னிந்திய ரயில்வே தொழிலாளர்கள் வேலை நிறுத்த சம்மந்தமாக சர்க்காரார் ரயில்வே அதிகாரிகளுடன் சேர்ந்துகொண்டு தொழிலாளர்களை இம்சைப்படுத்தி வருவதைப்பற்றி சென்னை சட்ட சபையில் விவாதிப்பதற்காக மற்ற விஷயங்களை ஒத்திப்போட வேண்டுமென்று ஒரு அவசரப் பிரேரேபணை கொண்டுவரப்போவதாக கோயமுத்தூர் திரு. சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் பத்திரிக்கைகளுக்கு தெரிவித்திருந்தது யாவரும் அறிந்தவிஷயமேயாகும். இதை அறிந்த காங்கிரஸ்காரர்கள் என்னும் அரசியல் பிழைப்புக் கூட்டத்தார்கள் திரு முதலியார் இந்தப் பிரேரேபணையைக் கொண்டுவந்து பேசுவார்களேயானால் பார்ப்பன சூழ்ச்சியும் தேசியப்புரட்டும் காங்கிரஸ் குட்டும் வெளியாகிவிடுமே என்பதாகக் கருதி திரு. சத்தியமூர்த்தி மூலம் திரு. முதலியாரால் இப் பிரேரேபணை பிரேரேபிக்கக் குறிப்பிட்டிருந்த காலத்திற்கு முன்னதாகவே தாங்கள் பிரேரேபிக்கப் போவதாக நோட்டீஸ் கொடுத்தார்கள், இதை உண்மை என்று நம்பிய முதலியாரும் மற்றும் தொழிலாள அனுதாபிகளும் அதில் கலந்துகொள்ளத்தீர்மானித்தத் தாங்கள் பிரேரேபிப்பதற்கென்று தனிச் சமயம் கேட்காமல் இருந்துவிட்டார்கள். இந்த நிலையில் திரு. சத்தியமூர்த்தி அவர்கள் பொறுப்பில்லாமல் தங்கள் சூழ்ச்சிக்கு ஏற்றவிதமாய் ஒருதீர்மானத்தை எழுதிக் கொடுத்துவிட்டு அதைப் பிரேரேபிக்கும் போது அதற்கு விரோதமாய் பேசத் தொடங்கினர். அப்போது சட்டசபை அக்கிராசனர் திரு. சத்தியமூர்த்தியைத் தீர்மானத்தை அனுசரித்துப் பேசவேண்டு மென்று சொன்னாராம், இதைஒரு சாக்காகவைத்துக் கொண்டு திருசத்தியமூர்த்திஉடனே நாம் இத்தீர்மானத்தைப் பிரேரேபிக்கின்றதில்லை என்று சொல்லி உட்கார்ந்து கொண்டார். உடனே தலைவர் அடுத்த விஷயத்திற்குப் போய்விட்டார். அடுத்த நாள் திரு. சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார் தாம் முன் தெரிவித்திருந்த ஒரு தீர்மானத்தை அனுப்பினார். இதை சட்ட சபைத் தலைவர் "இத்தீர்மானம் திரு. சத்தியமூர்த்தியால் நேற்றே கொண்டுவரப்பட்டு அவரால் பின்வாங்கிக் கொள்ளப்பட்டதால் அதே காரியத்திற்கு இன்று மறுபடியும் இடம்கொடுக்கப்படமாட்டாது" என்றும் வேறு இரண்டு அவசரப் பிரேரேபணைகள் கொண்டுவரவேண்டியிருக்கின்றதென்றும் ஆதலால் சமயம் இல்லையென்றும் சொல்லிவிட்டாராம.

இந்தக் காரணங்களால் நல்ல ஒரு சமயம் வீணாகப் போய்விட்டது. பொது நிலையில் இருந்து யோசித்துப் பார்த்தால், திரு. சத்தியமூர்த்தி அவர்கள் தீர்மானம் கொண்டு

வந்ததும் அவர் அதை பின் வாங்கிக்கொண்டதும் முன் ஏற்பாட்டுடன் செய்த சூழ்ச்சியென்றே சொல்ல வேண்டும்.

'சட்டசபைத் தலைவர் "தீர்மானத்திற்கு கட்டுப்பட்டுப் பேசுங்கள்" என்று சொன்னால் இதில் தப்பிதம் என்ன என்றும், அதற்காக திரு. சத்தியமூர்த்தி தீர்மானத்திற்கு கட்டுப்பட்டு பேசாமல் தீர்மானத்தையே வாபீசு வாங்கிக்கொள்ள வேண்டிய அவசியம் என்னவென்பதையும் யோசித்தால் விளங்காமல் போகாது.

ஒரு சமயம் அக்கிராசனர் அப்படிச் சொன்னதில் ஏதாவது குற்றமிருந்தாலோ அல்லது வேறு காரணங்கள் இருந்து தீர்மானத்தை அனுசரித்துப் பேச திரு. சத்தியமூர்த்திக்கு முடியாமல் போயிருந்தாலோ திரு. சத்தியமூர்த்தியவர்கள்பேச்சு ஒன்றுமில்லாமல் தாம் ஏற்கனவே எழுதிக்கொடுத்து அக்கிராசனரால் ஒப்புக்கொண்டபடி தீர்மானத்தை படித்துச்சொல்லி அதைப் பிரேரேபிப்பதில் உள்ள ஆக்ஷேபனை என்ன என்று கேட்கின்றோம். தவிர "அப்படியானால் நான் பேசவில்லை" என்றாவது சொல்லிவிட்டு தான் சும்மா உட்கார்ந்து கொள்ளாமல் "நான் தீர்மானத்தைக்கூட பிரேரேபிப்பதில்லை" என்று சொல்லவேண்டிய அவசியமென்ன என்று கேட்கின்றோம். எனவே இச்சம்பவம் "தானும் குடிக்காமல் வேறு யாரையும் குடிக்கவொட்டாமல் வீணாய் கீழே கவிழ்த்துவிட்ட துரோகக்காரன்" செய்கைக்கு ஒப்பாக இருக்கின்றதா இல்லையா என்று கேட்கின்றோம்.

அன்றியும் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை எப்படியாவது கெடுத்து அவர்களை அடியோடு தொலைக்க வேண்டும் என்கின்ற கருத்துடனே காங்கிரஸ்காரர்களும் தேசியக்காரர்களும் அவர்களது பத்திரிகைகளும் ஏஜண்டிடம் விலை பேசிக்கொண்டு தொழிலாளர்களுக்கு பரிகாரம் செய்ய முடியாத துரோகம் செய்து விட்டார்கள் என்பதை திரு. சத்தியமூர்த்தி அவர்களின் செய்கை ஆதரிக்கின்றதா இல்லையா என்று கேட்கின்றோம்.

முதலாவது, யாரோ பல போக்கிரிகளும் காலிகளும் சேர்ந்து ரயில் வண்டியைக் கவிழ்த்துவிட, தென் இந்தியா ரயில்வே தொழிலாளர்கள் செய்து விட்டார்கள் என்று அவர்கள் மீது பழி சுமத்தி. தொழிலாளர்களை அக்கிரமமாகப் பிடித்து அடைக்கச் செய்தது ஒரு குற்றம்.

இரண்டாவது, வேலை நிறுத்தம் தோல்வி அடைந்துவிட்டது என்று பொய்யான செய்தியைக் கட்டிவிட்டது ஒரு குற்றம்.

மூன்றாவது, இவ்விஷயம தெரிந்தே வேண்டுமென்றே தொழிலாளர் வேலை நிறுத்தத்தை கெடுக்கக் கருதி "வேலை நிறுத்தம் முறிந்துவிட்டது" என்று பத்திரிகைகளில் போட்டு கட்டுப்பாட்டை உடைத்து சின்னாபின்னப்படுத்தியது ஒரு குற்றம். இன்னும் இது போல் பல குற்றங்களும செய்துவிட்டு இவ்வளவும் போதாமல், இதைப்பற்றிய அக்கிரமங்களைப்பற்றி பொது ஜனங்கள் அறியும்படி செய்ய சட்டசபையில் பேசி ஏதாவது ஒரு காரியம் செய்யலாம் என்றால் அ

கூலிப் பிரசாரத்திற்கும் சந்தேகமில்லாத துரோகம்தான், ஆனால், இந்த துரோகத்தை ஒவ்வொரு உண்மைப்பார்ப்பனரல்லாதாரும் செய்யவேண்டும் என்பதே நமது வேண்டுகோள்.

ங்கு விவகரிக்கப்போது இந்த துரோகங்கள் எல்லாம் வெளியாகிவிடுமே என்கின்ற காரணத்தைக் கொண்டு வேறொருவர் தீர்மானம் கொண்டுவராமல் தடுப்பதற்காக, ஒரு தீர்மானம் கொண்டு வருவது போல வேஷம் போட்டு, மற்றவர்களுக்குள்ள சந்தர்ப்பங்களைக் கெடுத்து இம்மாதிரி மோசம் செய்வதென்றால் இதற்கு என்ன பெயர் கொடுப்பது என்பது நமக்கு விளங்கவில்லை.

தங்களாலேயே "உபயோகமற்றது" என்று சொல்லப்படும் சைமன் கமிஷனுடனும், "யார் ஒத்துழைத்தாலும் ஒன்றும் முழுகிப் போய்விடாது" என்று சொல்லப்படும் சைமன் கமிஷனுடனும், இந்திய மக்கள் பிரதிநிதிகள் என்பவர்களால் ஒத்துழைக்க தீர்மானித்த சைமன் கமிஷனுடனும் ஒத்துழைப்பது என்பதற்கு துரோகம் என்றும் சர்க்கார் தாசத்தனம் என்றும் சொல்வதானால் இந்தமாதிரி அயோக்கியத் தனமும் கொலைபாதகத்தனமும் பொருந்திய இபபெரு மோசத்திற்கு என்ன பெயர் கொடுப்பது என்பது தான் நமக்கு விளங்கவில்லை. மனப்பூர்வமாய் 30000, 40000 ஜீவன்கள் கஞ்சியில்லாமல் தவிப்பதுடம் சாதுக்களும் நிரபராதிகளு முள்பட 200, 300 பேர்கள் ஜெயிலில் அடைக்கப்பட்டு 10-வருஷம் 20-வருஷம் தண்டிக்கப்படத்தக்க குற்றங்கள் சுமத்தப்பட்டு விசாரணையில்லாமலும் ஜாமீனில் விடாமலும் கொடுமைப் படுத்தப்படுவதுமாயிருக்கும் இச்சமயத்தில் இதைப்பற்றி பாருக்கும் எவ்வித கவலையுமில்லாமல், கவலைப்படுகின்றவர்களையும் அவர்களால் கூடியதைச் செய்யவொட்டாமல் தடுத்துக்கொண்டும் இருப்பதானால், இந்தக் கூட்டத்தார் "காங்கிரஸ்" காரர்கள் என்றும் "சுயராஜ்யக்" காரர்கள் என்றும் "தேசியக்" காரர்கள் என்றும் 'பூரண சுயேச்சை' க்காரர்கள் என்றும் சொலலிக்கொள்ளுவதானால், இந்த நாட்டில் சூட்சிக்காரர்களுக்கும், வஞ்சகக்காரர்களுக்கும், வழைகளைக் காட்டிக் கொடுத்து வயிறு வளர்க்கும் துரோகிகளுக்கும் இன்னமும் இடமிருக்கின்றது என்கின்றதாக ஏற்படுகின்றதா இல்லையா என்று கேட்கின்றோம்.

அன்றியும் இந்தக் கூட்டத்தார்கள் தங்களை தங்களோடு சேராத மற்றவர்களைப் பார்த்து தேசத் துரோகிகளென்று சொல்லுகிறவர்களாக இருக்கின்றார்கள் என்பது தெரிகின்றதா இல்லையா என்று கேட்கின்றோம்.

எனவே முடிவாக இனியாவது பாமர மக்கள் உண்மையை உணர்வார்களா என்று கேட்கின்றோம்.

---

## திரு. நாயக்கர்.

திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் நிகழும் செப்டம்பர் மாதம் 4-ஆம் தேதி இரவு புறப்பட்டு சென்னை சென்று அங்கு 5, 6 ஆம் தேதிகளில் பொதுக் கூட்டங்களில் பேசிவிட்டு 6 ஆம் தேதி இரவு சென்னையிலிருந்து புறப்பட்டு 7 ஆம் தேதி காலை ஈரோடு வந்து அன்றிரவே பட்டிவீரன்பட்டிக்கு திருவாளர் பெரியதம்பி நாடாரவர்கள் வீட்டுச் சுயமரியாதைத் திருமணத்திற்குப் புறபபட்டுவிட்டார். 11, 12 ஆம் தேதி வாகில் ஈரோடு திருமபுவார்.

## திரு சண்முகம் செட்டியாருக்கு வரவேற்பு.

டாக்டர் நாயர் கல்வி கழகத்தார் 5-9-28ல் திருவாளர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களுக்கு கழகத்தின் சார்பாகச் சென்னை பச்சையப்பன் மண்டபத்தில் ஒரு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்தனர்.

அக் கூட்டத்திற்கு மாணவர்களும் மற்றையோரும் பெருந்திரளாக வந்திருந்தனர். முக்கியமாக திருவாளர்கள் சி. என். ரத்தின சபாபதி முதலியார், சிதம்பரநாத முதலியார், சாமி வெங்கடாசலம் செட்டியார், சுரேந்திரநாத் ஆரியா, கே. ஆர். சேஷய்யங்கார், ஈ. வெ. ராமசாமி நாயககர், ஜே. என் கண்ணப்பர், ரங்கய்ய நாயுடு, தண்டபாணி பிள்ளை முதலானவர்களும் மற்றும் பல பிரமுகர்களும் வந்திருந்தனர்.

திவான்பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியார், எம். எல். சி. அவர்கள் தலைமை வகித்தார். தலைவர் ரெட்டியார், திருவாளர்கள் ஆர். கே. சண்முகம் செட்டியார், சுரேந்திரநாத் ஆரியா, ரங்கய்ய நாயுடு, ஈ. வெ. ராமசாமி நாயக்கர் முதலியவர்கள் பேசினார்கள். (விபரம் பின்னால் வெளிவரும்)

## வந்தனத்துடன் ஏற்றுக்கொண்டோம்.

29-8-28ல் வடகரையில் ஆம்பூர் பார்ப்பனரல்லாத வாலிப சங்கத்தலைவர் உயர்திரு வாளர் வெ மாணிக்க முதலியார் அவர்களின் செல்வி அரங்கநாயகிக்கும் திருவாளர் அ பெரியசாமி முதலியார் அவர்களின் செல்வன் துரைசாமிக்கும் நடைபெற்ற திருமணத்தின் நன்கொடை ரூபா ஒன்றும் 2-9-28ல் குடியாத்தம் நகர திராவிட மகாஜன சங்கத்தின் தலைவர் உயர்திருவாளர் சிருவேல் துரைசாமி செட்டியாரவர்களின் இல்லத்தில் உயர்திரு டி எம் கிருஷ்ணசாமி செட்டியார் அவர்களின் செல்வி கௌரம்மாளுக்கும், திரு நாராயணசாமி செட்டியார் செல்வன் சின்னசாமிக்கும் நடைபெற்ற திருமணத்தின் நன்கொடை ரூபா ஐந்தும் ஆக ரூ. ஆறும் வந்தனத்துடன் வரப்பெற்றோம்,

## புதுப்பாலத் திறப்புவிழா.

அம்பாசமுத்திரம் தாலூக்காவைச் சேர்ந்த ஆழ்வார்குறிச்சி கிராமத்திலுள்ள கடனா நதியில் புதியதாக கட்டப்பட்ட தோணிப்பாலத்தை சிங்கம்பட்டி ஜமீன்தார் ஸ்ரீ டி. என். எஸ். தீர்த்தபதி அவர்கள் செப்டம்பர்-மீ 10-உ திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு திறந்துவைப்பார். கிராமவாசி.

திருச்சி ஜில்லா, லாலுகுடி தாலூகா
பல்லவபுரம் மணிவாசகர் கழகத்தின்

## இரண்டாம் ஆண்டு நிறைவுவிழா.

நிகழும் விபவ-ஆண்டு ஆவணித்திங்கள் 24-ம் நாள் (8—9—28) சனிக்கிழமையன்று இச்சங்கத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா திருச்சி "மணிவாசகத்தமிழகம்", திருவாளர் கி ஆ பெ விசுவநாத பிள்ளை அவர்களின் தலைமையின்கீழ் ஸ்ரீ மாரியம்மன் கோவில் முன்னிலையில் இனிது நடைபெற்றது,

அவ்வமயம் பல பேரறிஞர்கள் சிறந்த விரிவுரைகளை நிகழ்த்தினார்கள்,

மணிவாசகர் கழகத்தினர்,

## "விஸ்வநேசன்" காரியாலயம் திறப்புவிழா,

செப்டம்பர் மீ 5-உ மாலை ஆறரை மணிக்கு ஈரோடு பழையமார்க்கெட் வீதியிலிருக்கும் திரு ஈ. வெ ராமசாமி நாயக்கர் அவர்கள் கட்டிட மேல்மாடியில், "விஸ்வநேசன்" காரியாலயம் திறக்கப்பட்டது.

பல விஸ்வகாமா பிரமுகர்களும், மற்றும் இதர பிரமுகர்களும் வந்திருந்தனர். திரு டி. எஸ். மாரிமுத்து ஆசாரியவர்களின் தலைமையில் ஒரு மகாநாடு நடைபெற்றது. அப்பொழுது திருவாளர்கள் எம் எ ஈஸ்வரர், எஸ் டி சுப்ரமணியம், என் நல்லைய ஆச்சாரி, ராஜூ ஆச்சாரி, சுப்பண்ணாச்சாரி, இவர்கள் பத்திரிக்கையின் அவசியத்தைப்பற்றியும், தொழிலாளர் இயக்கத்தைப்பற்றியும், சமூகசீர்திருத்தத்தைப்பற்றியும் பிரசங்கம் செய்தார்கள்

பிறகு, "விஸ்வநேசன்" பத்திரிகையை நடத்த திருவாளர்கள் டி எஸ் மாரிமுத்து ஆச்சாரியார், ராஜூ ஆச்சாரியார், ஈ எஸ் அர்த்தநாரி ஆச்சாரியார், சின்னசாமி ஆச்சாரியார், செங்காமலை ஆச்சாரியார், என் நல்லைய ஆச்சாரியார், சுப்பண்ணாச்சாரியார் ஆகிய ஏழுபேர்களடங்கிய கமிட்டி ஒன்று ஏற்படுத்தப்பட்டது. திரு. சுப்பண்ணாச்சாரியாரை ஆசிரியராகவும், என் நல்லைய ஆச்சாரியாரை வெளியிடுபவராகவும் ஏற்படுத்தப்பட்டது. அக்கிராசனர் முடிவுரைக்குப்பின் திரு என் மாரியப்பா அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது.

## பார்ப்பனீயமற்ற உத்தரகிரியை

திரிசிரபுரம் நகராண்மை கழகத் தலைவராக இருந்த ஸ்ரீமான் பி ரெத்தினவேலு தேவர் அவர்கள் சிற்றன்னையார் தேகவியோகமானதை முன்னிட்டு அன்னாருடைய அந்தியக்கிரியை நாளது ஆவணித் திங்கள் பதினொன்காம் நாள் பௌன்னி நதிக்கரையில் பார்ப்பனப் புரோகிதமின்றி நடைதப்பெற்றது

டி சி எஸ் சிவன்

---

வைக்கம் வீரர்,

## E. V. R. லஞ்ச் ஹோம்.

# Non-Brahmin Hostel.

பிராமணரல்லாதார் சிற்றுண்டிசாலை.
14/225 ராஜ வீதி, கோயமுத்தூர்.

## விஞ்ஞாபனம்.

தேசபக்தியும, செந்தமிழ் விருப்பமும், பத்திரிகாபிமானமும், சுயமரியாதையும் மிகுந்த நம்ம பிராமணரல்லாத சகோதரர்களுக்கு ஓர் விஞ்ஞாபனம்.

வைககம் வீரர் E. V. R. லஞ்சுஹோம் என்ற விலாசம் வைத்து பிராமணரல்லாதார் ஹாஸ்டல் ஏற்பாடு செய்திருப்பதால், அபனூர் பிராமணரல்லாத சகோதரர்களுக்கு வேண்டிய இடவசதி, வெந்நீர் ஸ்நாந வசதி வகையறு உள்பட எல்லாசௌகரியமும் ஏற்பாடு செய்திருப்பதால் பிராமணரல்லாத சகோதரர்கள் யாவரும் எங்கள் ஹாஸ்டலுக்கு ஒருமுறை விஜயம் செய்யவேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிககு,

சுயமரியாதைத் தொண்டன்

மலேயா நாட்டு

## எப். எம். எஸ். ரயில்வே தொழிலாளர் மகாநாடு.

19--8--28:

முதலாவது தீர்மானம்.

A. தொழில் முறையில் தொழிலாளர்களுக்குள் பிரித்து நிர்வாகம் நடத்தி வருவதும் ஒரு இனத்தில் ஒரே மாதிரியான வேலை செய்யும் தொழிலாளிகளில் சம்பள விகித வித்தியாசமும் சலுகை வித்தியாசமும் காட்டி வருவதும் பொருளற்றதாயும் எதேச்சாதிகாரமானதாயும் ஆதியில் வெளியிட்ட விளம்பரத்துக்கு மாறுனதாயும் இருப்பதால் இச் செயற்கையான வித்தியாசத்தை உடனே நீக்கிவிடும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

B. சம்பள விகித வித்தியாசமிருந்து வருவதுமன்னியில் 'அங்கங்கேயே எப்போதும் இருந்து வரவேண்டும், அவர்கள் மாற்றப் படலாகாது' என்று உத்திரவு பிறப்பித்து இருப்பதானது எங்களுடைய முன்னேற்றத்தை தடைப் படுத்துவதாக இருக்கிறது. எனவே, உடனே அதை நீக்கிப் போட்டுப் புதிதாக ஒன்று திருத்தி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

இரண்டாவது தீர்மானம்,

தொழிலாளர்களின் பிரசண்ட் ஆப்சண்டுகளை கவனித்து இன்கிரீஸ் கொடுக்கப்பட வேண்டும். இவ்விஷயமாய் விண்ணப்பங்கள் செய்தும் நிர்வாகம் செவிடாய் இருந்துள்ளமையினுல் இக் குறைகள் உடனே நிவர்த்திக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

மூன்ருவது தீர்மானம்.

A. தொழில் சாமர்த்தியங்களை கவனியாது ஆங்கிலம் தெரிந்தவனு என்று மட்டும் கவனித்து மேல் பதவி கொடுத்து வரும் முறை மிகவும் குருட்டுத் தன மானதாயிருக்கிறது. எனவே உடனே இம் முறை திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

B. குறைந்த சம்பளம் பெற்று ஜீவித்து வரும் தொழிலாளர்களின் குழந்தைகள் ஆங்கிலந் தெரியாது என்ற காரணத்தைக் கொண்டு அப்பிரின்டிசாக எடுக்கப் படாததால் ஏழைத் தொழிலாளர்களின் குழந்தைகள் எவ்வேலையும் தெரிந்துகொள்ள ஹேதுவின்றித் தவித்து வருகின்றனர். எனவே இதை உடனே நீக்கி தொழிலாளர்களின் குழந்தைகள் அப்பிரின்டிசாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற விதி ஏற்படுத்த வேண்டுகிறோம். மேலும் 1926-ம் ஹுப மேன்மை தங்கிய சீப் செக்ரடெரி அவர்களின் உத்தரவுப்படி தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுக்க நாளிதுவரை முயற்சித்ததாகத் தெரியவில்லை. எனவே இக் குறை நீக்கப்பட வேண்டும்.

நான்காவது தீர்மானம்.

தொழிலாளர்கள் கீழ் அதிகாரிகளால் குற்றம் சாட்டப்படும் பொழுது மேல் அதிகாரிகள் அதை விசாரிக்காமலே அப்படியே ஏற்றுக்கொள்வதை விட்டு, குற்றம் சாட்டப்பட்டவர்கள் தங்கள் நிர் அபாரதத் தன்மையை நிரூபிக்கத் தருணம் அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

ஐந்தாவது தீர்மானம்.

A. வேலையாட்களுக்கென வெளியே ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் மருந்துச் சாலை எங்களுக்கு பிரயோசன மளிக்கக்கூடியதாய் டைம் ஆபீசுக் கருகில் கட்டப்படவேண்டும் அல்லது மணிதிட்டம் மாற்றப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

B. வியாதியஸ்தர்களுக்குக் கொடுக்கப் படும் சூராவின் தன்மையும் அதன் சட்டமும் சில சமயங்களில் மிக்க பாதித்து விடுகிறது இவ்வளவுதான் தொகையுண்டு என்று மெடிகல் ஆபீசருக்குத் தெரிவிப்பதால் வியாதி தீர்வதற்கு முன்பே பெயர் வெட்டப்படுகிறது. சில சமயங்களில் சூரா கொடுபடாமலே உனக்கு இங்கு பணமில்லை என்ற காரணத்தைக் காட்டுகின்றனர். எனவே இதை திருத்தி எங்களுக்கு சௌகரிய மளிக்கக்கூடிய விதமாய் இருந்து வரச்செய்ய வேண்டுகிறோம்.

ஆருவது தீர்மானம்.

வீட்டுச் சேவாத் திட்டம் ஏற்பட்டிருந்தும் குடும்பஸ்தனில்லையென்று சொல்லி ஒரு வீட்டில் மூன்று நான்கு பேர்களைச் சேர்த்து சுகாதாரத்திற்கு விரோதமாக அடைத்து வைத்து விடுவது நிறுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஏழாவது தீர்மானம்.

எங்கள் தொழிலாளர்களுக்காக பிராவிடண்டு பண்டு ஒன்று தயாரிதது எங்களில் விருப்பமானவர்களை அதில் சேர்த்து அதன் நன்மையை அளிக்க வேண்டுமென்று 'வேண்டுகிறோம்.

---

## வெண்ணந்தூர் கலைமகள் கழகம் முதலாவது ஆண்டு விழா.

நிகழும் விபவ வருஷம் ஆவணி மாதம் 26. 27 [1928 வருஷம் செப்டம்பர் மாதம் 10 11-ம் தேதி திங்கள் செவ்வாய்க் கிழமைகளில் இவ்விழா வெண்ணந்தூர் முத்துக்குமார சுவாமி கோவிலில் செந்தமிழ்ப் புலவர் இராசிபுரம் திருவாளர் பொன்முடி எஸ் பொன்னுசுவாமி செட்டியாரவர்களின் அவைத் தலைமையின் கீழ் நடைபெறும். அச்சமயம் அறிஞர் சிலர் அரிய சொற்பொழிவுகள நிகழ்த்துவார்கள்.

அன்பர்கள் தம் தம் நண்பர் கூட்டத்துடன் விஜயம்செய்தருளி சொற்பொழிவுகளைச் செவிமடுதது இன்புற்று விழாவைச் சிறப்பிக்கவேண்டுகின்றனம். காரியதரிசிகள்,

---

## திருநெல்வேலி தாயம்மையம்மாள் பெண்கல்விச்சாலை 19வது ஆண்டு பரிசளிப்பு விழா,

மேற்படி விழா ஸ்ரீமதி மீனுக்ஷியம்மாள் அவர்கள் B A தலைமையின்கீழ் சிறப்பாக நடந்தது. அவ்வமயம் பல பிரமுகர்களும் வந்திருநதார்கள். முக்கியமாக நமது தமிழ் நாட்டில் திருநெல்வேலி ஜில்லா பெண்மக்கள் பெருந்திரளாய் மேற்படி கூட்டத்திற்கு வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. சுந்தரம்,

---

## பார்ப்பனியமொழிந்த சடங்குகள்

திருப்பரங்குன்றம்.

1 மேலூர் தாலூக்கா நத்தம் பாலப்பநாய்க்கன்பட்டி குருவா செட்டியார் மகன் ராமசாமி செட்டியாருக்கும் ஷை யூர் ராமசாமி செட்டியார் மகள் வீரம்மாளுக்கும்,

2. திருமங்கலம் தாலூக்கா சித்தூர் கிராமம் தாசரி செட்டியார் மகன் பெருமாள் செட்டியாருக்கும் பாலப்பநாயக்கன்பட்டி குருவா செட்டியார் மகள் குருவம்மாளுக்கும், திருப்பரங்குன்றம் செட்டியார்கள் மடத்தில் 2—9—28 ல் மங்களகரமாக, சுயமரியாதைக் கலியாணம் நடந்தேறியது. அப்பொழுது நானும், ஆவல் சூரம்பட்டி சு. செ. நா. கோபால்சாமி செட்டியாரும் சிவல்பட்டி கோ. அழகர்சாமி செட்டியார் மகன் கோ. அ. கோபாலகிருஷ்ண செட்டியாரும், மடத்துக் காரியதரிசி ஆர். கந்தசாமி செட்டியாரும் இன்னும் பல பிரமுகர்களும் இதை ஆதரித்து முன் நின்று நடத்தினேம். நல்லமநாயக்கன்பட்டி ருமாரசாமி செட்டியார் தகுந்த சிரத்தைகொண்டு, சுயமரியாதை உணர்ச்சியை ஊக்கத்தோடு பரப்புவதற்கு பட்ட அரிய பாட்டை நண்பர்கள் என்றென்றும் போற்றுவார்கள்.

நா. சு. செ. துரைசாமி செட்டியார்
சக்கிலநத்தம்.

---

நாகூர்

(29-8-28) புதன்கிழமை காலை நாகூர் ஆதிதிராவிட சங்க அங்கத்தினர் திருவளர். செல்வன் இலட்சுமண பிள்ளைக்கும் திருவளர் செல்வி பக்கிரி அம்மாளுக்கும் உயர்திரு உலகநாதசுவாமி அவர்களால் தமிழ் மொழியிலேயே, எல்லா மந்திரங்களும் கூறப்பட்டு திருமணம் சிறப்பாய் நடத்திவைக்கப் பட்டது.

அப்போது திராவிட சங்க அங்கத்தினர்களும் மற்றும் பல கனவான்களும் வந்திருந்து மணமக்களையும் மணமகளையும் வாழ்த்தி மகிழ்ச்சியடைந்தார்கள்.

மணமகன் அவர்களால் திராவிடசங்கத்திற்கு அணா எட்டு நன்கொடை அளிக்கப்பட்டது. பகல் சம பந்தி போஜனம் நடத்தப்பட்டது. எம். ராஜமாணிக்கம்.

---

பணகுடி

ஸ்ரீமான். திரு. லெட்சுமண பிள்ளை அவர்கள் இவ்விடத்துக்கு வந்து பிரசங்கம் செய்ததின் பின்பு நாளது ஆவணி மாதம் 16 உ வெள்ளிக்கிழமை பணகுடி திரு வைகுண்ட கோனூர் அவர்கள் குமாரர் திரு பெருமாள் கோனூருக்கும் திருவிதாங்கூர் குலசேகரம் புதூர் திருமலைநம்பிகோனூர் அவர்கள் குமாரத்தி சௌபாக்யவதி சுந்தரம்மாளுக்கும் மணமகன் இல்லத்தில் பார்ப்பனப் புரோகிதமின்றி திருவாளர் காசுக்கடை இராமசாமி கோனூர் அவர்களைக் கொண்டு திருமணம் விமரிசையாய் நடந்தேறியது.

அ. அழகு கவுண்டர்.

---

**மநு (அ) நீதியைப் படித்து பார்ப்பன (அ) நீதியை உணர்,**

7-ம் பக்கத் தொடர்ச்சி.

என்ன சொல்லிய போதிலும் நம்பி விடுகிறார்கள். சொல்லியதை நம்பா விட்டால் அது ஒரு குற்றமென்றும், கடவுள் கட்டளைக்கு மாறாக நடப்பதாகவும் எண்ணிக்கொள்ளுகிறார்கள். நம்மவர்களில் பெரும்பாலோர் நம்பிக்கையே மதமென்று கருதுகிறார்கள். குறுகிய நோக்குடன் நாம் கடவுளின் தோற்றத்தை பாவித்துக் கொள்ளுகிறோம். இருட்டில் தனியாகச் செல்லும் ஒருவன் எவ்வாறு தன் கண் முன்பாக கோரங்களும் பயங்கரமான பிசாசுகளும் தோன்றுவதாகப் பாவனை செய்துகொண்டு அவைகளுக்குப் பயப்படுகிறானோ அதேபோல் நம் கடவுள் இரண்டு மூன்று தலைகளையுடையவரென்றும் பத்துப் பன்னிரண்டு கைகளை யுடையவரென்றும் அவர் கையில் பாபம் செய்தவர்களைக் கொல்ல வாளேந்தியிருக்கிறார் என்றும் அவர் கழுத்தில் மண்டை ஓட்டை மாலையாகக் கோர்த்துப் போட்டுக்கொண்டிருக்கிறார் என்றும் பாவனை செய்துகொண்டு சுபாவத்திலேயே பயந்தவர்களாகி விட்டோம். இது நம்முடைய குறுகிய மனப்பான்மையையே காட்டுகிறது. அறிவுக்குத்தக்கவாறே ஒவ்வொருவருக்கும் கற்பனா சக்தி அமைகிறது. மிருக பலமும் முரட்டுச் சுபாவமும் உள்ள ஒரு அநாகரீகன் கடவுள் உருவத்தில் பருத்தவராகவும் நிறத்தில் கருத்தவராகவும் சிவந்த கண்களை உடையவராகவும் கோரமான சிங்கப் பற்களை உடையவராகவும் அதிக கோபமுள்ளவராகவும் சிறு பிழைக்கும் பெரிய தண்டனை விதிப்பவராகவும் நரபலியை விரும்புபவராகவும் இருப்பதாக எண்ணி அதைப்போன்றதொரு உருவம் செய்து அதற்குப் பலியிட்டு வணங்குகிறான். புஜபல பராக்கிரமமுள்ள ஒரு போர்வீரன கடவுள் சிறந்த வலிவுள்ளவராகவும் அவர் உலகத்திலுள்ள அசுரர்களையும் அரக்கர்களையும் எதிர்த்துப் போர் செய்கிறார் என்றும் அபயமென்று அடைந்தவர்களை அன்பாக ஆதரிக்கிறார் என்றும் எண்ணிக் கொள்கிறான். பரந்து விரிந்த அறிவுடைய ஒருவன், கடவுள் மனிதர்களின் தந்தை யென்றும் அவர் எங்கு மிருக்கிறார் என்றும் மனிதர்கள் தெரியாமல் செய்தவைம் பிழைகளை அவர் பெரிதாக மதியாமல் மன்னித்துவிடுகிறார் என்றும், அன்பு சொரூபமாகவே விளங்குகிறார் என்றும் பாவனைசெய்து கொள்கிறான். ஆனால் அறிவுடையதொரு நாஸ்திகனோ கடவுள் என்ற தனிப்பொருள் இல்லையென்றும் இருக்கமுடியாதென்றும், அவரிடத்திலிருந்து மனிதருக்கு யாதொரு விதமான நன்மையோ தீமையோ இல்லையென்றும் இயற்கையே உலகத்தையும், உலகத்திலுள்ள பொருள்களையும் ஆலோசியாமலும் பயன் கருதாமலும் படைத்துக் காத்து வருகிறதென்றும், மனிதனுக்குக் கர்த்தாவும் கடவுளும் அவனேதானென்றும் சொல்லுகிறான். மனிதனைக் காக்கின்ற இயற்கையை வென்ற ஆத்ம ஞானிகள் கடவுளும் தாமும் ஒன்றேயென்று கருதுகிறார்கள்.

இவைகளை எல்லாம் ஒன்று சேர்த்து அறிவைக்கொண்டு ஆராய்வோமேயானால் கடவுள் மனிதனைப்போல இருக்கிறார் என்று சொல்லமுடியாது. அவருடைய குண குணம் இன்னதென்று கூற முடியாது. கடவுள் என்ற பேரைக் கேட்டவுடன் மனக்கண் முன் உருவம் ஒன்றும் தோன்றாது. கடவுள் ஒருவர் உண்டென்பதை அனுபவத்தில் தானே அறிந்துகொள்ளாமல் கடவுள் இவ்விதம் இருக்கிறார் என்று நாம் நம்ப முடியாது. புராணங்களின் உதவியால் கடவுள் தன்மையை அறிந்துகொள்ளமுடியாது. ஒருவன் உலகவிவகாரங்களையும் கவலைகளையும் ஒருவாறு ஒழித்துக்கொண்டு ஜன சஞ்சாரமில்லாத ஒரு இடத்திற்குச் சென்று அமைதியாக உட்கார்ந்து கண்களை மூடி அறிவைப் பல விஷயங்களில் பிரவர்த்திக்க விடாது தனது தன்மையைத் தானே உணர ஆரம்பித்தானேயானால் அவன் தன்னுள் ஏதம் பொருந்திய சக்தியொன்று இருக்கக் காண்பான். இவ்வித இயற்கை சக்திகள் ஒன்றுசேர்ந்ததே கடவுள். இதை ஆராய்ந்த அநுபவமுடைய அறிஞர்கள் ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்கிறார்கள். நாஸ்திகன் என்று பலரால் தூற்றப்படுகின்ற அறிஞர் இங்கர்சாலும் கடவுளைப்பற்றிய நீண்டதோர் ஆராய்ச்சியை இத்தகைய முடிவுக்குத்தான் கொண்டுவருகிறார்.

(தொடரும்) "திராவிடன்"

## உடையார்பாளையம் தாலுக்கா போர்டு தேர்தல்

மேற்படி போர்டுக்குட்பட்ட அழகாபுரம் பிர்க்காவிற்குள்ள இரண்டு மெம்பர் ஸ்தானங்கள் காலியாக இருந்தபடியால் அதற்கு ஆண்டிமடம் நூல் ஜவுளி வியாபாரியும் பிரபல மிராசுதாரரும் கிராம பஞ்சாயத்துக் கோர்ட்டு பிரசிடெண்டும் கோவாப்பரேட்டிவ் கிரெடிட் சொசைட்டி யூனியன் பிரசிடெண்டுமான திருவாளர் ஆ. ந. கு. சிவசிதம்பர முதலியார் அவர்களும் கூவத்தூர் மிராசுதாரர் திரு. மு. ரெத்தினசாமி படையாச்சி அவர்களும் அங்கத்தினர்களாக 31-8-28ல் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஷை தேர்தல் மிகவும் உற்சாகமாகவும் யாதொரு கலசமுமில்லாமலும் நடந்தது குறிப்பிடத் தக்கது.

ஒரு நிருபர்.

## புரோகிதம் ஒழிந்த சடங்குகள்.

1. மதுரைஜில்லா நிலக்கோட்டை தாலூக்கா திம்மலப்பட்டி திரு. கா. அ. வெங்கடாசலம் பிள்ளை சகோதரன் திரு. அருணாசலம் பிள்ளைக்கு நாளது ௵ நாளது ௴ 14-உ புதன்கிழமை யன்று ஷையூரில் ஷையார் கிருகத்தில் பார்ப்பனப் புரோகிதமின்றி ஸ்ரீ சொக்கய்யா பிள்ளையவர்களால் திருமணம் நடத்தப்பட்டது. அன்று மித்திர பந்து ஜனங்களுக்கும் ஏழைகளுக்கும் விருந்தளிக்கப்பட்டது. மு. சு. வீர அளகப்ப பிள்ளை.

2. ஈரோடு டவுன் கருங்கல்பாளையத்திலிருக்கும் நஞ்சபண்டாரம் என்பவர் ஆடி-௴ பத்தாம் தேதி விண்ணுலகெய்தினர். அவருடைய கருமாதி வகையறாக்களில் பார்ப்பனர்களை அறவே நீக்கி அன்று வீட்டை மெழுகி சுத்தம் செய்து இறந்தவரின் ஞாபகார்த்தமாக ஏழைகளுக்கு அன்னம் போட்டனர். ஏழைகள் வயிறு நிறைய சாப்பிட்டு இறந்தவரை மனமாரவும் வாயாரவும் வாழ்த்தினர். கே. ஏ. வேலாயுதம் பிள்ளை.

3. திருவானைக்காவல் மிராசுதார் திரு. கந்தசாமி பிள்ளை என்பார் தமது தந்தையின் ஆண்டு நிறைவுவிழாவை நிகழும் பிரப ௵ ஆவணி-௴ 12-உ (27-8-28) யன்று சுயமரியாதை கொள்கைப்படி ஏழைகளுக்கு உணவளித்து முடித்தார்.

4. திருச்சிகோட்டை சின்னக்கடை தெருவு கொல்லமேட்டுச் சந்திலிருக்கும் திரு. வேலாயுதம் பிள்ளை என்பார் தமது பாரியாள் இறந்ததை முன்னிட்டு 28-8-28-ல் நடத்திய உத்தரகிரியை பார்ப்பனரின்றி நடத்தப்பட்டு ஏழை மக்களுக்கும், பந்துக்களுக்கும் உணவளிக்கப்பட்டது. S. நரசிம்மம்.

5. அறுப்புக்கோட்டையை அடுத்த கோவிலாங்குளம் திரு. ஞா. சி. கணபதி ராமசாமியவர்கள் சுமார் 10 வருஷமாக பார்ப்பானைக்கொண்டு நடத்திவந்த தமது தகப்பனார் திதியை இவ்வருஷம் ஆடி-௴ 16-தேதி பார்ப்பனரை ஒழித்து ஏழைகளுக்கு அன்னமிட்டு முடித்தார்.

ச. வு. சொ. சோமய்யா.


## சேலம் ஜவுளிகள்.

வேஷ்டிகள்.

அசல் 80-ம் நெ. நூல் வேஷ்டிகள். பல வர்ணங்களில் நேர்த்தியான பார்டர் போட்டது கால் அங்குல அரை அங்குல பட்டுகரைகளில் அசல் வெள்ளி ஜரிகையினால் கொடி, இலை, பூ, காய்கள் சித்திரிக்கப்பட்டு உடுத்திக்கொள்ளுவதற்கு நாகரீகமாயிருக்கும். நீடித்து தாங்கக்கூடியவை. 50 அங்குல அகலத்தில் 8 நீளத்திலும் முழம் 1-க்கு ரூ. 1-12-0, 2-0-0, 2-8-0, 3-0-0.

நேரே உற்பத்தி செய்யுமிடம் இது ஒன்றே. புதுமாதிரி தினுசுகள் மிகவும் குறைந்தவிலைக்கு உத்திரவாதத்துடன் உங்கள் வீட்டுக்கே சேர்ப்பிக்கிறோம். தபால் சிலவு இனாம். உடனே எழுதுங்கள்.

சேலைகள்.

நேர்த்தியான ஜரிகைபார்டர் போட்ட பல வர்ண அசல் 60 நெ. நூல் சேலைகள். தினந்தோறும் துவைத்துக் கட்டலாம். சாயத்திற்கு உத்திரவாதம். கனம் இல்லாத நூல் புடவை இது ஒன்றுதான். 42 அங்குல அகலம் 7 கஜ நீளம் விலை ரூ. 14—0—0.

சேலம் ஷண்முகம் கம்பெனி லிமிடெட்,
மெயின் ரோட், சேலம். (தெ. இந்தியா.)

## நிலக்கோட்டையில் பிராமணீயமொழிந்ததிருமணங்கள்

நிலக்கோட்டையில் நிகழும் விபவ-ஹு ஆவணி-மீ 14-உயில் 1 ஸ்ரீமான் மு.சா.பெ. காமாக்ஷி நாடார் அவர்கள் குமாரத்தி செளபாக்கியவதி குருவம்மாளுக்கும் பட்டிவீரன் பட்டி ஸ்ரீமான் ஒ. வெ. பொன்னுச்சாமி நாடார் அவர்கள் குமாரன் திருவளர் செல்வன் கிருஷ்ணபாண்டிய நாடாருக்கும், 2. ஸ்ரீமான மு.சா.கருப்பையநாடார் அவர்கள் குமாரத்தி செளபாக்கியவதி ராஜம்மாளுக்கும், பட்டிவீரன்பட்டி ஸ்ரீமான் குருநாத நாடார். அவர்கள் குமாரன் திரு. ஆதிமுத்து நாடாருக்கும் நடைபெற்ற திருமணங்கள் பிராமணப்புரோகித மில்லாமல் பட்டிவீரன் பட்டி பிரபல தனவந்தரான திரு. ஊ. பு. அ. அய்யநாடார் அவர்களால் சிறப்பாய் நடத்தப்பெற்றன. இது முதல் இன்னகர் நாடார். குலமக்கள் பிராமணப் புரோகிதமில்லாமல் திருமணங்கள் முதலியவைகளை நடத்துவதாகத் தீர்மானித்திருக்கிறார்கள்.

எஸ். பி. எஸ். செட்டியார்.


## அசல் வெள்ளி நகைகளை வாங்குங்கள்.

அசல் வெள்ளியினால் தயார்செய்த அருணக்கொடி கினுசுகள், கொலுசுகளில் சாதா செயின், முத்து செயின், பட்டையடித்த செயின், ஒட்டியாணம், காப்பு கடகம், மயிர் மாட்டி. பீலி, அருப்பு சங்கிலி, சாவிச் சங்கிலி, கம்மல், தோடு, கடுக்கன், மோதிரம், இதர தங்கம், வெள்ளி நகைகளும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு குறைந்த விலைக்கு கிடைக்கும். விபரத்திற்கு எழுதவும்:

**S. K. மாணிக்கம் செடி,**
தங்கம், பவுன், வெள்ளி
நகைகள் வியாபாரம்,
செவ்வய்பேட்டை, சேலம்.



அன்பார்ந்த நண்பர்களே!

மனதிலுள்ள விஷயங்களை இங்கிலீஷில் வாக்கிய ரூபமாய் வெளிப்படுத்திப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் சாதகமாய் உபயோகப்படக் கூடியது

"ட்ரான்ஸ்லேஷன் கைட்"

என்னும் புஸ்தகம் ஒன்றுதான். ஏனெனில், இங்கிலீஷ் இலக்கண விதிகளையும் மொழிபெயர்ப்பின் தத்துவங்களையும் விஸ்தாரமாய் எடுத்துக்காட்டி உதாரணங்கள் சகிதம் யாவருக்கும் அனுபோகத்தில் பயன்படும்படிக்கான முறையில் இப்புஸ்தகம் எழுதப்பட்டுள்ளது. விலை அணு 10. வி. பி. சார்ஜ் அணு 4.

நீலகண்டம் புக் டிப்போ,
கயத்தார் P. O.
(திருநெல்வேலி ஜில்லா.)


**சுயமரியாதை பெற்றால் சுயராஜ்யம் பெறலாம்.**




# இழந்த பலத்தை திரும்பக் கொடுக்கும்

## மன்மத கோலாகல குளிகை.

அநேக பரிசுகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது. தாதுபுஷ்டிக்கு நிகரற்றது. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். இழந்த ஆண்மையும், பலமும் திரும்பவரும். நல்ல ஜீரணம், ரத்த விர்த்தி, இந்திரியக்கட்டு, போக சக்தி, தாது புஷ்டி இவற்றை தரவல்லது. எவ்வித பலஹீனம் தாது நஷ்டம், தரிதஸ்கலிதம், இடுப்பு வலி, உஷ்ணரோகங்கள் நீங்கும். ஒருமுறை பரீக்ஷித்தவர்களுக்கே இதனருங்குணம் விளங்கும். 120-குளிகை ரூ. 10—0—0, 60-குளிகை ரூ. 5-0-0 30-குளிகை ரூ. 3—0—0 20-குளிகை ரூ. 2—0—0.

### குருநாக பஸ்பம்—மூலத்திற்கு,

ஆப்ரேசன் அவசியமில்லை; மூளை தானே கரையும்; சீழ் மூலம், ரத்த மூலம், குத்தல், மூலமுளை, மல பந்தம் முதலிய மூலம் ஒன்பதுவும் அதிசீக்கிரம் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம். 1-மண்டலம் 48-நாள் பஸ்பம் ரூ. 30—0—0. 24-நாள் பஸ்பம் ரூ. 15—0—0. மாதிரிக்கு 6-நாள் புட்டி 1-க்கு ரூ. 4—0—0.

### பிரமேக நிவாரணி

நாட்பட்ட பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர்ச்சுருக்கு, எரிச்சல், குத்தல், உடனே நிற்கும். நிச்சயமாய் 3-வேளையில் குணமாகும். தவறாது. புட்டி 1-க்கு விலை ரூ. 2—0—0.

### கெர்ப்ப எண்ணை

இது ஸ்திரீகள் சஞ்சீவி என்னலாம், மாதாந்தர வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை, இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பமுண்டாகும். மிக்க அனுபவமானது. புட்டி 1-க்கு. ரூ. 2—0—0.
பினாங்கு முதலிய அன்னிய தேசவாசிகள் ரூபாய் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்

**C. மலையப்பசாமி,** நித்தியானந்த வைத்தியசாலை,
பழனி S. I.






# ஜீவாம்ருதம்.

வைத்யரத்ன பண்டிட் கோபாலாச்சார்லு அவர்களால் சிறந்த மூலிகைகளினின்றும் கண்டுபிடிக்கப்பட்டு கால் நூற்றாண்டுகளாக உலகில் நிலவி வருவது. ஆரோக்கியம், தேஜஸ், வீரியம், பலம் முதலியவைகளைத் தன்னுள்ளடக்கிய தேவாம்ருத புட்டி என்பது மிகையா! மெலிந்த தேகிகளுக்கும், நோயாளிகளுக்கும் இது உண்மையில் ஒரு வரப்பிரசாதந்தான்.

இன்றே ஒரு புட்டிக்கு ஆர்டர் செய்து பாருங்கள்.

விலை ரூ. 3—4—0.

**ஆயுர்வேதாஸ்ரமம்.**

151 கோவிந்ப்ப நாயக்கன் தெரு,
தபாற் பெட்டி 287, சென்னை.


**பார்ப்பனர் உயர்ந்தவர் என்பதை மறந்துவிடு.**

5-ம் பக்கம் தொடர்ச்சி

அவ்விடங்களிலிருந்து வரக்கூடிய வருமானத்தையும் விடாமல் ஒரு அரசன்போல் வாழ்ந்து வந்தார். தமக்குப் பொருள் தருவதான இடங்களுக்கு அவர் பதிலுபகாரம் செய்வதே கிடையாது. ஆதலால் ஆலய விஷய சீர்திருத்த சம்பந்தமாக அதிகப்படியான சுயநலமற்ற தன்மையும், நம்பிக்கையும், அதிக உழைப்பும் ஏற்பட்டாலொழிய ஆலயங்களது நிலைமை திருந்தாது போலத் தோன்றிற்று. இப்படியே ஐரோப்பாக் கண்டத்திலும் ஆதியில் இங்கிலாந்திலிருந்த நிலைமைக் கொப்பவே, போதுமான பொதுநல உழைப்பு இல்லாமலும் போதுமான ஊக்கமில்லாமலும் போகவே போதுமான சீர்திருத்த நெறி வளர்ச்சி ஏற்படாமல் இருந்தது.

கடைசியாக பெயரான தாயுள்ள ஒரு துணிகரமான வேலைத்திட்டம் தொடங்கப் பட்டது. 1517 ஆம் ஆண்டில் மார்ட்டின் லூதர் என்றவர் பாவ மன்னிப்பு விற்பனையை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார். இவ்விற்பனை யின் விபரம் யாதென்றால், எவர்களெல்லாம் தாம் பாவஞ்செய்து விட்டதாகக் கருதிக் கொண்டார்களோ, அவர்களெல்லாம் தம் பாவம் நீங்கத் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டு, அப்பாவத்திற்குவருந்தப் படுவதாகச்செல்லி குருக்களுக்குஅவர்கேட்கும் பணம் கொடுத்து பாவமன்னிப்பு டிக்கட்டுகள் வாங்கிக் கொண்டால் பாவம் மன்னிக்கப் பட்டு போய்விட்டதாகக் கருத்து. இப்படியாகப் பாவ மன்னிப்பு டிக்கட்டுகள் பணம் கொடுத்தவர்களுக்கு மட்டும் ஏராளமாய் விற்கப்பட்டு வருவதைக் கண்ட லூதர் என்பவர் வெகு ஆத்திரம் கொண்டு அதைக் கண்டித்தார். பணம் செலுத்தினால் மட்டும் பாவம் போகு மென்ற மூடநம்பிக்கை கொண்டிருந்த ஜனங்களது தன்மையை மாற்ற அவர் புதுப் பாடம் கற்பித்தார். லூதரானவர் கற்பித்த தாவது.- மனிதர்கள் தமது சில செய்கைகளினாலும் வெளிக்குச் சரியென்று தோன்றிய காரியங்களை முடிப்பதனாலும் செந் நெறியில் நடந்தவர்களாகஆகிவிடமாட்டார்கள்; ஆனால், யதார்த்தமான கடவுள் நம்பிக்கையும் யதார்த்தமாக முழுமனதுடன் நல்லொழுக்கத்தில் நடப்பதுமே புண்ணிய நெறியாகும் என்பது.

பத்தாவது லீயோஎன்ற ஒருபெரிய மதகுருவானவர் லூதரின் உபதேசத்தை எதிர்த்தார். இப்பெரிய ஆச்சாரியின் அதிக வித்தையையும் லூதர் எதிர்த்து, மற்ற குருமார்களின் அதிகாரத்தையும் ஒழிக்குமாறு திறமுடன் கண்டித்தார். இச்செயல்தான் சீர்திருத்தத்தை உண்மையில் தொடங்க வைத்ததாகும். சில ஆண்டுகளில் லூதர் பெரியஆச்சாரியின் அதிகாரத்திற்கும் ஆதிக்கத்திற்கும் விரோதமாகக் கிளம்பும்படிக்கும்மத்தியகால சட்ட திட்ட முறைகளைப் புறக்கணிக்கும்படிக்கும் வடஜர்மனிக்குப்போதித்தார். தம்மனதில் தோன்றியதை அப்படியேவெள்ளையாகப் பேசுவதும்,கடுமையாய்க்கண்டிப்பதும் பண்டைய மூடநம்பிக்கையையும் பழக்கவழக்கங்களையும் நிலைமையையும் வெறுத்துரைப்பதுமான அவரது புரட்சிக் கொள்கைகளும், முதலில அவரைபயமுறுத்துபவையாகவும் பழி சுமத்துவபவையாகவும்இருந்தன.ஆனாலும்,அவர்மேற் கொண்ட சொந்த முயற்சியும் உறுதியும் அஞ்சாமையும் எல்லாக் கேடுகளையும் சட்டென்று அடித்துக்கொண்டு போயது. லூதரது மார்க்கம் மட்டும்தான் சரியாக வகுக்கப்பட்ட மார்க்கம். அவரது கொள்கைகளும் உணர்வும் எங்கும் பரவின. அவரைப் பின்பற்றியவர்களை எவரும் அடக்கவும் முடியவில்லை.

லூதரது சீர்திருத்தக் கொள்கைகளுக்கு ஒத்தாற்போல, அல்ரிச் ஸ்விங்கிள் என்பவர் ஸ்விட்ஸர்லாண்டு தேசத்தினரிடத்தில் நூதனக் கொள்கைகளைப் பரப்பிக் கொண்டிருந்தார். பிரான்சு தேசத்திலுள்ள ஜான் கால்வின் என்னும் பிரான்சுக்காரர் இவ் இருவரையும்போல் பிரான்சு தேசத்துக்கும் பிரான்சு தேச ஜனங்களுக்கும் ஊழியம் செய்தார். இந்தத் தலைவர்களெல்லாம் பழய ஆலய முறைகளுடன் யாதொரு சம்பந்தமும் வைத்துக்கொள்ள மறுத்துவிட்டார்கள். அவர் தமது கொள்கைக் கேற்கச் சொந்த ஆலயங்களை வைத்துக்கொண்டார்கள் இந்தச் சீர்திருத்த முறைகளினாலேயே மத்திய கால வழக்கங்கள் ஒழிந்தன.இதுமுதல்தற்காலத்தியபராந்தநோக்கம் வேர் ஊன்ற ஆரம்பித்துவிட்டது. ஆனால் பழைய கொள்கைகளைப் பின்பற்றியவர்கட்கும் புதுக் கொள்கைகளைப் பின் பற்றியவர்கட்கும் கலக்கமும் சச்சரவும் மனஸ்தாபமும் ஏற்பட்டது. மக்கள் சில சமயம், பழைய காலம் மீளவும் வரப் போகிறதாஎன்று பெரு மூச்சும் விட்டனர்

லூதரானவர், தலைமையான குருவையும், பழய ஆலயத் தடைத் திட்டங்களையுங்கண்டிக்கத்தொடங்கியவுடன் இங்கிலாந்திலுள்ள ஜனங்கள் அவருடைய தைரியத்தைக் கண்டு பிரமித்தனர். மெதுவு மெதுவாக, இங்கிலாந்திலிருந்து கல்வியறிவுள்ள இளைஞர்கள் ஜர்மனிக்குச் சென்றார்கள். லூதரது கொள்கைகளை யெல்லாம் அப்படியே பாடமாகக்கற்றுக் கொண்டார்கள். இவர்களில் முக்கியமான வில்லியம் டிண்டால் 1525-ஆம் ஆண்டில் கிறிஸ்துவ வேதப் புதிய சங்கிதை ஒன்றை ஆங்கிலத்தில் பிரசுரித்தார். அடுத்தசங்கிலை யெல்லாம் ஆலயக்காரர், அகப்பட அகப்படக் கொளுத்திவிட்டார்கள்; புதிய கொள்கைக்காரர்கள் மட்டும் அவற்றை வாங்கி வாங்கி ஆவலுடன் படித்தனர். உல்ஸி யென்ற அமைச்சரது காலம் முடிவுற்றவுடன் பார்லிமெண்டானது கூடியது. அது 1529-ஆம் ஆண்டுமுதல், 1536-ஆம் ஆண்டு வரையில் அமர்ந்தது. அது கலைந்து விடுமுன்பு, மன்னனை மத்தியகாலப் பழக்க வழக்கங்களைக் கைவிடும்படி செய்தது. ஆலயக் குருமார்கள் மட்டுந்தான் எதிர்த்து நின்றனர். ஆனால் மன்னன் ஆலயக்காரர் குருமார்வகையறாவைப் பயமுறுத்தக் கூடிய சில சீர்திருத்தங்களைப் பார்லியமெண்டின் உதவியால் செய்து முடித்தார். அவர் தம்மை இங்கிலீஷ் ஆலயச் சர்வாதிகாரியாக [Supreme Head Of The Church] எல்லா ஆலய குருமார்களும் ஒப்புக் கொள்ளும்படிசெய்தார்.

[தொடரும்.]

## பார்ப்பனியமின்றி புதுமனைபுகுதல்

டகுச்சேரி முத்தியாலுப்பேட்டையில் வசிக்கும் சைவாசுவியாபாரம் பட்டாவைத்யலிங்கசெட்டியார்குமாரர் கந்தசாமிசெட்டியார் புதிதாய் அமைக்கப்பட்ட தமது இல்லத்துக்கு இன்றுகாலை 6 மணிக்கு பார்ப்பன ரையில்லாமல் சுயமரியாதையுள்ள பந்து மித்திரர்களுடன் வகி யேழைகளுக்கு அன்னம் படைத்தார்கள். கே. சுந்தாராசுலு


உலகப்பிரசித்தியும் அநேக தங்க மெடல்களும் நற்சாக்ஷிகளும் பரிசும்பெற்ற டாக்டர் எஸ். பி மருந்துகள்.




12 GOLD MEDAL
TO
Dr. S. PALANIYAPPA MUDALI.

# அமிர்தம்.

குடலைப்பற்றிய எல்லாவித வியாதிகளையும் போக்கும் தேவாமிர்தம்.

பித்தத்தால் ஏற்பட்ட வியாதிகள், காச வியாதிகள், குன்ம வியாதிகள், மலச்சிக்கல் வியாதிகள், மூல வியாதிகள், வெட்டை வியாதிகள் முதல் சகல வியாதியையும் போக்கி அனுருடம் கிரமமாய் மலப்பிரவர்த்தி செய்து தேகத்தை தங்க மயமாக வைத்திருக்கும தேவ ஔஷதம். விபரம் கேட்லாக் பார்க்கவும்.

24 நாள் உபயோக 1 சேர் டின் ரூ. 2—0—0. வி. பி. வேறு.

# தங்கரேக் குளிகை

## தாதுபுஷ்டிக்கு நிகரற்ற மருந்து.

இந்த உயர்ந்த அபரஞ்சித தங்கரேக், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை சேர்த்து செய்தது. உடைந்த தாதை கட்டி நீடித்த போக சக்தியும் காம்புக்கு முறுக்கையும் கொடுக்கக் கூடியது. 100 மாத்திரை ரூ. 15—0—0. 50 மாத்திரை ரூ 8—8—0. வி. பி. வேறு.

**தண்டபாணி வைத்தியசாலை,**

292, சைனுபஜார், மதராஸ்,

## பத்தமடை சுயமரியாதைத் திருமணம்,

திருநெல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரம் தாலூகா பத்தமடைக்கிராமத்தில் திரு அச்சந்தவிர்த்தபிள்ளை மகன் திருவளர்செல்வன் பூமிநாதபிள்ளைக்கும் கருங்குளம் சிதம்பரம்பிள்ளையவர்கள் மகள் திருவளர்செல்வி பிரமுஅம்மாளுக்கும் பத்தமடை யூனியன்போர்டு பிரசிடெண்டு திருவாளர் முத்துசுவாமிபிள்ளையவர்கள் வீட்டில் பார்ப்பனீயத்தை யறவேயொழித்து சைவஆசாரியரைக்கொண்டு தமிழ்த்திருமணம் மெய்கண்டான் யாண்டு எளரு ஆவணித்திங்கள் 14-ம்நாள் செவ்வனே நடைபெற்றது. பி. எம். சாமி

## சிக்கல் பொருள்வைத்த சேரி, செங்குந்தர் மகாஜன சங்கம்

ஷ சங்கத்தின் ஆதரவில் சங்கக் காரியதரிசியும் வாலிபர்சங்கத் தலைவரும் நாகை தொழிலாளர் சங்க மாஜி உப தலைவரும் பிரபல சுயமரியாதை வீரருமான உயர்திரு, சொ. ச. கந்தசாமி முதலியாரவர்கள் குடும்பத்தோடு வலங்கிமானுக்கு செல்லுகிறபடியால் 28-8-28ல் மாலை ஓர் பிரிவு உபசாரப்பத்திரமும் தேயிலைபானமும் வெகு சிறப்பாய் நடந்தேறியது. நா. நாகப்பன்

## கோட்டார் சுயமரியாதைத் திருமணம்.

கோட்டார் பிரபல வியாபாரியும் முனிசீப்பல் கௌன்சிலரும் ஆகிய ஸ்ரீமான் கே. பெருமாள் பணிக்கர் அவர்கள் வழக்கமாக நடாத்திவரும் பிராமணப்புரோகிதத்தை ஒழித்து தம் குலப்பெரியாரால் 1104 ஆண்டு ஆவணி-மீ 14 தேதி தமது "கிருஷ்ண விலாசம்" இல்லத்தில் தம் புதல்வி திருவளர் செல்விஔவையாரம்மாளை பூதப்பாண்டி ஸ்ரீமான் குமாரசுவாமி பணிக்கர் புதல்வன் திருவளர் செல்வன் பூதலிங்கம் அவர்களுக்கு மணஞ்செய்து கொடுத்தார். இ. இராமசாமி.


80—வருஷகாலமாக உலகப் பிரசித்திபெற்ற;

**ஆசல் ஷண்முகம் பட்டணம் பொடி**

(தபால் சார்ஜ் உள்பட) 24-தோலா ரூ. 1—6—0. 30-தோலா ரூ. 1—10—0. 60-தோலா ரூ. 2—6—0.

ஆர். கே. பரிமள மூக்குத்தூள் புட்டி அணா 4. டஜன் ரூ. 2—4—0.

**ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட்,** தபால் பெட்டி 140, **சென்னை.**



ஆபரேஷன் இல்லை! மறுபடியும் வியாதி உற்பத்தியாவதில்லை! பத்தியமில்லை!

**ராஜ வைத்திய ஆஸ்ரமம், செவ்வாய்ப்பேட்டை, சேலம்.**

சுவாசகாசம், நீடித்த ஜுரம், மூல வியாதி, ராஜ பிளவை, கைகால் பிடிப்பு, மேகசூலை, கருமேகம் குஷ்டம், கண்டமாலை, குடைவாளை, பவுத்திரம், வாய்வு, ரத்த மூளைமூலம், கிரந்தி வெள்ளை, நபுஞ்சகம், தாது நஷ்டம், புரை ஆருத நீடித்த ரணங்கள் முதலிய சகல வியாதிகளும் சித்த ஔஷதங்களால் சவுக்கியம் செய்யப்படும்.

வியாதியஸ்தர்கள் நேரில் வந்தாகிலும் வரவழைத்தாகிலும் சௌக்கிய மடையலாம்.

*V. P.* யில் வியாதிகளுக்கு தக்க மருத்துகளும் அனுப்பப்படும்.

அநேக நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்கப் பதக்கங்களும் கொடுத்தவர்களில் முக்கியமான சில கனவான்களின் பெயர்.

மகா-௱-ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி செட்டியார் அவர்கள், துபாஷ், புதுச்சேரி
" பி. திருவடியா பிள்ளை அவர்கள், ஏஜண்டு, ராலி அண்டு பிரதர்ஸ், புதுச்சேரி
" எ. ராமசாமி கவுண்டர் அவர்கள், எம். ஏ., எல். டி., பிரின்சிபால், முனிசிபால் காலேஜ், சேலம்
" பி. வெங்கட்டரமண அய்யர், பி. ஏ. டிஸ்டிரிக்ட் பாரஸ்டு அபீசர், சேலம்
" கே. ஆர். சுப்பிரமணிய அய்யரவர்கள், டிப்டி கலெக்டர், ஈரோடு.
" கே. வி. சுப்பிரமணிய அய்யரவர்கள், மில்டரி அகவுண்ட் டிப்டி அசிஸ்டெண்டு கண்ட்ரோலர் ஆபீசர், பெங்களூர்
" வி ராமசாமி ஐயங்கார் ரிடயர்டு தாலூகா சிரஸ்தார் நாமக்கல்
" வி. எ. சிலுவைமுத்து ஆசாரி, மெகானிக், வெரைட்டி ஹால் கோயமுத்தூர்
" டி. எஸ். எஸ். அய்யர் அவர்கள், சப்-ஜட்ஜி, சேலம்.
" ராவ் பகதூர் லேட் டி சுப்பிரமணிய அய்யர் அவர்கள், பி. ஏ., பி. எல்., ஹைகோர்ட்டு வக்கீல், சேலம்
" கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள், பிராசிகூடிங் சப் இன்ஸ்பெக்டர், சேலம்
" எஸ். ராமச்சந்திர அய்யர் அவர்கள், எட் கிளார்க், டிப்டி கலக்டர் ஆபீஸ் சேலம்
" டி. எஸ். சீதாராமய்யர், ரிடையர்டு வாக்சினேஷன் டிப்டி இன்ஸ்பெக்டர், சேலம்
" எஸ். டி. நவலடி ராமய்யர் அவர்கள், பி. ஏ., பி. எல்., ஹைகோர்ட்டு வக்கீல், சேலம்
" எம். ராமச்சந்திர செட்டியார் அவர்கள், ஆனரரி 1-வது கிளாஸ் ஸ்பெஷல் மாஜிஸ்ட்ரேட், செவ்வாய்ப்பேட்டை, சேலம்

மகா-௱-ஸ்ரீ சோலைமுத்து உடையார் ரிஜிஸ்ட்ரார் நாமகிரிப்பேட்டை
" ஜி டிக்ரோஸ் துரையவர்கள் C X R சேலம் ஜங்ஷன்
" டி எ குருமூர்த்தி நாயுடு பி எ, பி எல், ஹைகோர்ட் வக்கீல், செய்வாய்பேட்டை, சேலம்
" கே ஆர் சுப்பரமணிய அய்யர் அவர்கள் பி எ, பஸ்டு கிரேட் பிளீடர், சேலம்
" சிவபெருமாள் பிள்ளை அவர்கள், தாலூகா போர்டு மெம்பர், சேலம்
" எம் புனிதவேலு முதலியார் அவர்கள் பி எ, பி எல், ஐக்கோர்ட்டு வக்கீல்' மதராஸ்
" எம் சிங்காரவேலு, எம் எ எல் டி, எட்மாஸ்டர் குடியாத்தம்
" ஜி எல் ஸ்பெக்ஸ் துரையவர்கள், கர்னடிக் மில், மதராஸ்
" சுவைன் துரையவர்கள், போலீஸ் இன்ஸ்பெக்டர், மதராஸ்-
" டி டிசல்வா துரை யவர்கள், பாங்கு, மதராஸ்
" எம் பென்னையா முதலியார், மிராசுதார், மைலாப்பூர் மதராஸ்
" எ ஜானகிராம முதலியார் சூபரென்டெண்டு அகவுண்டெண்டுஜனரல் ஆபீஸ் மதராஸ்
" டி எஸ் கணபதி பிள்ளை முனிசிபல் கவுன்சிலர் செவ்வாய்பேட்டை சேலம்
" எம் என் லக்ஷிமிநரசிம்ம செட்டியார் மலிகை முனிசிபல் கவுன்சிலர் செவ்வாய்பேட்டை சேலம்
" கந்தசாமி முதலியார் அவர்கள் மூங்கில் மண்டி திருவண்ணாமலை

3ம் பக்கத் தொடர்ச்சி

த்தி விட்டார் என்று சொன்ன பண்டிதரும் என்னைக் கோபிக்கலாம். அறுபத்து மூன்று நாயன்மார் கூட்டத்தில் தானும் ஒரு நாயனாராக விளங்கும் விறல்மிண்ட நாயனாருக்கு என்னை எப்படிக்கசக்கும். அவருக்கு மோட்சம் கொடுத்த சிவபெருமான் எனக்கு மோட்சம் கொடுக்காவிட்டாலும் நரகம் எந்தவிதத்திலும் கொடுக்கமாட்டார் என்பது நிச்சயமே.

மூன்று வட்டி எழுதி அதை வட்டிக்கு வட்டியாகக் கூட்டி ஏறியவட்டிக்கெல்லாம் எந்த வழியாகவாவது வசூல் செய்து பண வட்டத்திற்கும் பத்திரக் கூலிக்கும் பற்றிக்கொண்ட பணமும் சுவாமிக்கு மகிமை எடுத்த பணமும் கூட்டி ஏறிய பணத்திற்கு கோவில் கட்டி கும்பாபிஷேகம் செய்துவிட்டால் சிவலோகம் சொந்தமென்று நினைப்பதுவும், எவ்வளவு பணமிருந்தாலும் பின்னும் தன்னால் சம்பாதித்துக் குவித்தாலும் எங்காவது ஒரு கோவில் கட்டிவிட்டால் தன் வாழ்நாளில் பணத்தால் செய்யவேண்டிய கடமை எல்லாம் தீர்ந்து புண்ணியலோகமே கிடைக்குமென்று நினைப்பதும் சைவ மடாதிபதிகள் கல்விக்கும் மத ஒழுக்க அபிவிருத்திக்கும் மடத்துப் பணம் ஏற்பட்டிருக்க அதற்குச் செலவு செய்யாமல் உற்சவமென்றும் அதற்கு சங்கீத சதுர்க் கச்சேரியென்றும் பரிசென்றும் இவை முதலிய ஆடம்பரங்களில் கடவுள் பேரைக்காட்டிச் செலவுசெய்து சுந்தரருக்கு அனுகூலித்த சிவபெருமானுக்கு நாம் செய்வது தப்பாகாது என்பது போல தாசிகள் சமேதர்களாக விருப்பதற்கும் நம் பெரியதெய்வங்கள் குடியிருக்கும் கோவில்களையுடைய ஊர்களில் விருந்துவரும் பெண்களுக்கு மடாதிபதிகள் தெரிசனம் கொடுப்பதும் மேற்சொன்ன கதைகளின் படிப்பால்வந்த ஒழுக்கமென்றுசொன்னால் என் பொருந்தாது.

பண்டிதர்களும் உயிருக்கு உபயோகப்படும் என்றுநினைக்கும் இந்தக்கதையோடு தம்பிள்ளைகளை நிறுத்திவிடப் பிரியப்படுவதில்லை. தம்மக்களும் படித்து பாஸ்பண்ணி பலதொழில்கற்று உலக போக போக்கியங்களை பெருமையோடு அனுபவிக்கவே விரும்புகிறார்கள். குண்டடிபட்ட சமயத்திலும் தன்கடமையை சரியாகச்செய்து கீழே விழுந்துகிடந்த தனக்குக் கொண்டுவந்த தண்ணீரைத்தன்னிலும் எவ்வளவோதாழ்ந்து அடிபட்டுக் கிடக்கும்சோல்ஜருக்கு கொடுக்கச்சொன்ன இங்கிலீஸ் கப்பற் சேனாதிபதி நெல்சன் கதையும், பூட்ஸ்தேய்ந்து கால்விரல்கள் வெளியேதெரிய, மறு பூட்ஸ் வாங்க சக்தியில்லாமலிருந்த ஜான்சனின் கஷ்டத்தைத்தெரிந்த ஒருவன் ஒரு ஜதை பூட்ஸ் செய்து அவனின் சன்னலில் அவனுக்குத் தெரியாமல்வைக்க அதைக்கண்டு பூடுவை எடுத்தெறிந்த இலக்கண வித்துவான் டாக்டர் ஜான்சனின் கதையும் இதைப்போன்ற கதைகளையும் இங்கிலீஸ் வாத்தியார் கிளாசில் சொல்லவந்தால் பையன்கள் பொறுமையோடு கேட்கிறார்கள். நமது பண்டிதர்கள் மகாபக்த சிரேஷ்டரான குசேலருடைய கதையை எடுத்துக்கொண்டு போனாலும் சத்தம்தான்; கேள்விதான்; தர்க்கம்தான். சொல்ல ஆரம்பிக்கையிலேயே சார்! "குசேலருக்கு இருபத்தேழுபிள்ளைகள் என்றீரே, பத்து பிள்ளைகளுக்காவது போதுமானவயது வந்திருக்குமே, ஒரு தொழிலும் சொல்லிக்கொடுக்கவில்லையா? கிருஷ்ணனைக் கும்பிட்டுப்பட்டினியாகக்கிடக்கவா பிள்ளைகள் படித்தது? கிருஷ்ண அவதாரத்தில் அவர் உபதேசம் கீதையல்லவா? அவனவன் கடமையைச்செய்யவேண்டுமென்று கீதை சொல்லுகிறது. வருடம் ஒருபிள்ளை பெற்றுக்கொள், பட்டினியாய்க்கிடவுங்கள், பிச்சையெடுங்கள், என்று அவர் உபதேசம் எந்தக்கீதையிலுமில்லையே. இவரைப்போல இன்னும் எத்தனைபேர்கள் இருந்திருப்பார்கள் ஒரு குசேலருக்குத்தானே கிருஷ்ணன் பணம் கொடுத்ததாக விருக்கிறது. மற்றவர்களெல்லாம் அழிந்துதானே போகவேண்டும். இந்தக்கதைகளினால்தான் பிச்சையெடுக்கும் தொழிலில் பெருமையாம். பிச்சைக்குவரும் எல்லாரும் குசேலராக நடிப்பதும் அதற்காக சாமிபேரைக் காட்டுவதும் நம்தேசத்தில் மலிந்து நாடுபாழாகிறது. இந்தக் கதைகளால் எங்களுக்கு என்னபிரயோஜனம்.


கிலிட்டு நகை அசல் தங்க நகை யாகுமா?

அதுபோல

**சந்துகள்தோறும் ஷண்முகம்**

என்னும் பெயரால் பொடிக் கம்பெனிகள் இருப்பினும்

# றெட்டூர் - ஷண்முகம்

## பொடிக் களஞ்சியம் ஆகுமா?

---

ஐம்பது வருஷங்களாகப் புகையிலை தோட்டமும் பொடியின் கை பாகமும், செய் பாகமும் உள்ளபடி அறிந்தவரும் ஆதி புருஷர் றெட்டூர் ஷண்முக முதலியா ருடைய குமாருமாகிய றெட்டூர் காசி விஸ்வநாத முதலியார் நேரில் நடத்திவரும் பொடிக் களஞ்சியம் சிரேஷ்டமா? அல்லது அவருடைய பெயரை மாத்திரம் வைத்துக்கொண்டு அவருடைய சம்பந்தம்யாதுமில்லாத பொடிக் கம்பெனிகள் சிரேஷ்டமா?

### அன்றியும்

றெட்டூர் காசி விஸ்வநாத முதலியாருக்குச் சொந்தமாய்ப் பெரிய புகையிலை மண்டி யிருப்பதால் உயர்ந்த நிஜமாப் புகையிலையைப் பொறுக்கி எடுத்துப் பழுதான இலைகளை அடியோடே நீக்கி நல்ல சரக்கைக் கொண்டே பொடி செய்ய அவருக்குச் சாத்தியப்படும். அப்போதைக் கப்போது கில்லரையில் புகையிலை வாங்கிப் பொடி செய்பவர்கள் அவரைப்போல் உயர்தரப் பொடி செய்வதற்கு எங்கே போவார்கள். ஆகையால் அறிவாளிகள் கிலிட்டுப் பேரினால் மோசம் போகாமல் அசல் றெட்டூர் ஷண்முகம் பொடியை அடியிற் கண்ட கம்பெனியில் வாங்கி அனுபவிப்பார்கள் என்பது எமது பிரார்த்தனை.

குறிப்பு:— தபால் பெட்டி 140 ஷண்முகம் பொடிக் கடை லிமிடெட் கம்பெனியிலிருந்து நான் விலகி விட்டேன்.

எமது பொடிக்கு ஏஜென்ஸி வேண்டுபவர்கள் அடியிற் கண்ட விலாசத்திற்கு எழுதிக் கொள்ளலாம்.

றெட்டூர் - காசி விஸ்வநாத முதலியார்,
றெட்டூர் ஷண்முகம் பொடிக் களஞ்சியம்,
தபால் பெட்டி 156, சென்னை.



## திருப்பூர் ஜெனரல் நிட்டிங் பாக்டரி.

இந்தியாவிலே குறைந்த விலையுள்ள பனியன்கள் எங்களிடம்தான் கிடைக்கும். விலை 32 இஞ்சு கார்டிகன் டஜன் 1-க்கு ரூபா 3—8—0 தான்.
இன்னும் பலவிதமான பனியன் தினுசுகளும் கிடைக்கும்.
விலைவிபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.
எல்லா இடங்களுக்கும் ஏஜெண்டுகள் தேவை.

The General Knitting Factory,
TIRUPUR. (S. India.)


### பார்ப்பன புரோகிதம் ஒழிந்ததிதி.

திரிசிரபுரம் சின்னக்கடை கிலேதார் தெருவில் பிரபல அரசலூர் மிராசுதார் திரு நடேசம்பிள்ளை அவர்கள் 29--8-28 தேதி தம் ஆருயிர் தந்தையின் ஆண்டு நிறைவிழாவை பிராமணரில்லாது நண்பர்களுக்கும் பல ஏழைகளுக்கும் அதிவிமரிசையாக விருந்திட்டு இனிது முடித்தார்.

64 — பக்கம் — 64

# ஆனந்த விகடன்

இதுகாறும் 48 பக்கம் விஷயங்களுடன் வெளிவந்த ஆனந்த விகடன் இந்த ஆவணி மாதம் முதல் 64 பக்கங்களுடனும் ஏராளமான படங்களுடனும் வெளிவரும் என்பதை சந்தா நேயர்களுக்கு வெகு சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். சிறந்த எழுத்தாளரிடமிருந்து கட்டுரைகள் அதிகமாக வெளியிடப்படுகின்றன. தினமும் நூற்றுக்கணக்கானவர் சந்தாதாராகச் சேருகின்றனர். மாதப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் "ஆநந்த விகடன்" சிறந்ததென்ற அபிப்பிராயம் ஜனங்கள் மனதில் நன்கு பதிந்திருக்கிறது. "ஆனந்த விகட"னிலுள்ள ஒரு பக்கத்திக்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று ஒரு சந்தா நேயர் நமக்கு எழுதியுள்ளார். நீங்கள் ஒரு வருஷத்திக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

வருட சந்தா :— இந்தியா, பர்மா, ஸிலோனுக்கு
தபால் கூலியுள்பட 1...0...0
வெளி நாடுகளுக்கு முன் பணம் ரூ 1...4...0

மாதிரி காபி இனாம்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,
244. தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:—"விகடன்", டேலிபோன் நே. 3311.

ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

## மன்மத ஸ்தம்பன குளிகை.


குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம், ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி., மதராஸ்.

கவனியுங்கள்! நல்ல லாபம்!

## PHOTO HAND CAMERA



ரொம்பவும் குறைந்த விலை ரூபா. 2—15—0

நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. எக்காலத்திலும் தெளிவான போட்டோபிடிக்கலாம். இந்த காமிராவை வாங்கி நூறு நூறாகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். போட்டோவின் அளவு $3\frac{1}{2} \times 2\frac{1}{2}$ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூ. 2—15—0 குக் கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

கானடியன் வாட்சு பீபிள், ஜி. டி. மதராஸ்

## அறிவிப்பு.

"குடி அரசு" வாரப் பத்திரிகையின் மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

வருட சந்தா உள் நாட்டுக்கு ரூபாய் மூன்று தான்.

வெளி நாடுகளுக்கு ரூபாய் நான்கு.

மானேஜர்.

## அறிக்கை.


எங்களிடம் பிரான்ஸி நல்ல ரங்குள்ள வெள்ளி ஜரிகை மார்க்குகளும், பம்பாய் சூரத் வாலட்டி மேல் கண்ட மார்க்குகளும், சூரத் மார்க்குகளும் கைவசமிருக்கிறது. உள்ளூர் ஜவுளி தினுசுகளும் இருக்கிறது. விலைஜாப்தா வேண்டியவர் எழுதினால் அனுப்பித்தருகிறோம்.

சி. லிங்கி செட்டி,
எஸ். வெங்கிட்டராம செட்டி,
ஜவுளி அண்டு ஜரிகை வியாபாரம்,
கோயமுத்தூர்.

## முந்துங்கள்!

விலை ரூ. 3-8-0 தான் ரூ. 3-8-0 தான்

110 சாமன்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி



சாமான்களின் விவரம்.

18 காரட் ரோல்டு கோல்டு அழகிய கிப்புள்ள பவுண்டன் பேனா 1; 18 காரட் ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; டை சர்ட் பொத்தான்கள் செட் 12; டை கல்விளைந்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான முகம் பார்க்கும் கண்ணாடி 1; அழகிய தந்த சீப்பு 1; மடிப்புள்ள கத்தி 1; கோர்த்தியால கத்தி 1; காம்பினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலரக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த கிப்புகள் 12; மணிபர்ஸ் 1; ஜெர்மன் இங்கி புட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸபர் படங்கள் 12; அழகிய பலரக சேப்டி பின்கள் 25; ஆக 110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு 3—8—0. P. K. மூர்த்தி கம்பெனி

தபால் பெட்டி 119, மதராஸ்.

## பொருள் செய்வகை.

(விலை ரூபாய் ஒன்று).

அநேக வியாபார தந்திரங்கள் அடங்கியிருக்கின்றன. தினுசுகள் விலையேறுவதும் இறங்குவதும் அறிவதற்கு தமிழில் முதல் புஸ்தகம் இதுவே. ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம்.

தேவி ஆஸ்ரமம்.
திரௌபதை அம்மன் கோவில் வீதி,
புதுச்சேரி.

# ஹிப்னுடிசம், மெஸ்மெரிஸம்.

முதலிய அரிய அற்புதங்களைக் கற்கவேண்டுமானல்,
சுய மரியாதைப் பெற வேண்டுமானல்,

## ஜீவ வசிய மஹாரஹஸ்யம்

என்னும் மனே வசிய ஜீவ வசிய நூலைப் படித்து
பயனடையுங்கள்.



### இதிலடங்கிய விஷயங்கள் :—

I முதற பாகம் :—(II பாடங்கள்)
முன்னுரை.
1 மானிட வசியம்
2 தன்னம்பிக்கைப் பயற்சி
3 தன்னுட்சி
4 இருவகை மனம்
5 சுய மந்திரம்
6 மஹா ரகஸ்யம்
7 பிராணயாமம் (படங்களுடன்.)
8 வியாகூலமும், வீண்திகிலும்
9 அயர்ந்த நித்திரை
10 மன வோர்மை
11 முக்கிய குறிப்பு

II இரண்டாம் பாகம் :—(7-பாடங்கள்.)
1 தெவிபதி or மானஸ தந்தி
2 மானஸ தந்தியின் முதல் அப்பியாசம்
3 மானஸ தந்தியின் இரண்டாவது அப்பியாசம்
4 மானஸ தந்தியின் மூன்றாவது அப்பியாசம்
5 மானஸ தந்தியின் நான்காவது அப்பியாசம்
6 மானஸ தந்தியின் ஐந்தாவ அப்பியாசம்
7 பொதுக் குறிப்பு

III மூன்றும் பாகம் :—(12-பாடங்கள்.)
1 கோரிய பெண்ணை மண முடிப்பது
2 மணமகன், மணமகளுடைய காதல் விருத்தி
3 ஸ்திரீகளிடத்தில் கௌரவம் பெறுதல்
4 ஸ்திரீ புருஷனுடைய ஊடலை ஒழித்தல்
5 நண்பரின் இழந்த நேசத்தைப் பெறுதல்
6 பதமற்ற குழந்தையைப் பக்குவப் படுத்தல்
7 கல்யாணத்திற்கு ஏற்பாடான மணப்பெண்ணின் காதலைப் பெற
8 மனமில்லா மணத்தை மகிழ்வு பெறச் செய்தல்
9 உருக்கமற்ற உறவினரின் உருக்கத்தைப் பெறுதல்
10 மேலதிகாரியின் விருப்பத்தைப் பெறுதல்
11 உலகத்தில் முதன்மைபெற
12 நட்பை உறுதிப்படுத்தல்

அனுபந்தம்—1

மானிட வசிய ரஹஸ்யம்.
மானிட வசிய ரஹஸ்யத்தின் பீடிகை
மானிட வசியம், தன்னடக்கம் வியாதிகளை விலக்கிக் கொள்ளல் அப்பியாசம், மந்திரம்

அனுபந்தம்—2

அற்புதானந்த ரஹஸ்யம்
அல்லது
சில அபூர்வ மர்மங்கள்

பிராணயாமத்தால் வசீகர வசியம் பெறுவ தெப்படி?

இரகசிய முறையால் எளிதில் அரிய பொருள் சம்பாதிப்ப தெப்படி?

ஒரு சாதாரண யோக சாதனையால் எல்லா விருப்பங்களையும் பெற்றுக்கொள்வ தெப்படி?

எப்படிப்பட்டவர் கூட்டத்திலும் இணையில்லாக் கண்ணியம் பெறுவ தெப்படி?

நட்சத்திர உதவியால் எல்லாக் காரியங்களிலும் வெற்றி பெற்று எல்லாவித இடையூறுகளையும் தாண்டிக்கொண்டு அப்பாற் சென்று அளவிறந்த வெற்றி பெறுவதெப்படி?

முதிர்ந்த வயதிலும் வாலிபதசையை வளர்ப்ப தெப்படி?

கண் பார்வையையும், கறு ரோமத்தையும், வெண் தந்தங்களையும் காப்பாற்றிக் கொள்வ தெப்படி?

பிராணயாமம் முதலியவற்றால் பூரணச் சுகத்தை நிலைப்படுத்திக் கொள்வ தெப்படி?

இருவித ஆன்மப் பயற்சியால் எல்லா நோய்களையும் கண்டிப்ப தெப்படி?

பிளேக், விஷ ஜுரம் ஆகியவற்றைத் தடுத்துக் கொள்வ தெப்படி?

வைசூரியும், வாந்தி பேதியும் வாராமல் தடுப்ப தெப்படி?

மரணம் வருமுன் அதை அறிந்து கொள்வ தெப்படி?

மரண காலத்தில் செய்யப்படும் ஒருவகைக் கிரியையால் மரணத்திக்குப் பின் மக மேலான உன்னத ஸ்தானத்தைத் பெறுவ தெப்படி?

சாதாரணப் பிராணயாமத்தால் உங்களுடைய பகைவரை நண்பராகச் செய்து கொள்வ தெப்படி?

மனே சக்தியை அனாயசமாக விருத்தி செய்து கொள்வ தெப்படி?

ஜியூஜிட்ஸு முறைப்படி மரித்தோரை எழுப்புவ தெப்படி?

நாகப் பாம்பின் விஷத்தைப் போக்குவ தெப்படி?

வில்வ வேரின் விநோதங்களென்ன?

புளி யேப்பத்தைத் தடுப்ப தெப்படி?

துளசியின் மகிமை என்ன?

நாயுருவியின் அதிசயம் யாது?

லவணத்தின் மகிமை என்ன?

இத்துடன் பல விநோத விடுகதைப் படங்களும் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

மேல் நாட்டில் 12 பவுன் (ரூ. 80) விலை மதிப்பிடக் கூடிய இப் புத்தகத்தை நம் ஏழை நாடாகிய இத்தமிழ் நாட்டின் கண் விலை ரூ. 3-க்கே விற்க துணிகின்றோம்.

புத்தகத்தை வாங்கிப் படிப்பவர்கள் ஒவ்வொரு பக்கத்தையும் ஒரு மூன்று ரூபாய் மதிப்பிடுவார்கள். என்பது நிச்சயம்.

உடனே உங்களுக்கோர் ஐசுவரியம் போன்ற இப்புத்தகத்தை வரவழையுங்கள்.

இதன் விலை ரூ. 3—0—0, தான் வி.பி. வேறு.

எல்லா புத்தக ஷாப்பிலும் கிடைக்கும்

ஒரே முறையில் ½ பிரதி வாங்குவோர்க்கு தபால் சார்ஜ் இனம்

**மனேஹராய் கம்பெனி,** தபால்பெட்டி 248, செ


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.